திருக்குர்ஆன்

தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்

செ. திவான்

திரு குர்ஆன் :
தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்

HOLY QURAN
TAMIL TRANSLATORS

செ. திவான் எம். ஏ., எம்ஃபில்.,
(வள்ளல் சீதக்காதி அறக்கட்டளையின்
முதல் பரிசு ரூ. 10,000 பெற்ற
'விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்' நூலாசிரியர்)

தொலைபேசி : 72665

சுஹைனா பதிப்பகம்
106 எப் 5, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை - 627 002.
நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்

முதற் பதிப்பு : மே 1995

உரிமை : ஆசிரியருக்கே

விலை : **பதினைந்து ரூபாய்**

அச்சிட்டோர் : ஹிலால் பிரஸ்
112, வடக்கு ரதவீதி,
திருநெல்வேலி-6

முகப்பு : ஓவியர் A. செல்வம்
வின்சென்ட் ஆர்ட்ஸ்
நெல்லை டவுண்

சமர்ப்பணம்

தமிழ் கூறும் நல்லுலகிற்கு இனிய எளிய தமிழ் நடையில் திருகுர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பையும் விரிவுரையையும் தந்திட்ட மார்க்க அறிஞர் பெரு மக்களுக்கும் திருகுர்ஆனே மனப்பாடமாக ஓதிடும் எனது தாத்தா செங்கோட்டை விசுவநாதபுரம்

காட்டுபாவா ராவுத்தர்—சாராள்பேகம்,

பூலாங்குடியிருப்பு

நாகூர்பிச்சைராவுத்தர்—திவானுபீவி,

தென்காசி

அப்துல் மஜீத் ராவுத்தர் - முகைதீன் பாத்திமாள் பீவி,

செங்கோட்டை

சாகுல்கமீது—ஸபியாள்பீவி
ஆகியோருக்கும் இந்நூல் சமர்ப்பணம்.

இவர்களுக்கு துவா செய்ய வேண்டுகிறோம்.

உள்ளுரை

இருபத்திமூன்று ஆண்டுகளில் இறங்கிய இறைவேதம்
உத்தமர்கள் ஒருங்கிணைத்த சத்தியத் திருவேதம்
விண்மறைக்கு விரிவுரை செய்தோர்
மெய்யான வேதத்தின் பிற மொழிபெயர்ப்புக்கள்
திருமறையின் தமிழ் மொழிபெயர்ப்புக்கள்
முடிவுரை

உள்ளே

அணிந்துரைகள் i—xxiv

மக்கள் தலைவர் வை. கோ.

சிராஜுல் மில்லத் A.K.A. அப்துஸ்ஸமது

சீரிய சிந்தனையாளர் A.K. ரிபாயி

மௌலவி மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி
(நூரிய்யி, பாஜில் பாகவி)

எண்ண அலைகள் 5

இருபத்தி மூன்று ஆண்டுகளில் இறங்கிய இறை வேதம் 9

உத்தமர்கள் ஒருங்கிணைத்த சத்தியத் திருமறை 17

விண்மறைக்கு விரிவுரை செய்தோர் 25

மெய்யான வேதத்தின் பிற மொழி பெயர்ப்புக்கள் 33

திருமறையின் தமிழ் மொழி பெயர்ப்புக்கள் 45

அரபுச் சொல் — தமிழ் விளக்கம். 98

சுவையான வரலாற்றுத் தொகுப்பு நூல்

இந்திய யூனியன் முஸ்லிம்லீக் பொதுச் செயலாளர்
தமிழ் மாநில முஸ்லிம்லீக் தலைவர் சிராஜுல் மில்லத்
மணிச்சுடர் ஆசிரியர்
அல்ஹாஜ் A.K.A. அப்துஸ்ஸமத் M.A. அவர்களின்

அணிந்துரை

அகிலங்களுக்கெல்லாம் அருட் கொடையாக - மனித சமுதாயத்திற்கு நேர்வழி காட்டியாக 1400 ஆண்டுகளுக்கு முன்னர் அரபு மொழியில் அல்லாஹ்வால் அருளப் பெற்றது திருகுர்ஆன்.

அரபு மொழியில் அருளப் பெற்றாலும், அதன் அற வுரைகள் நெறிமுறைகள் அனைத்து மாந்தர்களுக்கும்- மொழியினருக்கும் பொதுவானது.

திருகுர்ஆன் குறிப்பிடுவது போல, ஏற்கனவே மனித சமுதாயத்திற்கு அவரவரும் புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் இறைவனின் வேதங்கள் அருளப் பெற்றிருக் கின்றன.

அந்த நாள்வரை வேதம் அருளப் பெற்றிராத சமுதாயமாக விளங்கிய அரபுகளுக்கு இறைவன் அவன் தெரிந்து தேர்ந்து கொண்ட திருத்தூதர் அண்ணலெம் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக அவர்களுடைய மொழியிலேயே - அரபு மொழியில் திருகுர்ஆனை அருளிச் செய்தான்.

''நீங்கள் புரிந்து கொள்வதற்காக இந்தக் குர்ஆனை அரபு மொழியில் அருளிச் செய்தோம்'' என்று இறைவன் கூறுவதாக திருகுர்ஆன் எடுத்துரைக்கிறது.

அரபு நாடு பெற்ற நபிகளார் (ஸல்) அவர்கள் ஆண்ட வனிடமிருந்து பெற்ற முழு வேதம் அகிலத்தாருக்குப் பொதுவானது - அனைத்து மொழிகளுக்கும் உரியது.

எனவேதான், உலகத்தின் செம்மொழிகள் அனைத்திலும் இன்று திருகுர்ஆன் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிற பெருமையைப் பெற்றிருக்கிறது.

186 சுதந்திர நாடுகளைக் கொண்ட ஐக்கிய நாடுகள் மன்றத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகள் இஸ்லாமிய மக்களை பெரும்பான்மையாகக் கொண்டவை. மேலும், ஒரு நூறுக்கும் மேற்பட்ட நாடுகளில் இஸ்லாமியர் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர்.

அறுபதுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய நாடுகளில் 22 நாடுகளில் அரபு மொழி ஆட்சி மொழியாக இருக்கிறது என்றாலும் மற்ற எல்லா இஸ்லாமிய நாடுகளிலும் அந்த மொழி அறியப்பட்ட மொழியாக விளங்கி வருகிறது.

உலக முஸ்லிம்கள் ஒரு நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகள் பேசி வாழ்வோராயினும், திருகுர்ஆனை அதன் மூலமொழியாகிய அரபிலேயே ஓதி வருபவர்களாக இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்க உண்மையாகும்.

அரபி மொழியின் பொருள் அறியாதவர்களைக் கூட, அந்த மொழியில் இருக்கிற மிகச் சிறந்த இலக்கியமாக விளங்கக் கூடிய திருகுர்ஆனை அரபி மொழியிலேயே ஓதக் கூடிய தகுதி பெற்றவர்களாக ஆக்குவது அந்த வேதத்தின் அற்புத சாதனைகளில் ஒன்றாகும்.

அரபகத்தில் இருந்து இஸ்லாம் அடுத்துள்ள நிலப் பரப்புகளில் பரவப்பரவ அந்த வட்டாரங்களில் வழக்கில் இருந்த மொழிகளிலும் திருகுர்ஆனின் தாக்கம் ஏற்பட்டது.

அந்தந்த மொழிகளிலும் மொழியாக்கங்கள் உண்டாயின!

ஆரம்பமாக, இஸ்லாமிய வட்டத்திற்குள் வந்த பாரசீக மொழியில் திருகுர்ஆனின் முதல் மொழிபெயர்ப்பு வந்தது. இந்திய நாட்டில் வாழ்ந்த ஷா ஒலியுல்லாஹ் என்ற மேதை இதைச் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்களின் உற்ற தோழர்களில் ஒருவரான ஹலரத் ஸல்மான் (ரலி) அவர்கள் பாரசீக நாட்டைச் சார்ந்தவர்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருள் வேதம் அருளப்பெற்ற காலத்திலேயே அதைக் கேட்ட ஸல்மான் (ரலி) அவர்கள் அவ் வேதத்தின் சில வசனங்களை பாரசீக மொழியில் பெயர்த்து பெருமானார் (ஸல்) அவர்களிடம் வாசித்துக் காட்டியதாக ஒரு வரலாறு உண்டு.

ஆனாலும், பெருமானார் (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலம் வரை அரபி அல்லாத ஒரு மொழியில் திருகுர்ஆனுக்கு பூரணமாக ஒரு மொழிபெயர்ப்பு வெளி வந்தது என்பதற்கு ஆதாரம் நம்மிடம் இல்லை.

அரபு அல்லாத வேறு மொழி பேசிய முஸ்லிம்களும் திருகுர்ஆனை அதன் மூலமொழியாகிய அரபி மொழியிலேயே கற்று உணர்ந்து அதன்படி ஒழுகி வர ஆசை கொண்டிருந்திருக்கிறார்கள்,

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரபு மொழியை மூன்று காரணங்களுக்காக நேசிக்க வேண்டும் என்று ஒரு முறை உணர்த்தினார்கள்.

முதலாவதாக, அது என்னுடைய மொழி

இரண்டாவதாக அது அருள் வேதமாகிய திருகுர்ஆனின் மொழி

மூன்றாவதாக அது சுவனத்தின் மொழி

இந்தக் கருத்துரை வரலாற்றின் நெடுகிலும் முஸ்லிம்களை வெகுவாக ஊக்குவித்திருக்கிறது.

இன்றுகூட, அரபி மொழியை அரபு அல்லாத மொழிகளை தாய்மொழியாகக் கொண்டவர்கள் கூட - அரபி மொழியை அறிந்திராதவர்கள், அருள்மறையை அதன் மூல மொழியிலேயே ஓதுவதற்கு பெருமானார் (ஸல்) அவர்களின் அறிவுரை காரணமாக இருந்து வந்திருக்கிறது.

அரபு மொழியில் சொல்லப்பட்ட அந்த திருச்செய்தியை அகிலத்தின் மொழிகளில் எல்லாம் சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் இன்று பொங்கிப் பூரித்திருக்கிறது.

தூது ஓத வந்த துரை ஏசு தந்த விவிலியம் காதி லேறிய கதைகளையே கொண்டதாயினும், இன்று ஓராயிரம் மொழிகளில் பெயர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், அல்லாஹ்வின் அருள் வேதத்தை அகில மொழிகளில் வழங்குவதில் - அல்லாஹ்வின் அருள் வேதத்தின் கருத்துக்களை அகில மொழிகளில் வழங்குவ தில் - பின்னடைந்து விட்ட பெரும் பிழைக்கு நாம் ஆளாகி விடக் கூடாது என்ற அச்ச உணர்வு முஸ்லிம்களிடேயே மேலிட்டிருக்கிறது.

இதன் காரணமாக, இன்று ஏறத்தாழ 200 மொழி களில் திருகுர்ஆன் பெயர்க்கப்பட்டு உலகெங்கும் வழங்கப் படுகிறது.

அல்குர்ஆன் அருளப்பெற்ற காலத்திலேயே அதன் செய்திகளை செவிமடுக்க வாய்ப்பு பெற்றிருந்த தமிழ் சமுதாயத்தில் அதன் தாக்கம் ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருவது வரலாற்று உண்மை. என்றாலும், அல்குர்ஆனின் கருத்துக்கள் பொதிந்த பூரண மொழி பெயர்ப்பு இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை வெளி யாகும் வாய்ப்பு இருந்தது இல்லை.

எத்தனையோ பேரறிஞர்கள் இந்தத் துறையில் முயன்றிருக்கிறார்கள்: ஆனால் முழு வெற்றி பெற்றதாகச் சரித்திரம் இல்லை.

தனித் தமிழ் மொழியில் திருகுர்ஆனை பெயர்த்து வெளியிடுவதற்கு சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னரே நம் முன்னோர்கள் அரபுத் தமிழில்-அரபு லிபியில் தமிழ் மொழி யில் திருகுர்ஆனுக்கு மொழி பெயர்ப்பை முழுமையாக

வெளியிட்டிருக்கிறார்கள் என்பது நம் முந்தைய மூத்த தலை முறையினருக்கெல்லாம் பெருமையாகும்.

இந்த நூற்றாண்டில் ஆயிரம் ஆண்டு காலமாகத் தமிழ் மொழிக்கு இருந்த ஒரு பெருங்குறையை - அருள் வேதமாகிய திருகுர்ஆனுக்கு பொருள் செறிந்த தமிழில் முழுமையான ஒரு மொழி பெயர்ப்பு காணக் கூடிய பெரும் பாக்கியத்தை கருணைமிக்க அல்லாஹ் அல்லாமா ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி அவர்களுக்கு அளித்து அருள் புரிந்தான்.

ஓதத் தலைப்படும் போதே, திருகுர்ஆனுக்கு தமிழில் உரை காண வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டு, அரபி ஓதி உணர்ந்த பிறகும் அதன் ஆய்விலேயே சுமார் 40 ஆண்டு காலம் தோய்ந்து திளைத்து, இறைவன் அவர்களுக்கு அளித்த அறிவின் தெளிவாக அவர்கள் தொகுத்துத் தந்த திருகுர்ஆன் மொழி பெயர்ப்பு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் முழுமை பெற்று வெளி வந்தது.

அந்த மொழி பெயர்ப்புக்கு 'தர்ஜுமதுல் குர்ஆன்-பி-அல்தபில் பயான்' என்ற பொருத்தமான தலைப்பிட்டு பிரசுரித்தார்கள். இனிய தெளிவான நடையில் திருகுர்ஆனின் மொழி பெயர்ப்பு என்பது அந்தத் தலைப்பின் பொருள் ஆகும்.

இந்த மொழிப் பெயர்ப்பை அறிஞர்கள் ஏற்றுக் கொண்டனர்.; உலமாக்கள் பாராட்டினார்கள் ; பொதுமக்கள் இதனால் பெரும் பயன் அடைந்தார்கள்.

இந்த மொழி பெயர்ப்பின் ஒவ்வொரு சொல்லும் தமிழக மார்க்க அறிஞர்கள் குழுவினரால் பரிசீலிக்கப் பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது என்பது வரலாற்று உண்மை.

அல்லாமா பாகவி அவர்கள் திருகுர்ஆன் மொழிபெயர்ப்பு செய்த பெருமை தனி ஒருவரான தமக்குத்தான் சேர வேண்

டும் என்ற எண்ணம் சிறிதும் இன்றி, அவர்கள் வாழ்ந்த காலத்தில் இருந்த தமிழக உலமாக்கள் எல்லாம் அதைப் படித்து தம் கருத்துக்களைச் சொல்லச் செய்து அந்த பெருமை மார்க்க அறிஞர்கள் அனைவருக்கும் சேர வேண்டும் என்று பாடு பட்டார்கள்.

தம்முடைய இறுதி மூச்சு இழையோடும் அந்த நேரம் வரை தம்முடைய மொழி பெயர்ப்பை திரும்பத் திரும்ப அல்லாஹ்வின் அருள் வேதத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து அதில் பிழை ஏதும் இருப்பின் திருத்தம் செய்ய வேண்டும் என்ற சேவையிலேயே ஈடுபட்டிருந்தார்கள். மனித முயற்சியில் தவறுகள் இல்லாத ஒரு மொழி பெயர்ப்பைத் தர வேண்டும் என்பதற்காக அவர்கள் மேற்கொண்டது போன்ற ஒரு முயற்சி திருகுர்ஆன் மொழி பெயர்ப்பு வரலாற்றில் வேறொரு இடத்தில் நடக்கவில்லை என்று மவ்லானா அபுல்ஆலா மவ்தூதி சிறப்பித்து எழுதி இருக்கிறார்கள்.

மொழி பெயர்ப்பைப் படிக்கும் போது, வாசகர்களுக்கு எந்தத் தயக்கமும் சந்தேகமும் ஏற்படாத-தெளிவான-இனிய-எளிய-சரளமான நடையில் தம் மொழி பெயர்ப்பை அமைக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அல்லாஹ்வின் அளப்பரிய சன்மானங்களுக்கு உரித்தானவையாக ஆகி இருக்கின்றன.

அதிலும் பக்கம் பக்கமாக எழுதி, தர வேண்டிய விளக்கத்தை ஒரு சில சொற்களில் பிறை விளைவு கோடுகளுக்குள் அமைத்து நீண்ட விரிவுரை இன்றியே மொழிபெயர்ப்பின் மூலம் திருகுர்ஆனின் கருத்துக்களை புரிந்து கொள்ளச் செய்வதற்காக அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி இன்று பெரிதும் பாராட்டப்படுகிறது.

பிறை வளைவு கோடுகளுக்குள் அமைக்கப்பட்டுள்ள சொற்களை விட்டு விட்டு வாசித்தாலும், அதைத் தொட்டு

வாசித்தாலும் வசன நடை சிதைவுறாமல் இருக்க அவர்கள் பெரிதும் பாடுபட்டிருக்கிறார்கள்.

பிறை வளைவுக் கோடுகளில் உள்ள சொற்களை நீக்கி உள்ள வசனம் அரபு வசனத்தின் நேரடி மொழி பெயர்ப்பாக இருப்பதையும் கண்டு கொள்ள முடியும்.

தாம் பெற்ற மொழி அறிவையோ, இலக்கிய மேதா விலாசத்தையோ, ஆராய்ச்சித் திறமையையோ காட்ட வேண்டும் என்ற பெருமித உணர்வு கொஞ்சமும் இல்லாமல், அல்லாஹ்வின் அருள் மறையின் கருத்துக்களைத் தமிழ் மொழியை எழுதப் படிக்கத் தெரிந்த சாதாரண பாமரர்கள் கூட புரிந்து கொள்ள வேண்டும் என்பதிலேயே அவர்களுடைய கவனம் இருந்தது.

இன்று அவர்கள் மொழி பெயர்ப்பு வெளிவந்து அரை நூற்றாண்டுகள் ஆகி விட்ட போதிலும், அவர்களுடைய மொழி பெயர்ப்பு வெளி வந்த பிறகு, ஒரு சில மொழி பெயர்ப்புகள் வெளிவந்திருந்த போதிலும் அல்லாமா பாகவி அவர்களுடைய மொழிபெயர்ப்பு ஆதார பூர்வமான மொழி பெயர்ப்பாக-படித்தால் புரிந்துக் கொள்ளக் கூடியதாக-ஓதினால் உள்ளுணர்வு ஊட்டக் கூடியதாக-அதைப் படித்துச் சிந்தித்தால் உயர் வழி காட்டக் கூடியதாக இருப்பதையும் காணுகிறோம்.

பாகவி அவர்களுடைய மொழி பெயர்ப்பைச் சமுதாயம் பொருந்திக் கொண்டிருக்கிறது.

அல்லாஹ்வுடைய அருளும் அவர்கள் சேவைக்குச் சொரிந்து கொண்டிருக்கிறது.

ஜனாப் செ. திவான் அவர்கள் இதுவரை திருகுர்ஆனுக்கு தமிழில் மொழி பெயர்ப்புக் கண்டவர்ளுடைய வரலாற்றை இந்த நூலின் மூலமாக சுவையாகத் தொகுத்துத் தந்திருக்கிறார்கள்.

‘விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்’ என்ற வரலாற்று நூல் எழுதி, வள்ளல் சீதக்காதி அறக்கட்டளை சார்பாக முதல் பரிசு பெற்ற ஆய்வறிஞர் செ. திவான் அவர்களுடைய திறனாய்வுத் திறமை இந்த நூலிலும் பளிச்சிடுகிறது.

இது வரை வெளி வந்துள்ள தமிழ் மொழி பெயர்ப்புப் பற்றிய விபரத்தோடு உலகின் பல்வேறு மொழிகளில் வெளிவந்துள்ள மொழி பெயர்ப்புப் பற்றியும் அவர் விபரங்களைத் தொகுத்துத் தந்திருக்கிறார். .

திருகுர்ஆன் பற்றி - அதன் மொழி பெயர்ப்புப் பற்றி அறிய விரும்பும் ஆர்வலர்களுக்கு இந்த நூல் மிகவும் பயன் படும் என்பது நமது கருத்து.

சகோதரர் திவான் அவர்களுடைய ஆய்வுத் திறமை மேலும் இஸ்லாமிய சமயம் பற்றிய பல பயனுள்ள நூல்களைத் தொகுத்துத் தர சமுதாயம் அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவி புரிய வேண்டும் என்பது நம்முடைய அவா.

இறைவன் அருள்வானாக!

வஸ்ஸலாம்.

அப்துஸ்ஸமது
19—9—95

காணக் கிடைக்காத அறிவுக் கருவூலம் பேணிட வேண்டியது நம் பெருங்கடமை!

சிறுபான்மை மக்களின் காவல் அரண்
மறுமலர்ச்சி தி மு. கழகத்தின் பொதுச் செயலாளர்
வை. கோ. அவர்களின்

அணிந்துரை

வையத்தில் வாழும் முறையை ஐயத்திற்கு இடமின்றி அறிவிக்கும் அருள் மறையாம் திருகுர்ஆனைப் பற்றிய,

''திருகுர்ஆன்: தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்''

என்ற இந்த அற்புத நூலில் வெளிக் கொண்டு வரப் பட்டுள்ள அரிய செய்திகள், என் ஆருயிர் இளவல் செ. திவானின் செறிவான அறிவுக்கும் ஆற்றலுக்கும் தெளிவான அத்தாட்சியாகும்.

வேடிக்கை விளையாட்டுக்களில் பொழுது போக்கும் வாடிக்கை இளைஞனாக அல்லாமல், ''மனிதன் சின்னஞ் சிறு செயல்களுக்காக அல்ல; மகத்தானவற்றிற்காகவே படைக்கப் பட்டிருக்கிறான்'' என்ற அண்ணல் நபி (சல்) அவர்களின் கன்னல் மொழிக்கிணங்க, நாட்டின்-சமுதாயத்தின்-இன்னல் துடைக்கத் தன்னையே அர்ப்பணிக்கும் சங்கற்பத்தோடு சதா சர்வகாலமும் சலியாது உழைத்துச் சாயாத சாதனை படைத்திடத் துடிப்பவர் சகோதரர் திவான்.

இஸ்லாமிய சமுதாயம் பெற்ற ஈடிணையற்ற அறிவுப் புதையல் இவர் என்பதை வருங்காலம் நிரூபித்து திவானை வாழ்த்திப் போற்றும். இன்று நாட்டில் காணக் கிடைக்காத

அடக்கம் எளிமை ஆகிய பண்புகளுக்கு இலக்கணமாக அல்ல-அவற்றின் அடைக்கலமாகவே திகழ்பவர் திவான்.

பணத்திற்குச் சிறிது கூட மனத்தில் இடத்தை தராதவர், ஒழுக்கத்தின் உறைவிடம். நேர்மையில் நெருப்பாகத்-தூய்மைக்குத் தூண்டா மணிவிளக்காக-அணி செய்யும் இளைஞர் திவானின் அறிவாற்றலைக் கண்டு அறிஞர்கள் வியந்து போற்றும் போதெல்லாம் ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தாயாக நான் பூரித்துப் போகிறேன்.

''எப்படித் திரட்டினார். இவ்வளவு நுட்பமான செய்திகளை?'' என்று ஆச்சரியப்படும் வகையில் பல அரிய செய்திகளைத் தொகுத்து அவை தப்பற்ற வரலாற்றுத் தகவல்கள் என்பதற்குச் சான்றான ஆதாரங்களையும் அடிக் குறிப்பாகத் தருகின்ற திவானின் ஒப்பற்ற மதி நுட்பம், மாற்றாரும் கண்டு மலைப்புக் கொள்ளும் மாண்புடையதாகும்.

''கற்பவனாக இரு, அல்லது கற்றுக் கொடுப்பவனாக இரு, அல்லது கேட்பவனாக இரு, நான்காவது மனிதனாக ஆகிவிடாதே!'' என்ற பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருமொழிக்கு இலக்காகத் திகழும் திவான், கற்பவராக மட்டுமல்ல, தான் கற்றுக் கொண்டேயிருக்கும் கணக்கற்ற செய்திகளை மற்றவருக்கு ஏடுகள் வழி கற்றுத் தருபவராகவும், அறிஞர்கள் கருத்துக்களை செவி மடுத்துக் கேட்டுச் சிந்தையில் தேக்கிக் கொள்பவராகவும் விளங்குகிறார். அதி நுட்பக் கணிப்பொறிகளையும் விஞ்சிடும் மதிநுட்பம் பெற்ற திவானின் எழுத்தாற்றலை இன்று தமிழுலகும் இஸ்லாமிய இலக்கிய உலகும் ஏற்றுப் போற்றுவது இயற்கையே!

தென்காசியைச் சேர்ந்த ஏறத்தாழ எழுபத்தைந்து வயது நிரம்பிய அருட்திரு E, M. அப்துர்ரஹ்மான் அவர்கள் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் திருகுர்ஆன் மொழி பெயர்ப்புப் பணியில் மூழ்கித் தோய்ந்து முத்து மணிச் சரங்

களாக 21 தொகுப்புகளை அன்னைத்தமிழுக்கு அணியாக வழங்கியிருப்பவர். அப்பெரியார், தங்களுடைய ‘பங்காரு’ குடும்ப வரலாற்றைப் பற்றி தினமணிச் சுடரில் திவான் எழுதியிருந்ததைப் படித்த பின்னரே தம் குடும்பத்தின் பெருமையை முழுவதாக அறிந்து கொண்டதாகக் கூறி, முன்பே இவ்வரலாறு தெரிந்திருப்பின் தம் ‘‘தலைப் பெழுத் தாக E என்று பாட்டனார் பெயரைக் குறிக்காமல் ‘B’ என்று குடும்பப் பெயரைக் குறிப்பிட்டு வழங்கியிருந்திருப் பேன்; இப்போது ‘‘காலம் கடந்து விட்டதே!’’ என்று கூறி வியந்து திவானைப் பாராட்டியுள்ளார். இதனைத் தம்பி இராசா முஹம்மது என்னிடம் தெரிவித்த போது, ‘இந்த இளம் பிறைக்குள் புதையுண்டு கிடக்கும் பூரணச்சந்திர னை அறிவுலகப் பெரியோர்கள் அடையாளம் புரிந்து கொண்டு ஆதரித்துப் போற்றும் காலம் வந்து விட்டது, என்று மகிழ்ந்தேன்.

‘‘சிந்தித்து, ஆராய்ந்து, நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இந்தக் குர்ஆனை மிக்க எளிதாக்கியிருக் கிறோம். ஆகவே இதனைக் கொண்டு நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டோ’’ (திருக்குரான் 54:17) என்ற அறை கூவலை அகிலம் எங்கும் உள்ள மனிதகுலம் அறிந்து தெளிந்திடும் வகையில் திருமறையை ஆராய்ந்து தஃப்சீர் என்னும் மொழி பெயர்ப்புகள் — விரிவுரைகள் — விளக்கங் கள்—எழுதியுள்ள ஆன்றவிந்தடங்கிய அறிவுச் சான்றோர் கள் பற்றிய அரிய செய்திகளை இந்நூல் மூலம் திவான் வழங்கியிருப்பது இஸ்லாமிய இலக்கிய உலகிற்குக்கிட்டி யுள்ள அருட்கொடையாகும்.

யுத்த களங்களுக்குச் செல்கின்ற வேளையில், திருகுர் ஆனை முற்றிலும் ஓதி மனதில் பதியவைத்துக் கொண்டுள்ள ஹாபிஸ்கள் அக்களங்களில் மடிந்து விடுவதால் நேரிடும் பேரிழப்பை ஈடுசெய்ய அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் கடைபிடித்த வழிமுறைகளும், பிற்காலத்தில் ஹளரத் உமர் (ரலி) அவர்களும் ஹளரத் அபூபக்கர் (ரலி)

அவர்களும் திருமறையைத் தொகுத்து ஒரே நூல் வடிவில் பாதுகாக்க முற்பட்ட செய்திகளும் பற்றி அறியும்போது, **அகிலத்தில் இடைச் செறுகலுக்கு இடமின்றிக் கிடைத்துள்ள ஒரே அருள்மறை இதுவே** என்ற பெருமையை அறிந்து கொள்ள முடிகிறது. நெல்லைச் சீமையின் பெருமைக்குரிய –கண்ணியத்திற்குரிய— காயிதே மில்லத் அவர்களின் உறவினர் திருமறையைத் தமிழாக்கம் செய்ய மேற்கொண்ட முயற்சி பற்றி அறியும் போது மகிழ்ச்சி யடைகிறோம்.

கண்ணியத்திற்குரிய சிராஜுல் மில்லத் ஆ. கா. அ. அப்துஸ்சமது அவர்களின் திருத்தந்தையார் அருட்திரு மௌலானா. ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி அவர்கள், திருகுர்ஆனைத் தமிழில் மொழியாக்கம் செய்திட மேற்கொண்ட முயற்சிகளையும், எள்ளளவு பிழைக்கும் இடம் தராமல். தப்ஸீர் வெளிவர வேண்டும் என்பதற்காக அப்பெரியார், தமிழ் நாடெங்கும் இருந்த நூற்றுக்கு மேற்பட்ட மார்க்க மேதைகளின் பரிசீலனைக்குத் தம் மொழி பெயர்ப்பை உட்படுத்திய பின்னும் தமிழ் நாட்டின் தன்னிகரற்ற இஸ்லாமியப் பல்கலைக் கழகமாகத் திகழும் வேலூர் பாகியாத்துஸ் சாலிஹாத்தின் ஆய்வுக்குப் பின்பே ''தர்ஜுமத்துல்குர்ஆன்'' வெளியிட முற்பட்டதையும் திவான் விவரிக்கும்போது, எப்படிப் பட்ட சான்றோர்களின் பேருழைப்பினால் இந்தச் சமுதாயம் தழைத்துள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

மேலப்பாளையம் கல்வத் கலீபா நாயகம் குத்புஸ் ஸமான் காமில் முகம்மல் அல்ஹாஜ் முஹம்மது யூசுபு அல் ஆரிபு பில்லாஹ் அவர்கள் திருகுர்ஆனை மொழியாக்கம் செய்து செந்தமிழில் வழங்க மேற்கொண்ட முயற்சிகளைத் திவான் விவரித்துள்ளார். நோய் வாய்ப் பட்ட நிலையிலும், படுத்த படுக்கையிலிருந்த வண்ணம் தஃப்ஸீரைப் படித்துச் சரி செய்தவாறு, தம் ஆயுட் காலத்தில் இவ்வரும் பணி முடிந்திட வேண்டுமென்ற அந்த இறை நேசச் செல்

வரின் தணியாத ஆர்வத்தை அறியும் போது இதயம் கொள்ளும் நெகிழ்ச்சிக்கு அளவில்லை.

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்; ஒன்றே குலம் ஒருவனே தேவன்;'' என்ற உன்னத நெறிகள் நம் தாயக மண்ணில் வர்ணாசிரமத்தின் வரவால்-வஞ்சகத்தால் - வளைக்கப் பட்டுச்-சிதைக்கப் பட்டுச் சீரழிக்கப் பட்ட கால கட்டத்தில், அரபுப் பாலைவனத்தில் ஜீவ ஊற்றாக எழுந்த இஸ்லாமிய மார்க்கத்தின் மறுமலர்ச்சியால் புத்துயிர் பெற்று உலகெங்கும் எழுச்சியுற்றுள்ளது. இதனைப் பாராட்டித்தான்; ''உறக்கத்தில் இருந்த குழந்தை விழித்ததும் பாய்ந்து தாயின் மார்பைத் தழுவிக் கொள்வதைப் போல் தமிழகம் இஸ்லாத்தை அரவணைத்துக் கொண்டது'' என்று அறிஞர் அண்ணா அவர்கள் அழகுற மொழிந்தார்கள்.

''ஒருகையில் சூரியனையும் மறுகையில் சந்திரனையும் தருவதாக இருந்தாலும், கொண்டகொள்கையைக் கைவிட மாட்டேன்'' என்று ஈமானில்-நம்பிக்கையில்-அந்த ஈமானோடு இறுதி வரை வாழும் இலட்சியத்தில் உறுதி தளராத நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மகத்தான நெறியைப் பேணிடவும் பரப்பிடவும் அழகிய முன் மாதிரியாக அகிலத்திற்கு வந்த அண்ணல் பெருமானார் (சல்) அவர்கள் கட்டிக் காத்தநேர்மையையும் தூய்மையையும் இன்றைய நாளில் நிலை பெறச் செய்யும் தலையான முயற்சியிலும் தம்பி திவானின் தளராத உழைப்பு தனிப் பெரும் சிறப்புடையது.

தன்னலமற்றவராக-தன்னிகரற்றவராக என் வாழ்வில் எனக்குக் கிட்டிய வைர மணித் தூணாகத் திகழும் தம்பி திவான், தன்னுடைய உன்னதமான உழைப்பால் எழுத்துலகில் தனி முத்திரை பதித்துள்ளார்.

காணக் கிடைக்காத அறிவுக் கருவூலமாகத் திகழும் திவானைப் பேணிக் காத்தும் பெரும் பயன் பெற வேண்டியது தமிழுலகின் தலையாயக் கடமையாகும்.

25—9—95

வை. கோபால்சாமி.

AL 67, 4வது தெரு 11 வது மெயின் ரோடு
அண்ணாநகர் சென்னை-600 040.

இருநூற்றாண் ஆய்வாளர்களுக்கு கையேடு

சீரிய சிந்தனையாளர்,
தெ. இ. இஷாஅத்துல் இஸ்லாம் சபை தலைவர்
A. K. ரிபாயி B. A. Ex. M. P. அவர்களின்

அணிந்துரை

செங்கோட்டை, விஸ்வநாதபுரம் ஜனாப் செ. திவான் அவர்கள் ''கற்றது கையளவு கல்லாதது உலகளவு'' என்ற தத்துவத்தில் ஊறிப்போனவர். எப்பொழுது பார்த்தாலும், புதிய தகவல்களை தெரிந்து கொள்வதிலும் அவற்றை சேகரித்து வருங்கால தலைமுறையினருக்காக பத்திரப்படுத்தி வைப்பதிலும் அவருக்கு நிகர் அவரே.

ஆராய்ச்சி மாணவன் என்று தன்னை அடக்கத்துடன் அழைத்துக்கொள்ளும் செ. திவான்சாகிப் மிகவும் சுறுசுறுப்பானவர், விடாமுயற்சியில் நம்பிக்கை வைத்துள்ளவர். எறும்பினிடத்திலும், தேனீயிடத்திலும் அவர் பாடம்கற்றிருப்பார் போலும்!

இஸ்லாமிய பத்திரிகைகள் பலவற்றிலும், மற்றும் ஏனைய நாளேடுகளிலும் அவரது கைவண்ணங்கள் அவ்வப்போது அச்சேறி வருவதை பலரும் அறிவர். ஒருபுறம் மாமன்னர் அவுரங்கஜேப் பற்றிய வரலாற்றுத் தொடர், இன்னொருபுறம் கோவில்களில் சிலைகளும், நகைகளும் களவு போவது இன்று நேற்று ஆரம்பமான கதை அல்ல நூற்றாண்டுக்கணக்கில் இத்திருட்டுக்கள் தமிழ் நாட்டில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன என்று தக்க ஆதாரங்களோடு கட்டுரைகள், மற்றொரு புறம் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் இந்திய முஸ்லிம்கள் பதிப்பித்த முத்திரை சுவடுகள் பற்றியன. இவ்வளவு தானா?

கமந்தான்கான்சாகிப் (கமாண்டர் யூசுப் கான்) தென் மாவட்டங்களில் ஆற்றிய வீரசாகசங்களும் அவர் பொறித்த நிர்வாகத் திறன்களும், படம்பிடித்துக்காட்டப்பட்டுள்ளன. இப்படி சொல்லிக் கொண்டே செல்லலாம்.

என்னிடம் அவர் பல விஷயங்களைப் பற்றியும் பேசுவார், இன்னின்ன விஷயங்கள் குறித்து எழுதலாம் என்றிருக்கிறேன் என்றும் கூறுவார். இறைவனின் வேதமாம் திருகுர்ஆன் குறித்து எழுதப்போவதாக அவர் ஒன்றும் சொன்னதில்லை, என்ன திடுதிப்பென்று திருமறை ஆராய்ச்சியில் இறங்கிவிட்டீர்களே என்று வினவினேன். அவர் சொன்னபதில் மனதைத் தொடுவதாக இருந்தது.

அவரது துணைவியார் சித்தமருத்துவத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற டாக்டர். மருத்துவர் என்றால் நோய்கள் விட்டு வைக்கவா செய்கிறது அந்த அம்மையாருக்கு மஞ்சள்காமாலை நோய் வந்தது ஒருமுறையல்ல, இரண்டு தடவைகள் அதன் தாக்கத்தினால் அவர் அவதிப் படலானார். மருத்துவமனையில் தங்கி சிசிச்சை பெற வேண்டிய கட்டாயமும் எழுந்தது, அவர் மிகவும் அவதிப் பட்டார்.

திவான்சாகிபுக்கு இது மனதிற்கு மிகவும் வேதனை யாக இருந்தது. இறைவனிடம் முறையிடுவதைத்தவிர வேறு சிறந்த வழி என்ன இருக்கிறது? திருமறையைப் புரட்டிப்படிக்கலானார், திடீரென ஓர் எண்ணம் அவர் மனதில் பளிச்சிட்டது. இறைவனின் வேதம் குறித்து இது வரை தாம் என்ன செய்திருக்கிறோம், அதுகுறித்து தமது பங்கு ஏதாவது இருக்க வேண்டாமா என்ற சிந்தனை அவர் மனதில் ஓடியது.

''என்னுடைய வரம்பு எனக்குத் தெரியும் எனக்கு மார்க்க ஞானமும் அவ்வளவு போதாது, அரபிமொழி அறிவும் கிடையாது, இந்த நிலையில் அவ்வேதம் குறித்து யார் யார் என்ன என்ன முயற்சிகளில் இதுவரை ஈடுபட்

டிருக்கிறார்கள் என்ற விபரங்களையாவது தொகுத்து மக்கள் முன்பு வைத்தால் பிரயோஜனமாக இருக்கும் என்று எண்ணினேன் அதன் விளைவுதான் இச்சிறிய நூல்'' இவ்வாறு திவான்சாகிப் கூறினார். இதை எழுதி முடித்ததும் அவரது துணைவியார் பூரண நலம் பெற்று விட்டாராம்,

திருகுர்ஆன் எவ்விதம் தொகுக்கப்பட்டது, இதற்கு யார் யாரெல்லாம் விரிவுரை எழுதினார்கள், பிற மொழிகளில் எவ்வப்போது அது மொழிபெயர்க்கப்பட்டது போன்ற விபரங்களை அவர் சுருக்கமாகவே சொல்லி இருப்பினும், தாய்த் தமிழில் வேதத்தின் வெளிச்சத்தை சித்தரித்துக் காட்ட யார் யார் எல்லாம் எப்பொழுது எப்படி முயற்சித்தார்கள், என்னென்ன செய்தார்கள் என்பன போன்ற செய்திகளை தொய்வில்லாமல் முழுமையாகவே அவர் பட்டியல் போட்டுக்காட்டியிருக்கிறார் என்றே நான் கருதுகிறேன்.

குறிப்பாக ஆராய்ச்சித்துறையில் ஈடுபட்டவர்களுக்கு இந்நூல் கையேடு (Reference Book) ஆகப்பயன்படும் என்பதில் சந்தேகம் இல்லை, அவரது முயற்சிக்கு அல்லாஹ் போதிய சன்மானங்களைக் கொடுப்பானாக!

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே

இஷாஅத் மன்ஸில் — **ஏ, கே. ரிபாயி**
நன்னகரம்,
1—9–1995.

நூற்றாண்டு காலச் சரித்திரம்

'ஜமா அத்துல் உலமா' ஆசிரியர் மௌலானா மௌலவி மீ.இ.மு. அபுல்ஹஸன் ஷாதலி ஸாஹிப் (நூரிய்யி, பாஜில் பாகவி) அவர்களின் அணிந்துரை

அகில உலக இரட்சகனாகிய அல்லாஹ், நாம் காணும் உலகின் எல்லா வஸ்துக்களையும் படைத்து உதவினான். இறைவனால் படைக்கப்பட்ட படைப்பினங்கள் அனைத்திலும் மிக உன்னதமான அந்தஸ்தைப்பெற்றவன் மனிதன்.

முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களை களி மண்ணிலேயிருந்து படைத்து அவர்களுக்கு உதவியாக ஹவ்வா அம்மாள் அவர்களையும் துணைவியாராகப் படைத்து சில விதிமுறைகளை ஏற்படுத்தி சுவர்க்கத்தில் அவர்களை வாழவைத்தான்.

விதிமுறை வரம்புகளுக்கு இருவரும் சற்று மாறு பட்டதின் விளைவாக இப்பூவுலகிற்கு அவர்களை இறக்கி வைத்தான். பூமியில் இறக்கப்பட்டபோது முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்கள், இந்த உலகில் வாழ்வதற்கு எங்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு வேண்டுமே என்று வேண்டினர். அப்போது இறைவன் சொன்னான்: நீங்கள் பூமியில் உழைத்து வாழுங்கள்; நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து எனது அன்பை இப்பூமியில் நீங்கள் பெற்றுக் கொண்டால், மீண்டும் சுவர்க்கலோகத்தில் உங்களைப் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் பின்பற்றி ஒழுக வேண்டிய நல்லொழுக்கங்களைப் போதிக்கும் நல்ல செய்திகளை நான் உங்களுக்கு அவ்வப்போது எனது தூதர்கள் மூலம் அனுப்பி வைப்பேன், என்று கூறினான். இந்த அடிப்படையில்தான் இறைவனால் பொறுக்கி எடுக்கப்பட்ட, மிக உயர்ந்த பண்புகளைப் பெற்ற இறைத் தூதர்களுக்கு தேவைகளுக்கேற்ப பல நற்செய்திகளை

வழங்கினான். இச்செய்திகளைத்தான் வேதங்கள் என்று சொல்கிறோம். நபி நோவா (நூஹ் அலை) அவர்களுக்கு சில வேதக்கட்டளைகளை வழங்கினான். நபி இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு ஸுஹுபுகள் என்ற ஆகமங் களையும், நபி மூஸா (அலை) அவர்களுக்கு 'தவ்ராத்' வேதத்தையும், நபி தாவூது (அலை) அவர்களுக்கு ஐபூர் வேதத்தையும் நபி ஈஸா (இயேசு) (அலை) அவர்களுக்கு ''இன்ஜீல்'' வேதத்தையும் ஜிப்ரயீல் (அலை) (காபிரி யேல்) மூலம் அல்லாஹ் இறக்கி அருளினான்.

உலகம் பரந்து விரிந்தது. மக்கள் கோடி கோடியாகப் பெருகினர். மக்கள் இறைவனை மறந்து மோசமான கொள்கைகளில் மூழ்கி தடியெடுத்தவனெல்லாம் தன் விருப்பம் போல் மக்களை ஆட்டிப்படைக்க விரும்பினர். எங்கும் குழப்பங்களும், சச்சரவுகளும், அக்கிரமங்களும் பெருகி வழிந்தன. நல்லவர்கள் மக்களை விட்டும் ஒதுங்கி காடுகளிலும், குகைகளிலும், தீவுகளிலும் வாழ முற்பட்ட னர். ஏக இறைவனை வணங்குவதற்கென்றே கட்டப்பட்ட மகத்தான க:பா ஆலயத்தில் 360 விக்கிரஹங்களை தயார் செய்து வைத்து, அவைகள்தாம் நம்மை காப்பாற்றும் தெய்வங்கள் என்ற நம்பிக்கையை உண்டு பண்ணினர். இறைவன் இரக்கம் கொண்டான், அனைத்து மனிதர்களுக் காக தனது இறுதித் தூதரைத் தேர்ந்தெடுத்தான். அந்த மெய்ஞ்ஞானச் சூரியன் தனது கதிரைப்பரப்பி உலகில் ஜொலிக்க ஆரம்பித்தது. இந்த மெஞ்ஞானச் சூரியன்தான் முஹம்மதுநபி (ஸல்) அவர்கள் ஆவார்.

இவர்கள் நாற்பது ஆண்டுகள் பிறந்த நகரிலும், 13 ஆண்டுகள் இறை ஞானத்தை பெற்ற நிலையிலும், மக்கா வில் வாழ்ந்து வந்தார்கள், நாடு துறந்து வெளியேறி பத்தாண்டுகள் புகுந்த நாட்டிலும் (மதீனாவிலும்) பல்வேறு பயங்கர நிலைகளைச் சமாளித்துக் கொண்டும் 19 போர்க் களங்களில் எதிரிகளை சந்தித்தும், மொத்தம் இவ்வுலகில் 22, 230 நாட்கள் ஆறுமணி நேரம் வாழ்ந்த அந்த பூமான்

நபி அவர்கள் உலக அரசர்களை எல்லாம் தன்னைப் பின் பற்றும்படி அழைப்புக்கொடுத்தும், பரம ஏழை முதல் அனைத்து வசதிகளையும் பெற்றிருக்கும் ஆண்டான் வரை அனைத்து மக்களும் பின்பற்றக்கூடிய உயரிய முன் மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள். அவர்களுக்கு முன்னர் இறைவனின் சார்பில் வழிகாட்ட வந்த வள்ளல் பெரு மக்களாகிய நபிமார்களுக்கு, இறைவனால் வழங்கப்பட்ட மெஞ்ஞான வேதங்கள் அனைத்தும், மனிதர்களால் சுய நலமிகளால் திருத்தப்பட்டும், மாற்றப்பட்டும், உருக் குலைந்தும் போயிருந்தன. இந்த நிலையில் தான் முழு உலக இரட்சகர் அண்ணல் எம் பெருமானார் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களுக்கு அரபி மொழியில் குறைஷிகளின் பாஷையில் அற்புதமான பூர்த்தியான வேதத்தை இறைவன் இறக்கி அருளினான். அதற்குப்பின் வேறு வேதங்கள் இறைவனால் இறக்கிவைக்கப்படவும் இல்லை, இறக்கி வைக்கப்படவுமாட்டாது, இறக்கி வைக்க வேண்டிய தேவையும் இல்லை.

பசித்தவனுக்கு உணவு போல, தாகத்திலிருப்பவனுக்கு தண்ணீர் போல, மனிதனின் தேவைகள் எவை எவை உண்டோ, அவை அனைத்திற்கும் உறைவிடமாக ஒளி விளக்காக நிரந்தர வழிகாட்டியாக திருகுர்ஆன் அமைந்திருக்கிறது. கண்ணுக்குப்புலப்படாத இயற்கையின் அதிசயங்களை திருகுர்ஆனின் வெளிச்சத்திலேதான் நாம் காண முடியும்.

ஒருவனுக்கு திருகுர்ஆன் கிடைத்துவிட்டால் அவன் உலகின் எல்லாவற்றையும் பெற்று விட்டான் என்று தான் பொருள் இதன் காரணமாகத்தான் மனிதர்கள் அறிவாளிகள், விஞ்ஞானிகள், சரித்திரப்பேராசிரியர்கள், குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? என்று இறைவன் குர்ஆனில் பல்வேறு இடங்களில் திரும்ப திரும்ப அறை கூவல்விடுத்துக்கூறுகின்றான். சீர்தூக்கி பார்க்கத் தூண்டுகிறான்.

பல்வேறு வேதங்களைப் பின்பற்றிய அறிஞர்கள் குர்ஆனிலும், தங்கள் வேதங்களில் இருப்பதைப் போன்று பல குறைகள் இருக்கலாம், கூடுதல் குறைவுகள் இருக்கலாம், இடைச்செருகல்கள் இருக்கலாம், வார்த்தைகள் மாற்றப் பட்டிருக்கலாம், என எண்ணி, திருகுர்ஆனை ஆராய்ந்து பார்க்க முன் வருகிறார்கள். அரபியைப் படித்து மொழி பெயர்க்கவும் செய்கிறார்கள். சம்பந்தமில்லாத முறையில் திருகுர்ஆனை அரபி, உருது, பார்ஸி நீங்கலான பிற மொழிகளில் மொழி பெயர்க்க அவர்கள் முனைந்ததற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் என்பதனை அவர் களின் மொழி பெயர்ப்புகள் காட்டிக் கொண்டு இருக் கின்றன. அதனால்தான், குர்ஆனின் மொழி பெயர்ப் பென்றால் யார் அதை மொழி பெயர்த்தது? அவர் எந்த சமயத்தைச்சார்ந்தவர்? அவரின் கொள்கையும் நோக்கமும் என்ன? என்பதையெல்லாம் கவனித்த பின்னரே அந்த மொழி பெயர்ப்புகளை வாங்குகின்றனர்.

முஸ்லிம்களில் சில வழிகெட்டவர்கள் குர்ஆனில் தங்கள் கருத்துக்களைப் புகுத்தலாம் என்ற எண்ணத்தோடு மொழி பெயர்ப்புகளையும், விளக்கங்களையும் தந்திருக் கிறார்கள், எனவே, குர்ஆனின் மொழி பெயர்ப்புகளை வாங்குவதற்கு முன்னர் அதை யார் எழுதியிருக்கிறார்கள்? அவர்களின் நோக்கம் என்ன என்பதனைத் தெரிந்து வாங்க வேண்டியதிருக்கிறது, இவைகளைக் கருத்தில் கொண்டுதான் திருகுர்ஆனை மொழி பெயர்ப்பவர்கள், விளக்கம் எழுதுபவர்கள், மிகவும் சிறப்பிற்குரியவர்களாக இருக்க வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். உலகப் பொதுமறையாம் திருகுர்ஆன் உலகில், உள்ள பல பாஷை களிலும் யார் யார் எப்போது மொழி பெயர்த்திருக்கிறார் கள் என்பதை விளக்கும் அற்புதமான குறிப்புகள், ''திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்'' என்ற

இந்த நூலில் உங்களுக்கு கிடைக்கின்றன.

தமிழில் மொழி பெயர்க்கவும், விளக்க உரை எழுதவும் வேண்டும் என்ற ஆவல் தமிழ் நாட்டில் உள்ள எல்லா அறிஞர்களுக்கும் இருந்து வந்தது, யார் அந்த பொறுப்பை ஏற்பது? எப்படி மொழி பெயர்ப்பது? தனிநபர் மொழி பெயர்ப்பதா? ஒரு ஜமாஅத் (குழுவினர்) சேர்ந்து மொழி பெயர்ப்பதா? என்ற விஷயத்தில் நீண்ட ஆலோசனைகள் செய்யப்பட்டு வந்தன. அவைகளைப் பற்றிய முழுவிபரங் களையும், இந்த நூலில் தெளிவாகப் பார்க்கலாம்.

தமிழில் திருகுர்ஆனை மொழி பெயர்க்க விளக்கவுரை கள் எழுத முற்பட்ட அறிஞர்கள், தவறுகள், ஏற்பட்டு விடக்கூடாது என்ற உறுதியில் எவ்வளவு பெரிய சிரமங் களை மேற்கொண்டார்கள். என்பதை இந்த நூல் நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

அரபுத் தமிழ்தப்ஸீர்கள், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதிய அளவு வசதியாக இல்லாத தால் தமிழில் வெளிவரும் தப்ஸீர்களையே மக்கள் விரும்பு கிறார்கள், இந்த அடிப்படையில் யார் யார் சுத்தமான கொள்கையுடன் தமிழில் தந்திருக்கிறார்கள் என்பதை புள்ளி விபரத்துடன் அவை வெளி வந்த காலத்துடன், அதற்காக மார்க்க அறிஞர்கள் பெரியவர்கள், எவ்வளவு சிரமத்தையும், கஷ்டத்தையும் மேற்கொண்டார்கள் என் பதையும், இதுவரை எத்தனை மொழி பெயர்ப்புக்கள் விளக்கத்துடனும், விளக்கமில்லாமலும் வெளி வந்திருக் கின்றன என்பதையும் இந்த நூலில் தெளிவாகப் பார்க் கலாம்.

இந்த நூல் நமது மதிப்பிற்குரிய நண்பர் செ. திவான் அவர்களால் நீண்டகால முயற்ச்சிக்குப் பின்னர் தயாரிக்கப் பட்டுள்ளது. இவர்கள் சரித்திரத் துறையில் நன்கு ஆராய்ந்து அலசிப்பார்க்கும் திறமையுள்ளவர்களாக இருப் பதால் இந்த நூலை சிரமங்களைப் பொருட்படுத்தாது நமக்குத் தந்திருக்கிறார்கள். செ. திவான் அவர்களைப்

பற்றி நான் ஒன்றும் அதிகமாகச் சொல்ல வேண்டிய தில்லை, அவர்களும், அவரது குடும்பத்தார்களும், சமுதா யத்திற்கும், நாட்டிற்கும், கல்வித்துறைக்கும், சரித்திரத் துறைக்கும் எவ்வளவோ தொண்டு செய்திருக்கிறார்கள்.

ஒரு நூற்றாண்டு சரித்திரத்தை சாறாகப் பிழிந்து குர் ஆனை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கெல்லாம் உதவியாக இருக்கும் பொருட்டு இந்த தொகுப்பைத் தந்திருக்கிறார் கள் இவரது முயற்சியை தமிழறிந்த ஒவ்வொருவரும் பாராட்டியே தீர வேண்டும், அனைவரையும் படிக்கத் தூண்டவும் வேண்டும்.

இந்த நூலில் குறிப்பிட்டுள்ள பெரியார்கள் பலர், அல்லாஹ்வின் சமூகம் சென்றுவிட்ட போதிலும் கூட அவர் களின் சந்ததிகளும் இந்த நூலைப் படிப்பவர்களும், அவர் களுக்காக துஆ செய்யக் கடமைப் பட்டுள்ளோம்.

தமிழில் குர்ஆனைப் பற்றி தெளிவாகப் புரிந்து கொள்ளத் துடிக்கும் ஆர்வமுள்ளவர்களுக்கு இந்த நூல் ஒரு உதவியாக அமைந்திருக்கிறது என்று உறுதியாக கூறலாம். இந்த நூலை திவான் அவர்கள் தங்களுக்கு முடிந்த அளவிற்கு மிகவும் சிரமம் எடுத்து சேகரித்துத் தந்திருக்கிறார்கள்.

சாதாரணமாக இந்தப்பணி இந்தத்துறையில் நீண்ட காலம் அனுபவமிக்கவர்களால் தான் முடியுமே தவிர மற்றவர்களால் சாத்தியப்படாது, இந்த நூலின் ஆரம்பம் முதல் இறுதி வரை முடிந்த அளவு நான் சரிபார்த்திருக் கிறேன்.

இந்த புத்தகத்தில் மேலும் குறிப்புகளை இவ்வாசிரியர் சேர்த்து தொகுத்திருக்கலாமே என்று எண்ணலாம், ஆனால் அவைகளை எல்லாம் வாசகர்கள் பொருட்படுத் தாமல் நூலாசிரியர் எடுத்துக் கொண்ட பெரு முயற்சிக்கு பெரும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருப்பதுடன், அவர்

களின் நல்வாழ்விற்கும், நாமெல்லோரும் துஆச்செய்வோமாக! இப்படிப்பட்ட நல்ல தொகுப்புக்களை தமிழில் தந்துதவ அவர்களுக்கு அல்லாஹ் அருள் புரிய துஆச்செய்வோமாக! அவர்களின் மனைவி, மக்களின் நல்ல, நிரந்தர சுகத்திற்கும், மற்றும் பாக்கியங்களுக்கும், கிருபையுள்ள அல்லாஹ்வினிடம் துஆ செய்வோமாக!

அவர்களால் எழுதப்பெற்ற இதர, நூல்களும், அவர்கள் உள்ளத்தில் ஊசலாடிக்கொண்டிருக்கும் இதர நூல்களும் விரைவில் வெளிவர எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்புரிவானாக ஆமீன்

வஸ்ஸலாம்

மௌலவி அபுல்ஹசன்ஷாதலி
முன்னேற்றம் புக் டிப்போ
திருநெல்வேலி ஜங்ஷன்

1—9—1995.
5—4—1416.

எண்ண அலைகள்

‘‘அகிலம் வியக்க அல்லாஹ்வால் அருளப்பெற்று, உயரிய அந்தஸ்தைப் பெற்றிருக்கும் குர்ஆனை எண்ணிய பலபாஷைகளையுடைய உலக மக்கள் யாவரும் வெகு எளிதில் உணர்ந்து கொள்ள வேண்டுமாயின் உலகிலுள்ள பல பாஷைகளிலும் இது மொழி பெயர்க்கப்பட்டாக வேண்டும். அல்லது இதன் மூல பாஷையான அரபிப் பாஷையை எல்லோரும் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் இதன் கருத்துக்களைப் புரிந்து கொள்ள முடியும். இது எல்லோராலும் சாத்தியப்படும் விஷயமன்று. ஆகவேதான் இன்றைய உலகில் திருகுர்ஆனை பல பாஷைகளிலும் மொழி பெயர்த்திருக்கிறார்கள் மொழி பெயர்த்துக் கொண்டும் வருகிறார்கள். திருகுர்ஆனின் மூல பாஷையான அரபிப்பாஷையிலேயே அனேக தப்ஸீர்கள் பொழிப்புரை, விரிவுரைகள் உள்ளன. இதன்றி பிற பாஷைகளான பார்ஸி, உர்தூ, ஆங்கிலம், ஜெர்மனி, பிரான்ஸ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலான பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு, விரிவுரைகளோடு வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்விரிவுரைகளைப் பற்றி எழுதுவதென்றால் அதுவே ஒரு பெரிய நூலாகி விடும்’’ என்று மௌலவி ஹாபிள் E.M. அப்துர் ரஹ்மான் (நூரிய்யி, பாஜில் பாகவி தென்காசி) அவர்கள் ‘அன்வாறுல் குர்ஆன்’ அரபிமூலமும் மொழிபெயர்ப்பும், விரிவுரையும் ஒருங்கே அடங்கிய நூலின் முன்னுரையில் சொல்லியுள்ள இந்தச் செய்தி எத்தனை ஆழமானதும் எவ்வளவு சரியானதும் என்பதனை எண்ணிப்பார்க்கிறேன்.

எத்திக்கும் புகழ்மணக்கும் தித்திக்கும் திருமறையாம் திருகுர்ஆனை தமிழில் மொழி பெயர்த்தும், அதற்கு விரிவுரைகள் எழுதிய மார்க்க நல்லறிஞர்களின் பெயர்களை மாத்திரமே தொகுத்தளித்தாலே அதுவே ஒரு சிறு நூலாகும் என்பதனை உணர்ந்து அதனை மட்டுமே தொகுத்தளிக்கும் முயற்சியாக இந்த நூலை எழுதியுள்ளேன்.

'திருகுர் ஆனும் தமிழ் மொழி பெயர்ப்பும்' என்ற எனது கட்டுரை 14—3—94 தினகரன் இதழிலும், மேலப் பாளையம் முஸ்லிம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் 1994-ஆம் ஆண்டு மலரிலும், 1995ல் மேலப்பாளையத் தில் சகோதரர் புலவர் த.மு.சா. காஜா முயினுத்தின் அவர்கள் வெளியிட்ட திருகுர்ஆன் சிறப்பு மலரிலும் வெளி வந்துள்ளது அதனை விரிவாக்கி இச் சிறுநூலை உங்கள் முன் வைக்கிறேன். இதில் நிறை இருப்பின் இறைவனைச் சாரும். குறை இருப்பின் அது என்னையே சாரும்.

சாதாரணமான நூல்களைப்படிக்கிற போது அதனைப் படித்தல், வாசித்தல் என்று சொல்லுகிறோம்.

வேதங்களைக் கற்கின்ற பொழுது வேதத்தை ஓதினார் என்று சொல்கிறோம். அதனால் தான் 'வேதம் ஓதுவார் கள்' 'ஓதுவார்' என்ற சொல் தமிழ் நாட்டில் பயன் படுத்தப்படுகின்ற சொல்லாகும். எனவே இந்நூலிலும் 'திருகுர்ஆனை ஓதினார்கள்' 'திருகுர்ஆன் ஓதப்பட்டது' என்று நான் எழுதி 'ஓதுதல்' என்ற பதத்தைப் பயன் படுத்தியுள்ளேன். இதுபோன்ற சொல் அமைப்பை வாசகர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

என் வாழ்விற்கு அடிப்படையாக அமைந்த கண்ணி யத்திற்குறிய அண்ணாச்சி மறுமலர்ச்சி திராவிட முன் னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் சிறுபான்மை மக்களின் காவல் அரண் திருமிகு **வை. கோபால்சாமி** M.A., B.L., M. P. அவர்கள் அவ்வப்போது எனது பணி யினைப் பாராட்டி உற்சாகப்படுத்துவதை என்றென்றும் நினைத்துக்கொண்டிருக்கும் நான் இந்த சந்தர்ப்பத்தி லும் நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றேன்;

அவர்களின் நிழலாக வழிநடக்கும் அண்ணன் T.A.K. இலக்குமணன், உற்றுழி உதவும் நற்றகையாளர் குட்டி (எ) C. A. R. சண்முக சிதம்பரம் M. A. அவர்களுக்கும்,

சொற்செல்வர் சி.சு. மணி,T.P.M. மைதீன்கான், தென்காசி அண்ணன் சி. ராசாமுஹம்மது, பேராசிரியர்கள் கே. சதா சிவம், தொ. பரமசிவம், பா. மாணிக்கம், அ. நரசிம்மன், அண்ணன் ரயில்வே ஐ. சாமுவேல், பாளை மு. அருணா சலம், சகோதரர்கள் M.A. நிஜாம், T.V. தங்கசாமி, எனது முயற்சிகளுக்கு உறுதுணையாயிருக்கும் ரோஹிணி P. நாராயணன், எனது மைத்துனர் டாக்டர் S. M. A. Q. ஜெய்லாணி, S. M. S. ஹமீது, S. முகம்மது முஸ்தபா, M. சாகுல்கமீது, ஆசிரியர் M. பாதுஷா, H. ஹபீப், டாக்டர் எம். முஹம்மது ரபீக், S. சாகுல் ஹமீது, குர்ஆ னின் குரல் துணை ஆசிரியர் எம். ஜெ. அன்வரி, எனது தம்பிமார்கள் செ. நாசர், M. M. தீன், செ. அசன், செ. இஸ்மாயில், பி, கல்லத்தியான், காதர் அண்ணாவி, பி. எஸ், முத்து, செ. இப்ராகிம், G. ஆத்தியப்பன், புக்ரவி, பாடகர் G.S. அபுபக்கர், G.S. குலாம்ரசூல் எனது குழந்தைகள் தி. நஜாத், தி. சுஹைறு ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விசுவநாதபுரம் N. செய்யது மசூது, காசினம்மாள் தாய் தந்தையருக்கு மூத்த மகனாகப் பிறந்த எனது அண்ணன் ஹாஜி செ. முகைதீன் பிச்சை M. A. M. Ed. அவர்களுக்கும், செங்கோட்டை மர்ஹூம் A.S. சுலைமான் (மாவட்ட கல்வி அதிகாரி), ஸபுராள் பேகம் தாய் தந்தை யருக்கு மூத்த மகனாகப் பிறந்த எனது வாழ்வின் ஜீவ ஊற்றாகத் திகழும் எனது துணைவியார் டாக்டர் திவானி ரஜஹானரா B. S. M. S. அவர்களுக்கும், நூலை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த ஹிலால் பிரஸ் அதிபர் அண்ணன் சாதிக் அவர்களுக்கும், ஓவியர் A. செல்வம் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

இதனை நூலாக்கிட வேண்டுமென்ற எனது விருப் பத்தைத் தெரிவித்தபோது அரிய ஆலோசனைகளையும், கையெழுத்துப் பிரதியில் திருத்தங்களையும் வழங்கிச் சிறப்பித்திருக்கும் 'ஜமா அத்துல் உலமா' ஆசிரியர்

மௌலானா மௌலவி மீ.இ.மு. அபுல்ஹஸன் ஷாதலி ஸாஹிப் (நூரிய்யா, பாஜில் பாகவி) அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நன்றியறிதலை கூறுவது எனது கடமையாகும்.

நூலைப்படித்து நிறைகுறைகளைச் சுட்டிக் காட்டுவதுடன் வரலாற்றில் இன்னும் இடம்பெற வேண்டிய திருகுர்ஆன், தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள் பற்றி அரிய செய்திகளைத் தந்தால், அடுத்து வரும் பதிப்புகளில் அவற்றை நன்றியுடன் பயன்படுத்திக் கொள்வேன்.

நன்றி. வஸ்ஸலாம்

பாளையங்கோட்டை — செ. திவான்

6-4-1995

இருபத்திமூன்று ஆண்டுகளில் இறங்கிய இறை வேதம்

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் ஆகிய அல்லாஹ்வால் தனது திருமறையாம் திருகுர்ஆன் முழுவதையும் ரமலான் மாதத்தின்* புனித இரவில் (லைலத்துல் கத்ர்) முதல் வானத்தில் இறக்கி வைக்கப் பட்டு, சூழ்நிலைக்கும் சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்றவாறு ஹளரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம் அண்ணல் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களுக்கு இறக்கி அருளப் பட்டது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரு மக்காவில் வாழ்ந்த பதின்மூன்று வருடங்களில் 81 அத்தியாயங் களும், திரு மதீனாவில் வாழ்ந்த 10 வருடங்களில் முப்பது அத்தியாயங்களும், மக்கா, மதீனா அல்லது இரண்டிலும் சேர்த்தும், பிரயாணங்களில் இருந்தபோதும் எஞ்சிய மூன்று அத்தியாயங்களும் இறைவனால் இறக்கி அருளப் பட்டது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அந்தியக் காலம் வரை திரு குர்ஆனின் வசனங்கள் இறங்கிக் கொண்டே யிருந்தன. அவர்களது காலத்திலேயே, திருகுர்ஆனை எழுதுவதற்கென்று நியமிக்கப்பட்ட 'காத்தி புல்வஹீகள்' அதனை எழுதி முடித்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறுதி காலத்தில் ஹலரத் ஜிப்ரயில் (அலை) அவர்கள் திருகுர்ஆன் முழுவ தையும் ஓதிக் காண்பித்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் ஓதச்செய்து அதனை சரிபார்த்துக்கொண் டார்கள்.

---

* 1 முஹர்ரம் 2. ஸபர் 3. ரபியுல்அவ்வல் 4. ரபியுல்ஆகிர் 5. ஜமா துல்அவ்வல் 6. ஜமாதுல்ஆகிர் 7. ரஜப் 8. ஷஃபான் 9. ரமலான் 10. ஷவ்வால் 11. துல்கஅதா 12. துல்ஹஜ் என்ற முஸ்லிம் களின் 12 மாதங்களின் கணக்கில் 9வது மாதமாக வருவது ரமலான் ஆகும்.

ஆக திருகுர்ஆன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஜீவிய காலத்திலேயே தோழர்களால் எழுதப்பட்டதுமட்டு மல்ல; நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஜிப்ரயீல் (அலை) அவர்களும் ஒருவருக்கொருவர் ஓதிக்காண்பித் தும் சரிபார்த்துக் கொண்டார்கள்.

மேலும் திருகுர்ஆனின் பெரும் பகுதிகளை, அநேக அத்தியாயங்களை ஸஹாபா பெருமக்கள் நன்றாகப் பாட மிட்டும், தங்களைச் சார்ந்தவர்களுக்கு கற்பித்தும், தங்கள் குழந்தைகளுக்கு ஓதிக் கொடுத்தும் திருகுர்ஆனைப் பாது காத்து வந்தார்கள்.

திருமறையின் தனிச்சிறப்பு

அல்லாஹ்வும் இந்தத் திருமறையை இறக்கி அருளிய துடன், உலகம் அழியும்வரை அதைப் பாதுகாப்பதாகவும் திருகுர்ஆனில் வாக்கும் அளித்திருக்கிறான்.

இதன் காரணமாகத்தான் அன்றும் இன்றும் கோடிக் கணக்கான மக்கள் குர்ஆனைத் தங்களது உள்ளங்களில் மனப்பாடமிட்டுப் பாதுகாத்தும் வருகிறார்கள்.

திருகுர்ஆனைத் தவிர உலகில் எந்த வேத நூலுக்கும் இத்தகைய சிறப்பு இல்லவே இல்லை.

முப்பது பாகங்கள்

''அலிஃப்லாம்மீம், ஸயகூல், தில்கர்ருஸுலு, லன் தனாலு, வல்முஹ்ஸனாத்து, லாயுஹிப்புல்லாஹ், வஇதா ஸமிஊ, வலவ்அன்னனா, காலல்மலவு, வஃலமூ, யஃ ததிரூன, வமாமின்தாப்பத், வமாஉபர்ரிவுருபமா,ஸுப்ஹா னல்லதீ, காலஅலம், இக்தரபலின்னாஸி, கத்அஃப்லஹ, வகாலல்லதீன, அம்மன்கலக, உத்லுமாஊஹிய, வமய் யக்னுத், வமாலியவா,ஃபமன்அள்லமு, இலைஹியுறத்து, ஹாமீம், காலஃபமாகத்புகும், கத்ஸமிஅல்லாஹு, தபார கல்லதீ, அம்ம'' என்ற முப்பது பாகங்களாக வகுக்கப் பட்டது திருகுர்ஆன். முப்பது பாகங்களிலும், அந்தந்த

முதல் வசனத்தையே அந்தந்த பாகங்களுக்கு (ஜுஸ்வு) பெயராகச் சூட்டப்பட்டிருக்கிறது.

114 அத்தியாயங்கள்

மூன்று வசனங்கள் முதல் இருநூற்றி எண்பத்தி ஆறு வசனங்கள் உடைய சிறியதும் பெரியதுமான 114 அத்தியாயங்களைக் கொண்டது திருகுர்ஆன்.

அல்ஃபாத்திஹா (தோற்றுவாய்) பசுமாடு (அல்பகரா)

இம்ரானின் குடும்பத்தினர் (ஆலஇம்ரான்), பெண்கள் (அந்நிஸா), உணவு, கால்நடைகள் (அன்ஆம்), ஆகாரத் தட்டுகள் (மாயிதா) சிகரங்கள், போரில் கிடைத்த வெற்றிப் பொருள்கள், அத்தவ்பா (மன்னிப்பு தேடல்), யூனுஸ் (தீர்க்கதரிசி), ஹீது (கிளையாரின் பெயர்), யூஸுஃப், இடி, இப்ராஹீம்., மலைப்பாறை, தேனீ, இஸ்ராயீலின் சந்ததிகள், குகை மர்யம், தாஹா, நபிமார்கள், அல்ஹஜ், முஃமினூன், பேரொளி, பிரித்தறிவித்தல், கவிஞர்கள், எறும்புகள், வரலாறுகள், சிலந்திப்பூச்சி, ரோமானியப் பேரரசு, லுக்மான், சிரம்பணிதல், சதிகார அணியினர், ஸபா, படைப்பவன், யாஸீன், அணிவகுப்புகள், ஸாத் கூட்டங்கள், ஈமான் கொண்டவர், ஹாமீம் ஸஜதா (சிரவணக்கம்) கலந்தாலோசித்தல், பொன் அலங்காரம், புகை, முழந்தாளிடுதல், மணல் திட்டுகள், முஹம்மது (ஸல்), வெற்றி, அறைகள், ஃகாஃப், புழுதியைக் கிளப்பும் காற்றுகள், மலை, நட்சத்திரம், சந்திரன், அளவற்ற அருளாளன், மாபெரும் நிகழ்ச்சி, இரும்பு, தர்க்கித்தல், ஒன்று கூட்டுதல், பரிசோதித்தல், அணிவகுப்பு, ஜுமுஆ, நயவஞ்சகர்கள், நஷ்டம், விவாகரத்து, விலக்குதல், ஆட்சி, எழுதுகோல், நிச்சயமானது, உயர்வழிகள், நூஹ், ஜின்கள், போர்வை போர்த்தியவர், போர்த்திக் கொண்டிருப்பவர், மறுமை நாள், காலம், அனுப்பப்படுபவை, பெரும்செய்தி, பறிப்பவர்கள், கடுகடுத்தார், சுருட்டுதல், வெடித்துப் போதல், அளவை நிறுவையில் மோசம் செய்தல், பிளந்து

போதல், கிரகங்கள், விடிவெள்ளி, மிக்க மேலானவன், மூடிக்கொள்ளுதல், விடியற்காலை, நகரம், சூரியன், இரவு, முற்பகல், விரிவாக்கல், அத்தி, இரத்தக்கட்டி, கண்ணியமிக்க இரவு, தெளிவான ஆதாரம், அதிர்ச்சி, வேகமாகச் செல்லுபவை, திடுக்கிடச் செய்யும் நிகழ்ச்சி, பேராசை, காலம், புறங்கூறுதல், யானை, குறைஷிகள், அற்பப் பொருட்கள், மிகுந்த நன்மைகள், காஃபிர்கள், உதவி, ஜுவாலை, ஏகத்துவம், அதிகாலை, மனிதர்கள் ஆகியவை 114 அத்தியாயங்களாகும். மக்காவில் இறங்கிய அத்தியாயங்கள் 'மக்கீ' என்றும், மதீனாவில் இறங்கிய அத்தியாயங்கள் 'மதனீ' என்றும் அழைக்கப்படுகிறது.

6666 வசனங்கள்

திருகுர்ஆனில் ஜபர் என்னும் அகர உயிர்க்குறிகள் 453143; 'ஜேர்' என்னும் இகர உயிர்க்குறிகள் 39582; பேஷ் என்னும் உகர உயிர்க்குறிகள் 8804; புள்ளிகள் 105684; 'மத்து' என்னும் நீட்டல் குறிகள் 1771; 'ஷத்து' என்னும் அழுத்தல் குறிகள் 1274 ஆகும்.

3 26671 ஹுருப் (எழுத்துக்களையும்)

7 6430 கலிமாத் (சொற்களையும்) கொண்டது திருகுர்ஆன்.

திருகுர்ஆனில் வரலாறு கூறுதல், வாக்குறுதியளித்தல், அச்சமூட்டி எச்சரிக்கை செய்தல், நன்மைகளை ஏவுகின்ற, தீமைகளைத் தடுக்கின்ற, உவமைகள் கூறுகின்ற வசனங்கள் தலா சுமார் 1000 வீதம் உள்ளன. ஆகுமானவற்றை விளக்கிக்கூறும் வசனங்கள், தடுக்கப்பட்டவற்றைப் பற்றிக் கூறும் வசனங்கள் தலா 250 ஆகும்.

இறைவனின் புகழ் கூறும் வசனங்கள் நூறு ஆகும். சிலர் சில இடங்களிலுள்ள ஒரு வசனத்தை இரண்டாகவும், வேறு சிலர் இரண்டு வசனங்களை ஒரே வசனமாகவும், கணக்கிட்டு வசனங்களின் எண்ணிக்கையைக் கூட்டியும்

குறைத்தும் சொன்னபோதிலும் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் தந்த விளக்கத்தின் படி 6666 வசனங்கள் என்ற கருத்தை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திருகுர்ஆனின் திருப்பெயர்கள்

அல்குர்ஆன் என்று ஐம்பது இடங்களிலும், குர்ஆன் என்று பதினைந்து இடங்களிலும் திருகுர்ஆன் பெயரை இறைவனே கூறுகிறான்.

திருவேதம், தெளிவான விளக்கம், உறுதியான அத்தாட்சி, நன்மை தீமைகளைப் பிரித்தறிவிப்பது, ஞானம் நிறைந்தது; நினைவூட்டுவது, பேரொளி, மெய்யானது, கண்ணியமானது, தெளிவானது, ஞானம் மிக்கது, சங்கையானது வல்லமை உடையது, நேர்வழிகாட்டி, அருள், அருமருந்து, நற்போதனை ஞானம் நிறைந்தது பாதுகாப்பது, உறுதியானது; நிலைபெற்றது, அருட்கொடை, ஆன்மா இறக்கியருளப் பெற்றது, சட்ட திட்டங்கள், நல்லாசிகள், முன்னர்வந்த இறைவேதங்களை மெய்ப்பிப்பது, நன்மாராயங் கூறுவது, அச்சமூட்டி எச்சரிப்பது, பரிசுத்தமானது, சங்கையானது கண்ணியமிக்கது, அரபி மொழியிலுள்ளது, உயர்வானது, ஆச்சரியமானது, அறிவொளி, நல்லுபதேசம், அல்லாஹ்வின் கயிறு என்று திருகுர்ஆன் பற்றி திருகுர்ஆன் சொல்லியிருக்கிறது.

முதன் முதலாக திருகுர்ஆன் அருளப்படுதல்

புனித மக்காவிற்கு அருகிலுள்ள 'ஹிரா' மலைக் குகையில் ரமலான் மாதத்தில் லைலத்துல் கத்ர் எனும் புனித இரவில் நபிகள் நாயகம் (ஸல்) தங்கியிருந்து இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அண்ணலாரின் நாற்பதாவது வயதில் திருகுர்ஆனின் 96வது அத்தியாயமான 'இக்ரஹு' வின் முதல் ஐந்து வசனங்கள் இறைவனால் அருளப் பெற்றன.

மலக்குகளின் தலைவர் ரூஹுல்அமீன் என்னும் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கியிருந்த ஹிரா மலைக்குகையில் மனிதத் தோற்றத்தில் தோன்றினார்கள். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து 'ஓதுவீராக' என்றார்கள். அதற்கு அவர்கள் 'நான் ஓத அறியேன்' என்றார்கள். மீண்டும் 'ஓதுவீராக' என்று கூற அதற்கும் 'நான் ஓத அறியேன்' என்றார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கட்டி அணைத்து மூன்றாவது தடவையாக, அவர்களிடம் 'இப்போது ஓதுவீராக' என்று சொன்ன போது 'நான் எதை ஓதுவது' என்று கேட்டார்கள்.

''நபியே! யாவையும்'' படைத்த உமது இறைவனின் திரு நாமத்தால் திருகுர்ஆனை நீர் ஓதுவீராக! அவனே மனிதனை இரத்தக்கட்டியிலிருந்து படைத்தான்.

''நபியே! பின்னும்'' நீர் ஓதும்! உமது இறைவன் மாபெரும் கொடையாளி, அவர்தான் எழுதுகோலைக் கொண்டு (எழுதக்) கற்றுக்கொடுத்தான். அன்றி (அதன் மூலம்) மனிதன் அறியாதவைகளையெல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுக்கின்றான்''.

இந்த வசனங்கள்தான் இறைவனால்முதன் முதலாக அருளப் பெற்றது. அதைத் தொடர்ந்து 'முஜம்மில்' 'நூன்' 'பாத்திஹா' ஆகியவை இறங்கி படிப்படியாக முழுவதும் வெளியானது.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

'அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் திருநாமத்தால் ஓதுகிறேன்' என்று அர்த்தம் தரக்கூடிய 'பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம் என்ற வசனத்துடன்தான் ஒவ்வொரு அத்தியாயமும் திருகுர்ஆனில் ஆரம்பமாகும்.

ஆனால் ஒன்பதாவது அத்தியாயமான ‘அத் தவ்பா’ வில் காட்டிக் கொடுப்பவர்களும், நயவஞ்சகர்களுமான முனாபிக்குகளுக்கு வழங்கப்படும் தண்டனைகளைப் பற்றிச் சொல்லப்படுவதாலும், எதிரிகளோடு நடத்தும் போர் முறைகளைப்பற்றி விளக்கங்கள் கூறப்படுவதாலும், இந்த அத்தியாயத்தின் துவக்கத்தில் ‘பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்’ என்பதை எழுதிக்கொள்ளுமாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உத்திரவிடவில்லை. எனவே, இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் ‘பிஸ்மில்லா ஹிர் ரஹ்மா னிர்ரஹீம் என்று தனியாக எழுதப்படவில்லை.

கடைசி வசனங்கள்

பச்சாத்தாபம் என்ற மன்னிப்பு தேடல் (அத்தௌபா) ஒன்பதாவது அத்தியாயத்தின் இறுதியில் 129-வது வசன மாக வரும் விஷயம் இதோ.

‘‘(நபியே! இதற்குப்) பின்னரும் அவர்கள் (உம்மைப் பின்பற்ருது) விலகிக்கொண்டால், (அவர்ளை நோக்கி) நீர் கூறும்; அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன்: அவனைத் தவிர வேறு நாயனில்லை; (என் காரியங்கள் யாவிலும்) அவன்மீது பூரண நம்பிக்கை கொண்டுள்ளேன் அவன்தான் மகத்தான ‘அர்ஷின்’ அதிபதி’’

மேற் சொன்ன வசனமும், அன்னிஸா உ (பெண்கள்) என்ற நான்காவது அத்தியாயத்தில் 177-வது வசனமான ‘கலாலா’ பற்றிய (தகப்பன், பாட்டன், பிள்ளை, பேரன் ஆகிய எந்தவாரிசுகளும் இல்லாத பொருளைப்பற்றியது) மார்க்கக் கட்டளையுமே இறைவன் இறுதியாக இறக்கி அருளிய வசனங்கள் ஆகும்.

வரிசை முறை

‘தர் தீபே திலாவத்’ (ஓதும் வரிசை முறை) தர் தீபே நுஸீலி (இறங்கிய வரிசைமுறை) தர்தீபேரஸூலி (ரஸூ லுடைய வரிசை முறை) என்ற அடிப்படையில் திருகுர் ஆன் வரிசை படுத்தி அமைக்கப்பட்டிருக்கிறது

அதாவது ஒவ்வோர் ஆண்டும் ரமலான் மாதத்தின் இறுதி பத்து நாட்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் இக்திகாப் இருக்கும் சமயத்தில் வானவர் தலைவர் ஜிப்ரயீல் (அலை) வந்து, திருகுர்ஆன் வசனங் களை நாம் ஓதுகின்ற வரிசைப்படி அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஓதிக் காட்டுவார்கள்,

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதைத் தாங்களும் ஒப்புவித்ததுடன் அதனை ஸஹாபாப் பெரு மக்களுக்கு (தோழர்களுக்கு) ஓதிக் காட்டுவார்கள். அந்த முறையின்படியே திருகுர்ஆனின் வரிசை முறைகள் அமைக்கப்பட்டு பின்பற்றப்பட்டு வருகிறது,

உத்தமர்கள் ஒருங்கிணைத்த சத்தியத்திருமறை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வினால் அருளப்பட்டு, வான்வழியாக வளமான வேதத்தை இருபத்தி மூன்று ஆண்டுகளாக வானவர் தலைவர் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவித்தார்கள். அப்படி அறிவிக்கப்படுகின்ற காலங்களில் அதனை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தவர்கள், அதற்காக நியமிக்கப்பட்டவர்கள் பதிவுசெய்தனர். திருமறையின் முதலாவதாக இறங்கிய ஐந்து வசனங்களை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துணைவியார் அன்னை கதீஜா பிராட்டியார் அவர்களுக்கு ஓதிக் காண்பித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து ஹளரத் அபூபக்கர் (ரலி), ஹளரத் உமர் (ரலி), ஹளரத் உதுமான் (ரலி), ஹளரத் அலி (ரலி), ஹளரத் ஸைய்துப்னு ஸாபித் (ரலி), ஹளரத் இப்னு*கஅப்ஃ (ரலி), ஹளரத் அப்துல்லா இப்னுஸஅத் (ரலி), ஹளரத் ஜுபைர் இப்னுஅவாம் (ரலி), ஹளரத் காலித் இப்னுஸையீத் (ரலி), ஹளரத் அபான் இப்னு சயீத் (ரலி), ஹளரத் ஹன்லலா (ரலி), ஹளரத்மு அய்கிப் (ரலி), ஹளரத் அப்துல்லா இப்னு அர்கம் (ரலி), ஹளரத் ஸுர்ஹுல் (ரலி) போன்ற பெருமக்கள் பலராலும் திருமறை வசனங்கள் பதிவு செய்யப்பட்டது.**

ஆரம்பத்தில் ஒட்டகையின் பட்டை எலும்புகளிலும், ஈச்சமட்டைகளிலும், பேரீச்சமர ஓலைகளிலும், சிலேட்டுக் கற்களிலும், தோல்துண்டுகளிலும், கற்களிலும் திருகுர் ஆனின்வசனங்கள் பதிவு செய்யப்பட்டன. ஐரோப்பாவில் பிரசித்திபெற்ற ‘பூடலின்’ நூலகத்தில் திருகுர்ஆனின் வசனங்கள் எழுதப்பட்ட தோல் ஒன்று இன்றும் உள்ளது.

---

* இப்னு = மகன்

** மறுமலர்ச்சி 10வது ஆண்டுமலர், இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்.

ரகசியக் கூட்டங்கள்

மக்காவில் அதிக ஆதரவு இஸ்லாத்திற்கு இல்லாத வேளையில் ஹளரத் அர்கம் (ரலி) என்ற சஹாபியின் இல்லத்தில் முஸ்லிம்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏற்பாட்டின்படி கூடி இஸ்லாத்தைத் தழுவியும் திருகுர்ஆனை மனப்பாடம் செய்தும் வந்தார்கள்.

அல்லாஹ்வின்மீது ஈமான் (நம்பிக்கை) கொண்டும், அவனது திருத்தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலிலும் நம்பிக்கை கொண்ட எண்ணற்ற முஸ்லிம்களின் நெஞ்சத்திலும் திருகுர்ஆன் பதிவு செய்யப் பட்டுவந்தது.

மக்காவிலிருந்து மதீனாவிற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்றபோது, மதீனா மக்களின் நல்லாதரவு பெருமளவில் இருந்ததால் அங்கு பகிரங்கமாகவே திருகுர்ஆனை மனப்பாடம் செய்வதற்கான பயிற்சிக்கூடம் அமைத்து (மஸ்ஜிதே நபவி — நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கியிருந்த பள்ளிவாசல்) அங்கு தொழுகையும் நடத்தப்பட்டு, திருகுர்ஆனும் போதிக்கப்பட்டு வந்தது. ஹளரத் அப்துல்லா இப்னு மஸ்ஊத் (ரலி), ஹளரத் முஆத் இப்னு ஜபல் (ரலி), ஹளரத் உபை இப்னுகஅப் (ரலி) ஆகியோர்களைப் பெருமானார் (ஸல்) அவர்கள் அதற்காக தேர்வு செய்திருந்தார்கள்.

இந்த வகுப்புக்களின் வாயிலாகவும் பாடங்களைக் கற்றும், திருகுர்ஆனை மனப்பாடமாகவும் பலர் பயின் றார்கள்.

எமாமாச் சண்டை

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வபாத்திற்குப்பின் (மறைவிற்கு) முதல் கலீபா (ஜனாதிபதி) அபூபக்கர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் 'எமாமா' பிரதேசத்தின் 'முஸைலமா' என்ற போலிநபியின் கூட்டத்தார்களுக்கும்,

முஸ்லிம்களுக்கும் இடையே கடும்போர் உக்கிரமாக நடை பெற்றது. 'முஸைலமா'வும் அவரது ஆட்கள் பலரும் போரில் கொல்லப்பட்டனர். முஸ்லிம்களிலும் முக்கிய பல பிரமுகர்கள் இதில் ஷஹீது (போரில் வீரமரணம்) ஆயினர்; அவர்களில் பெரும்பாலானவர்கள் ஹாபிள்கள். (திரு குர்ஆனை மனப்பாடம் செய்து வைத்திருப்பவர்கள்)

'ஹாபிலுள் குர்ஆன்' (குர்ஆனைப் பாடமிட்டவர்கள்) என்றும், ஹாபிள்கள் (பாடமிட்டவர்கள்) என்றும் அழைக் கப்பட்ட எழுநூறுக்கு மேற்பட்ட ஹாபிள்கள் இந்தப் போரில் வீரமரணத்தைத் தழுவியிருந்தனர்.

எதிர்காலத்தில் தொடர்ந்து யுத்தங்கள் வரும் வேளை களில் இப்படி திருகுர்ஆனை மனப்பாடம் செய்திருப்பவர் கள் தொடர்ந்து வீரமரணத்தை எய்தும் நிலை வரக்கூடும் என்பதை அறிந்த ஹளரத் உமர் (ரலி) அவர்கள், ஹளரத் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் திருகுர்ஆன் முழுவதையும் ஒரே நூல் வடிவில் தொகுத்துப் பாதுகாத்திட வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்தார்கள்.

அபூபக்கர் (ரலி) அவர்களின் அரிய முயற்சி

கலீபா (ஜனாதிபதி) அபூபக்கர் (ரலி) அவர்கள் திருகுர்ஆனை ஸஹாபா பெருமக்களின் துணையோடு ஒரே நூலாக எழுதி முடித்தார்கள். திருகுர்ஆனை மனப் பாடம் செய்தவரும் பல வசனங்களைப் பதிவு செய்தவரு மான ஹளரத் ஜைதுப்னுஸாபித் (ரலி) அவர்களிடம் எழுதுகின்ற பொறுப்பு அளிக்கப்பட்டு அவர்கள் திருகுர் ஆன் பிரதியைத் தொகுத்தார்கள். அது ஹளரத் கலீபா அபூபக்கர் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களது காலத்திற்குப்பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இரண்டாவது கலீபா ஹளரத் உமர் (ரலி) அவர்களிடம் அந்தப் பிரதி இருந்து வந்தது. பின்னர் அவரது மகளும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருமைத் துணைவி யாருமான ஹளரத் ஹப்ஸா (ரலி) அவர்களிடம் அந்தப் பிரதியை ஒப்படைத்திருந்தார்கள்.

போர்க்களத்தில்

மூன்றாவது கலீபா ஹளரத் உதுமான் (ரலி) அவர்கள் காலத்தில் ஷாம், அர்மீனியா இராக், ஆஜர்பைஜான் ஆகிய யுத்தகளங்களில் அவர்கள் போரில் பெரும் வெற்றியைப்பெற்றார்கள். போர்க்காலத்தில் போர்க்களங்களில் பணியாற்றிய புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய முஸ்லிம் வீரர்கள் திருகுர்ஆனின் அமைப்புக்களை சரியாக அவர்கள் அறிந்திராத நிலையில், அவரவர்கள் இஷ்டப்படி அதனை வாசிக்கவும் எழுதவும் ஆரம்பித்தார்கள்.

ஏழு பிரதிகள் தயாரிக்கப்படல்

இதை அறிந்த ஹளரத் உதுமான் (ரலி) அவர்கள் அன்னை ஹப்ஸா நாயகி (ரலி) அவர்களுக்கு ஆள் அனுப்பி, அவர்களது கைவசமுள்ள திரு குர்ஆனின் பிரதியைத் தந்து உதவுமாறும், அதைப் பார்த்து பிரதிகள் எடுத்து விட்டு, அதற்குப் பின்னர் அசல் பிரதியைத் அவர்களிடமே, திரும்பும் ஒப்படைத்து விடுவதாகவும் சொல்லி மூலப்பிரதியைப் பெற்றுக் கொண்டார்கள். இந்த அசல் பிரதிக்கு உம்முல், 'குர்ஆன்' என்று பெயர்* ஹிஜ்ரி 30 ஆம் ஆண்டில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலேயே பொறுப்பில் இருந்த ஹளரத் ஜைதுப்னு ஸாபித் (ரலி) அவர்களது மேற்பார்வையில், ஹளரத் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) ஹளரத் ஸையீதிப்னு ஆஸ் (ரலி) ஹளரத் அப்துல்லா இப்னு ஹாரித் (ரலி) ஹளரத் இப்னு ஹிஷாம் (ரலி) ஆகியோர்களைக் கொண்ட குழுவினர் அரும் முயற்சிக்குப் பின் திருகுர் ஆனின் ஏழு பிரதிகளை எழுதி எடுத்தனர்.

பலர் பல பிரதிகள் அதிலிருந்து எழுதி எடுத்துக் கொண்டார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள்.

---

* பேட்டை 'ரஹ்மத்' பத்தாம் ஆண்டு சிறப்பு மலர்
திருகுர் ஆனும் அதன் ஒருங்கிணைப்பும் பக்கம் 111 மூலம் மவ்லானா அப்துல் ஹக்ஹக்கானீ தமிழில் மௌலவி A. சதக்கத்துல்லா (பாகவீத்திபே பாஜில்) கம்பம்

அப்துல் லாஹிப்னு மஸ்ஊத் (ரலி) ஆயிஷாரலியல்லாஹூ அன்ஹா அவர்களால் உரிமை விடப்பட்ட அடிமை அபூயூனூஸ், ஹப்ஸா நாயகி (ரலி) ஹளரத் அலி (ரலி) (அம்ருப்னு ராபி) ஆகியோர் ஆவார்கள். இது தவிர்த்து ஹளரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி) ஹளரத் அப்துல்லா ஹிப்னு உமர் (ரலி) ஹளரத் உபய்யிப்னு கஅப் (ரலி) ஆகியோரிடத்திலும் திருக்குர்ஆனின் கையெழுத்துப் பிரதிகள் இருந்தன.

பாதுகாப்புடன் இருக்கும் பழைய பிரதி

ஒரே ஒரு பிரதியை மாத்திரம் ஹளரத் உதுமான் (ரலி) அவர்களே வைத்திருந்தார்கள். அதுவே 'முஸ்ஹபே இமாம்' என்று அழைக்கப்பட்டது. அதனை ஓதிக் கொண்டிருக்கும்போது தான் அப்பெருமகனார் விரோதிகளால் தாக்கப்பட்டு வீரமரணத்தைத் தழுவினார் கள். திருமறையில் 'பஸயக்பீக ஹூமுல்லாஹூ' (அல்லாஹ் உமக்குப் போதுமானவன்) என்ற வசனத்தின் மீது அவர்களின் இரத்தம் தெளித்தது.

'மக்கா முகர்ரமா'வின் பிரபல அரபிக்கல்லூரியாகிய மத்ரஸா 'ஸௌலத்திய்யா'வின் நிர்வாகி மௌலானா முஹம்மது ஸஈது அவர்களின் ஹிஜ்ரி 1325 ஸபர் 18 ஆம் நாளிட்ட கடிதத்தின் மூலம் ஹளரத் உதுமான் (ரலி) அவர்களின் இரத்தச் சுவடு பட்ட, சிறிதும் பெரிதுமான காகிதங்களினால் எழுதப்பட்ட மரப்பட்டைகளால் பைண்டிங் செய்யப்பட்ட 'முஸ்ஹபே உத்மானி' என்ற திரு குர்ஆனின் பிரதி இன்னும் மதீனா 'முனவ்வரா'வில் இருப்பதை உறுதிப்படுத்துகிறது.

ஹளரத் உத்மான் (ரலி) அவர்களால் பஸரா அல்லது கூபா கவர்னருக்கு அனுப்பப்பட்ட முஸ்ஹப் - குர்ஆன் 'குர்துபா' (Gordoba) வுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஹிஜ்ரி 645 இல் அது முஃதளித் அரசருக்கு கிடைத்தது; அபுல்ஹசன், தில்மிஸானை (Tlemcen) வெற்றி கண்டபோது அவரது கைக்கு அது மாறியது.

ஹிஜ்ரி 745 இல் ஒரு வியாபாரியின் மூலமாக Fபாஸ் நகரில் அந்தப் பிரதி கிடைத்து, அரசாங்க கஜானாவில் நீண்டகாலமாக பாதுகாக்கப்பட்டு வந்தது.

ஹளரத் உத்மான் (ரலி) அவர்களால் பஸராவுக்கு அனுப்பப்பட்ட பிரதியை உலகம் சுற்றிய இப்னுபதூதா என்ற வரலாற்று ஆசிரியர், ஹிஜ்ரி 800 ஆம் ஆண்டு பஸராவின் (ஈராக்) ஜாமிஆ மஸ்ஜிதில் (பள்ளிவாசலில்) கண்டார். இறுதியாக

கி. பி. 1923 இல் சோவியத் ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவிற்கு இதே பிரதி சென்றது.

சோவியத் ரஷ்யாவின் தாஜ்கண்ட் நகர நூலகத்தில் இன்றளவும் அந்தப் பிரதி பாதுகாத்து வைக்கப்பட்டுவருகிறது.*

ஹளரத் உதுமான் (ரலி) அவர்கள் காலத்தில் காப்பியெடுக்கப்பட்ட திருகுர்ஆன் பிரதிகள் அவர்களின் ஆட்சியின் கீழிருந்த மிஸ்ர், கூபா, பஸரா (ஈராக்), மக்கா (சவுதி அரேபியா), சிரியா, எமன், பஹ்ரைன் ஆகிய நாடுகளின் கவர்னர்களுக்கு அனுப்பப்பட்டது.

ஹளரத் உதுமான் (ரலி) அவர்களின் காலத்தில் திருகுர்ஆன் பிரதிகள் பல எடுக்கப்பட்டு மீண்டும் புதுப்பிக்கப்பட்டதால், அவர்களுக்கு மக்கள் 'ஜாமிஉல் குர்ஆன்' (திருகுர்ஆனை ஒருங்கே திரட்டி வழங்கியவர்) என்று பட்டம் வழங்கினர்.

---

* மறுமலர்ச்சி 10வது ஆண்டு மலரில், இஸ்லாமிய கலைக்களஞ்சியம், (1961) அல்குர்ஆன் என்ற கட்டுரையில் பக் 10.

ஆதி எழுத்துக்கள்

அரபு தேசத்தின் தென்பாகத்திலும் மேல்பாகத்திலும் பூர்வகாலத்தில் பழக்கத்திலிருந்த 'நிப்தி'யென்ற எழுத்தே நாளடைவில் அபிவிருத்தியாகி அரபி எழுத்துக் களாக மாறியது என்று கூறப்படுகிறது. அந்த அரபி எழுத்தும் தற்காலம் நம்மிடமுள்ள திருகுர்ஆனின் எழுத்துக்களைப் போன்றதல்ல. அவ்வெழுத்துக்களில் ''சபர்'' (மேல் கோடு) சேர் (கீழ் கோடு) பேஷ் (மேல் வளைவுக் கோடு) நுகாத் (புள்ளிகள்) ஆகியவை இல்லாமலிருந்தன.

அக்காலத்திலிருந்த அரபிகள் இத்தகைய எழுத்துக் களை எத்தகைய சிரமமுன்றி திருத்தமாக எளிதில் வாசிக் கவும் எழுதவும் சக்தி வாய்ந்தவர்களாயிருந்தனர், அத்தகைய எழுத்தைக் கொண்டே திருகுர்ஆன் வசனங்கள் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்தில் எழுதப்பட்ட தாகத் தெரிய வருகின்றது. எனினும் இஸ்லாம் மார்க்கம் பல தேசங்களிலும் பரவிய பின்னர் அத்தேசங்களில் உள்ளவர்கள் இத்தகைய அரபி எழுத்துக்களைத் திருத்த மாக வாசிக்க முடியாமல் பல தவறுகள் இழைத்தனர். இதனை நிவர்த்திக்கும் பொருட்டு 'புள்ளிகள்' அமைக்கப் பெற்றன. பின்னும் பலர் தவறிழைக்க முற்பட்டதினால் ஒவ்வொரு எழுத்தின் மீதும் 'சபர், சேர், பேஷ், தஷ்தீத்' முதலிய குறிகள் இடப்பட்டன.*

எழுத்துச் சீர் திருத்தம்

நான்காவது கலீபா ஹளரத் அலீ (ரலி) அவர்கள் காலத்தில் மண்ணுக்கேற்ற இஸ்லாம் மார்க்கம் அந்நிய நாடுகளிலும் பரவியது. அங்குள்ள மக்கள் பிழையின்றி திருகுர்ஆனை ஓதுவதற்காக ஜேர், ஜபர், பேஷ் முதலிய அடையாளங்கள் ஹளரத் அபுல் அஸ்வதுத் தௌலியா (ரஹ்) அவர்களைக் கொண்டும் ஒற்றைப் புள்ளி,

* அல்லாமா ஆ கா. அப்துல் ஹமீது (பாகவி) எழுதிய, 'திரு குர்ஆனின் எழுத்து' என்ற கட்டுரையிலிருந்து.

இரட்டைப் புள்ளி முதலியவைகள் ஹளரத் நஸ்ருபனூ காஸிம் மில்லாத் (ரஹ்) அவர்களைக் கொண்டும் எழுதச் செய்யப்பட்டு இதன் மூலம் உலகத்தில் எல்லோரும் அரபி மொழியை சுலபமாகப் புரிந்து கொள்ளவும் பிழையற ஓதிடவும் வழிபிறந்தது.

இதன் காரணமாக அரபி மொழியை ஒரு சிறிதும் அறியாதோரும் எத்தகைய தவறுமின்றி திருத்தமாக மிக்க எளிதில் திருகுர்ஆனை வாசிக்க சாத்தியமாயிற்று. இம் முறையைப் பின்பற்றியே திருகுர்ஆனின் பிரதிகள் யாவும் தற்காலம் எழுதப்பட்டும், அச்சிடப்பட்டும் வருகின்றன.

இப்படி படிப்படியாக உலகம் முழுவதும் பரவிய திருகுர்ஆனின் பிரதிகள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் காணப்பட்டவாறே கூடுதல் குறைவின்றி, எத்தகைய மாற்றமுமின்றி இன்றளவும் இருந்து வருகிறது.

இறைவனால் அருளப்பட்ட இறைவேதம் இனி உலகம் இருக்கும் நாள் வரையிலும் அவ்வாறே இருந்து வரும் என்பதில் ஐயமே இல்லை. இது அல்லாஹ்வின் தீர்ப்பாகும்.

விண்மறைக்கு விரிவுரைசெய்தோர்

ஞானம் நிறைந்த நேர்வழிகாட்டியாம் திருகுர்ஆனை விரிவுரைகள் இல்லாமல் பொருளை மாத்திரம் தெரிந்து கொள்வதன்மூலம் போதிய விளக்கங்கள் பெற முடியாமல் போனதால், அரசர் அப்துல் மலிக் இப்னுமர்வான் கி. பி. 685-ல் ஹளரத் ஸையித் இப்னு ஜுபைர் (ரலி) அவர்களிடம் அரபியிலேயே விளக்கம் எழுதுமாறு கேட்டுக் கொண்டார்கள்; அதற்கான ஆதாரங்களையும் சூழ்நிலைகளையும் உருவாக்கியும் கொடுத்தார்கள். இதன்மூலம் அரபியிலேயே திரு குர்ஆனுக்கு பல விளக்கவுரைகள் வரத்துவங்கின.

ஹளரத் ஹஸன் பஸரி (ரஹ்)
ஹளரத் அத்தா இப்னுஸல்மா (ரஹ்)
ஹளரத் கதாதா, ஹளரத் ஜைதிப்னு அஸ்லம்
ஹளரத் அபூமாலிக் ஆகியோர் எழுதிய விளக்கவுரைகள் குறிப்பிடத்தக்கதாகும்.

ஜாமியுல் பயான் — முயினுத்தீன்
ரூஹுல் பயான் — மௌலானா ஷேக் இஸ்மாயீல்
ஜவாஹிர் — தன்தாவி
தப்ஸீர் கபீர் — பக்ருத்தீன் ராஜி
மதாரிக் — அப்துல்லா பின் அஹ்மத் நஸவி

ஜலாலுல்தீன் முஹம்மத் என்ற இரண்டு பெரியார்கள் தந்திட்ட 'ஜலாலைன்' ஆகிய விரிவுரைகள் உலகில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எல்லா அரபிக் கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு இதுவே குர்ஆன் விரிவுரையாகவும் கற்பிக்கப்பட்டு வருகிறது.

அல்லாஹ்வினால் அருளப் பெற்ற மாமறையாம், திரு குர்ஆனின் சொற் சிறப்பு, பொருள் நயம், கருத்துச் செறிவு, தத்துவ விளக்கம் ஆகிய தன்மைகளை விவேக

முடன் விரித்துரைத்து அவ் வான்மறையின் தீன் முழக்கம் திக்கெங்கும் பரவிடச் செய்த சான்றோர் பெரு மக்கள் பலர்.

விரிவுரையாளர்கள்

ஹளரத்	அப்துல்லாஹிப்னு மஸ்வூது (ரலி) ஹிஜ்ரீ	32
,,	அப்துல்லாஹிப்னு அப்பாஸ் (ரலி)	68
,,	அனஸிப்னு மாலிக் (ரலி)	93
,,	அப்துல்லாஹிப்னு ஜுபைர் (ரலி)	93
,,	அப்துல்லாஹிப்னு அம்ர் (ரலி)	53
,,	ஸயீதிப்னு ஜுபைர் (ரலி)	70
,,	அல்ஆலியா ரியாஹீ (ரஹ்)	90
,,	ஜாபிரிப்னு அப்துல்லாஹ் (ரலி)	94
,,	அபூ அப்துற்றஹ்மான் தாவூஸ் (ரஹ்)	104
,,	முஹம்மதுபாகி (ரஹ்) இப்னுஹளரத் (அலி)	104
,,	இப்னுஷிஹாப் ஜஹ்ரீ (ரஹ்)	114
,,	கைஸிப்னு முஸ்லிமுல் ஜதலி (ரஹ்)	110
,,	அதிய்யதிப்னு ஸயீது (ரஹ்)	110
,,	ஹாபிள்கதாதாப்னு ஆம்மா	117
,,	இக்ரிமா இப்னு அப்துல்லாஹ்	117
,,	ஜைதிப்னு அஸ்லம்	136
,,	ரபீஃ இப்னு அனஸ்	136
,,	அபுன்னஸ்ர் முஹம்மது	146
,,	அபுல்ஹஸன் முகாதல்	150
,,	ஷுஃபதிப்னு ஹஜ்ஜாஜ்	160
,,	வகீஃப்னுல் ஜரஹ்	197
,,	அஹ்மதிப்னு தாஊது	209
,,	அப்துற்றஜ்ஜாக்இப்னுஹமாம்	211
,,	யஜீதிப்னுஹாரூன்	217
,,	ஆதமிப்னு அயாஸ் அஸ்கலானி (ரஹ்)	220
,,	அபூயஃகூப் இஸ்ஹாக் நகஈ	238
,,	அபூபக்ருந்நக்காஷ்	295
,,	ஹாபிள் அபூஅப்துல்லாஹ்முஹம்மது கஜ்வீனி	273

ஹளரத் காஜீ இப்ருஹீம் நஸபீ 295
,, அபூஇஸ்ஹாக் நய்ஷாபூரி 303
,, அபூஜஃபர் முஹம்மது ப்னுஜரீருத்திப்ரி 310
,, அபூபக்ரு முஹம்மது நய்ஷாபூரி (ரஹ்) (தப்ஸீர் இப்னுல் முன் திர்) 318
,, அபூஇஸ்ஹாக் இப்ருஹீம் (ரஹ்) (தப்ஸீருஜ்ஜஜ்ஜாஜ்) 310
,, அபுல்ஹஸன் அலி (தப்ஸீரே அபில்ஹஸன்) 340
,, அப்துற்றஹ்மானிப்னு அபீஹாதம் (ரஹ்) (தப்ஸீருல்முன் திர் 12 வால்யூம்கள்) 327
,, ஹாபிள் அபீபக்ரு அப்துல்லாஹ் (ரஹ்) (தப்ஸீருஇப்னு அபீஷய்பா) 333
,, முஹம்மதிப்னு ஹஸன் மோசலீ (ரஹ்) (தப்ஸீரு ஷிபஸ்ஸதூர்) 351
,, ஹாபிஜ் அபூஅப்துல்லாஹ் முஹம்மது (ரஹ்) (தப்ஸீர் இப்னு ஹப்பான்) 357
,, அபூபக்ரு முஹம்மதுப்னு அலி (ரஹ்) 365
,, முஹம்மது இப்னு அப்துல்லாஹ் காஜீ (ரஹ்) 380
,, முஹம்மதிப்னு அப்துல்லாஹ் ஸஅதி ...
,, அப்துல்லாஹிப்னு அதீய்யா திமஷ்கீ (ரஹ்) 383
,, நளூரிப்னு முஹம்மது ஸமர்கந்தீ 383
,, அப்துல்லாஹிப்னு முஹம்மது 387
,, அஹ்மதிப்னுபாரிஸி(தப்ஸீரேஜாமிவுத்தஃவீல்)395
,, அபூஅப்திில்லாஹில் அஸ்ரி 399
,, ஹஸனிப்னு அப்துல்லாஹ் 400
,, அபூபக்ரு முஹம்மதுப்னு தய்யிப் 403
,, அபூபக்ரு முஹம்மதிப்னு ஹஸன் 406
,, ஆபூபக்ரு அஹ்மதிப்னு மூஸா 410
,, அப்துற்றஹ்மானிப்னு மர்வான் 414
,, அஹ்மதிப்னு முஹம்மது நய்ஷாபூரி 427
,, அஹ்மதிப்னு முஹம்மது முகாபரீ 429
,, அலீஇப்னு இப்ருஹீம் மிஸ்ரீ 430
,, இஸ்மாயிலிப்னு அஹ்மத் 430

ஹஜ்ரத் அபூதாஹிர் இப்ருஹீம் இப்னு அஹ்மத் 436
,, அப்துல்லாஹிப்னு யூசுப் ...
,, அபூமுஹம்மதுல் ஜுவைனி 438
,, அஹ்மதிப்னு முஹம்மது உந்துலுஸி 440
,, காஜீ அபுல்ஹஸன் ஷாபிஈ 450
,, அபுல்ஹஸன் அபித்தய்யிப் அலி 456
(தப்ஸீரே கபிர் 30பாகம் தப்ஸீரே அவ்ஸத் 10 பாகம்)
,, அபூமுஸ்லிம் இஸ்பஹானி (20 வால்யூம்) 459
,, அலி இப்னு அஹ்மது நைஷாபூரி 468
(தீவானே முதனப்பீ நூலுக்கு விரிவுரை செய்தவர்)
,, அலீப்னு புளால் தமீமிரஹ் (புள்ளிகளின் கணக்குகளையும் தந்துள்ளார்) 479
,, ஸுலைமான ப்னு கலப் காஜி (ரஹ்) 474
,, அப்துஸ்ஸலாமிப்னு முஹம்மது (ரஹ்) [500 வால்யூம் கொண்ட தப்சீர் அல்ஹம்து ஸூரா வுக்கு மட்டும் 7 பாகம்] 483
ஹஸனிப்னுல் பத்ஹிஷிராஜி (ரஹ்] 500
,, அபூஹாமீது ஜைனுத்தீன் கஜ்ஜாலி 505
,, முஹ்யுஸ்ஸுன்னத் அபூமுஹம்மது ஹஸனுல் பகவீ (ரஹ்) [மஸா பீஹின் ஆசிரியர்] 516
,, ஹாபிள் அப்துல்லாஹ் உந்துலுஸி (ரஹ்) [தப்ஸீரே அபீஹம்ஜா] 525
,, அபுல்காஸிம் ஜாருல்லாஹ் ஜமக்ஷரி [தபுஸீரே கஷ்ஷாப்] 538
,, அப்துல்கபீரிப்னு முஹம்மது காபீகீ 536
,, அபூபக்ரிப்னு அரபீ (ரஹ்) [தப்ஸீரே அஹ்காமுல் குர்ஆன்] 543
,, அலீ இப்னு அப்துல்லாஹ் ஜுதாமி (ரஹ்) 532
,, அபூஇஸ்ஹாக் இப்றாஹீம் ஷய்பானி 533
,, அபூஜஃபருல் பைஹகீ 544

ஹளரத் அபூ அப்துல்லாஹ் புகாரீ (ரஹ்) [ஸஹீஹுல் புகாரி நூலின் ஆசிரியர்] அன்னாருடைய தப்ஸீர் ஆயிரம் வால்யூம்கள் என 'ஸம்ஆனி' எனும் பெரியார் எழுதுகிறார். 546

" அபூஹாஷிம் ஷம்ஷுத்தீன் ஸகபீ (ரஹ்) [தப்ஸீர் இப்னுளுபர்] 565

" நஸ்ரிப்னு அலி ஷிராஜி (ரஹ்) [தப்ஸீரே இப்னுமர்யம்] 565

" நஸ்ரிப்னு அகீல் பக்தாதி (ரஹ்) 567

" அபுல்ஹஸனிப்னுன் னிஅமா 567

" ஸஅதிப்னு முபாரக் நஹ்வீ 569

" அபுல்காஸிம் அஹ்மதிப்னு முஹம்மது ரஹ் 586

" இஸ்மாயீலுப்னு நாஸிர் 586

" அபுல் கைர் அஹமது கிஜ்வீனி 590

" ஷைக் அபூமுஹம்மது ஷீராஜீ 606
[அராயிஸுல் பயான்-பீ-ஹகாயிகுல் குர்ஆன்]

" அபூஅப்துல்லாஹ் முஹம்மது ரஹ் (பக்ருத்தீன் ராஜீ) 606

" அப்துல் ஜலீலிப்னு மூஸாகுர்துபீ ரஹ் 607

" அலியிப்னு அப்துல்லாஹிப்னு முபாரக் 615

" முஹிப்புத் தீன் அபுல்பகா பக்தாதீ 616

" ஷைக் அக்பர் முஹ்யித்தின் இப்னுல் அரபி 638
[90 வால்யூமில் இவரது விரிவுரை]

" ஷம்ஸுத்தீன் அபுல் முளப்பர் யூஸுப் ரஹ் [தப்ஸீர் இப்னே ஜவ்ஜீ] 654

" நஜ்முத்தீன் அபூபக்ரு அப்துல்லாஹ் 660

" முவாபிருத்தீன் அஹ்மதிப்னு யூஸுப் மோசலீ 680

" ஜலாலுத்தீன் அபூமுஹம்மது அப்துல் ஜப்பார் பக்தாதி ரஹ் 618

" அப்துற்றஹ்மானிப்னு உமர் ஹன்பலீ ரஹ் 684

ஹளரத் நாஸிருத்தீன், அபுல்கைரு, அப்துல்லாஹ்
பைளாவீ (ஷிராஜ்) ரஹ் 685

,, ஜமாலுத்தீன் முஹம்மது முக்த்தஸீ ரஹ் 698
[100 வால்யூமில் இவரது விரிவுரை]

,, முஹம்மதிப்னு உமர் குர்துபீ ரஹ் 631

,, அப்துற்றஜ்ஜாக் இப்னு அர்ஜூக் 661

,, ஹஸன் இப்னு முஹம்மது தீபீ [தப்ஸிர் தீபீ] ...

,, அஹ்மதிப்னு யூஸூப் மோஸலி 680

,, அபுல் பரகாத் அப்துல்லாஹ் இப்னு அஹ்மது
நஸபீ ரஹ் [தப்ஸீர் மதாரிகுத்தன்ஜீல்) 710

,, முஹம்மதிப்னு மஸ்வூத் ரஹ் 710

,, அப்துல்லாஹ் இப்னு இமாம்அலி 730
[''காஜின்'' எனும் நூலின் ஆசிரியர்]

,, தகியுத்தீன் அஹ்மதிப்னு அப்துல் ஹகீம் ரஹ் 728

,, அபுல்பிதா இஸ்மாயீலிப்னு உமர்திமஷ்கீ 774
[தப்ஸீரே இப்னுகதீர் இவருடையது]

,, ஸஅதுத்தீன் மஸ்வூதிப்னு உமர் தப்தாஜானி 792

,, முஹம்மதிப்னு அரபதுல்மாலிகி ரஹ் 803
[தப்ஸீரே இப்னு அரபா]

,, அலியிப்னு ஷைகு ஷாபிஈ (பம்பஈ) 825
[தப்ஸீருர் ரஹ்மான்-பீ.தய்ஸீரில் மன்னான்
எனும் தப்ஸீர் இவருடையது]

,, காஜீ ஷிஹாபுத்தீன் [தவ்லத் ஆபாதீ] ரஹ் 842

,, ஜலாலுத்தீனிப்னு முஹம்மது மஹல்லீ ரஹ் 864

,, ஹஸன் சலபீ ஹனபீ [-ப-அகீ-ஜாதா] 886
[பைளாவீ ஷரீபுக்கு ஓர் [ஹாஷியா]
விரிவுரையும் செய்துள்ளார்கள்]

,, ஷைகு நூருத்தீன் ஸய்யிதுமுஈன் ரஹ் 894
[தப்ஸீர் ஜாமிவுல் பயான்]

,, முல்லா கமாலுத்தீன் ஹுஸைனிப்னுஅலி 910
[தப்ஸீர் ஹுஸைனி]

ஹளரத் ஜலாலுத்தீன் அப்துற்றஹ்மான் ஸுயூத்தி 911
[ஜம்வுல் ஜவாமிவு, துர்ருல்மன்தூர்
ஆகியவையும் இவர்களின் படைப்பே]

,, அஹ்மதிப்னு ஸல் மானிப்னு கமால் ரஹ்
[தப்ஸீரே இப்னுகமால்] 940

,, முஹம்மதிப்னு முஸ்லிஹுத்தீன் ஷைகுஜாதா 951
ரஹ் [பைளாவி ஷரீபை 6 வால்யூம்களில்
விரித்துரைத்துள்ளார்கள்]

,, முஹம்மதிப்னு முஸ்தபா ரஹ் 986

,, பைஜீ இப்னு ஷைகு முபாரக் அக்பராபாதி 1004

,, மீர்பத்ஹுல்லாஹ் ஷீராஜீ ரஹ்
[அக்பரின் காலத்தில் இருந்தவர்] 997

,, முல்லா அப்துல் ஹகீம் [ஸியால்கோட்] ரஹ் 1067
[ஜஹாங்கீரின் மானியம் பெற்றவர்]

,, ஷிஹாபுத்தீன் அஹ்மது கிபாஜீ 1070
[பைளாவீ ஷரீபுக்கு 30 வால்யூம்களில்
விரிவுரை எழுதியுள்ளார்]

,, ஷைகு அஹ்மது [முல்லா ஜீவன்] ரஹ் 1030
[அவ்ரங்கஜேபின் ஆசிரியர்: நூருல் அன்வார்
தப்ஸீரே அஹ்மதீ ஆகிய நூல்களின் கர்த்தா]

,, இஸ்மாயீல் ஹனபீ அபந்தீ ரஹ் 1130
[4 பெரிய பைண்டுகள் கொண்ட தப்ஸீர்
ரூஹுல் பயானின் ஆசிரியர்]

,, ஷிஹாபுத்தீன் ஸய்யிது மஹ்மூதிப்னு
அப்துல்லாஹ் ஆலூஸி ரஹ் 1170
[தப்ஸீரே ரூஹுல் மஆனியின் ஆசிரியர்]

,, ஷாஹ் வலியுல்லாஹ்இப்னு அப்துற்றஹீம்
[ரஹ்] 1174

,, முப்தீ ஸயீத் ஆலிம் இஸ்ராயீலி

,, காஜி தனாவுல்லாஹ் [பானிபாட்] 1225

,, ஸலாமுல்லாஹிப்னு ஷைகு இஸ்லாம் 1233
[தப்ஸீருல் ஜலாலைனுக்கு ''கமாலைன்''
என்று விரிவுரை தந்தவர்]

ஹளரத் ஷாஹ் அப்துல் அஜீஸிப்னு ஷாஹ் வலியுல்லாஹ் ரஹ் 1239

,, அபுல்பரகாத்ருக்னுதீன் முஹம்மதுதுராப்அலி [லக்னவீ] ரஹ் 1281

,, அமீருல்முல்க் மவ்லவீ ஸய்யது ஸீத்தீக்ஹஸன் போபாலி ரஹ் 1890

,, ஸர். ஸய்யிது அஹ்மது கான் ரஹ் 1898

,, மவ்லவீ அப்துல் ஹக் ஹக்காளிப்னு முஹம்மது அமீர் ரஹ் 1349
[உர்து தப்ஸீர் ஹக்கானியின் ஆசிரியர் கடைசி காலத்தில் கல்கத்தா காலேஜில் பேராசிரியராகப் பணியாற்றினார்கள்]

,, ஹமீதுத்தீன் ஆஜம் காடி [B.A. ரஹ்

,, மவ்லானு அஷ்ரப் அலி தானவீ [ரஹ்]

,, ஸய்யிது அப்துல் மஜீது அபுல் அலாயீ ரஹ்

,, மவ்லானு ஸஆததுல்லா ரஹ் [பேராசிரியர்]

,, காஜா ஹஸன் நிஜாமீ திஹ்லவீ ரஹ்

இவர்களைப் போன்ற அறிஞர் பெரு மக்களின் அரிய முயற்சிகளினுல், நாளும் நாளும் விண் மறைக்கு விரிவுரை கள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றன. *

---

* 'குர்ஆனின் குரல்' பத்தாம் ஆண்டு மலரில் மவ்லவி முஹம்மது அஷ்ரப் அலி பக்கம் 37, 38, 215, 217.

மெய்யான வேதத்தின் பிற மொழி பெயர்ப்புகள்

மேற்கத்திய மொழிகளில் முதன்மையாக திருகுர் ஆனை மொழி பெயர்க்கும் எண்ணம் பிரான்சு தேசத்து அறிஞர் 'பத்ரஸ் நராபுலுஸ்' என்பாருக்கு உதயமாயிற்று. அவர் இலத்தீன் மொழியில் மொழி பெயர்ப்பைத் தொடங்கினார். கி. பி. 1157இல் அவர் மரணமடைந்த தால்அந்த மொழிபெயர்ப்புப் பணி நிறைவடையவில்லை.

மிஸ்டர் ராபர்ட் டீனியா என்ற ஆங்கிலேயரும்,'ஹர்மன் ஆவர்' என்ற ஜெர்மானியரும் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்து கி.பி. 1242இல் நிறைவு செய்தனர். ஆனால் அந்த மொழி பெயர்ப்பு நானூறு வருட காலத்திற்கு மேலாகவே முடங்கிக் கிடந்தது.

இலத்தீன் மொழியில் இனிய திருமறை

கி.பி. 1543இல் 'டியூட்பீலி இன்டூ' என்பவர் நானூறு ஆண்டுகளாக முடங்கிக்கிடந்த திருகுர்ஆனின் மொழி பெயர்ப்பை முதன் முறையாக சுவிட்சர்லாந்தில் வைத்து அச்சிட்டு வெளியிட்டார். தொடர்ந்து பல பதிப்புக்கள் இது வெளி வந்தது.

இந்தப் பிரதியிலிருந்தே திருகுர்ஆனை மொழி பெயர்த்து இத்தாலி, ஜெர்மன், டச்சு முதலிய மொழி களில் வெளியிடப்பட்டது.

அனுாஸன் ட்யர்ஸ்திஹம் என்ற போப்பாண்டவரின் நண்பரான '∴ பாவர்லியூஸ் மார்கஷீ' என்பவர் கி.பி. 1698 இல் இத்தாலியின் 'புத்தூ' எனும் நகரிலிருந்து இலத்தீனில் மற்றுமொரு திருகுர்ஆன் மொழி பெயர்ப்பை வெளியிட்டார்.

கி. பி. 1768இல் நீதிபதி 'பரீத்ரதஸ்கஸ் பர்வரீப்' என்பவரால் இலத்தீனில் திருகுர்ஆன் மூன்றாவது மொழி பெயர்ப்பு வெளியிடப்பட்டது.

பிரான்சு மொழியில் பெருமைக்குரிய வேதம்

கி.பி. 1648இல் 'இண்டர்லுத்டாயர்' என்பவர் பாரிசில் அச்சிட்டு திருகுர்ஆனின் பிரெஞ்சுமொழி பெயர்ப்பை வெளியிட்டார்.

கி.பி. 1651, 1669, 1673ஆம் ஆண்டுகளில் லாகாய் நகரிலிருந்தும், கி.பி. 1683ஆம் ஆண்டில் பெர்னிலிருந்தும் திருகுர்ஆனின் மொழி பெயர்ப்புக்கள் வெளிவந்தன.

காசிமிர்ஸ்கை (Kasimrsky) பாரீஸ் என்பவர் 1829லும், E. மண்டெட் பாரீஸ் என்பவர் 1925லும், O. பெஸ்ல் இடாட்ஜானி (Pesle Etaadjani) என்பவர் 1936லும், R. புளூச்சர் (Bluchere) என்பவர் 1947லும் திருகுர்ஆனை பிரெஞ்சில் மொழிபெயர்த்து வெளியிட்டனர்.

கிரேக்கமொழி

கிரேக்கமொழியில் திருகுர்ஆனின் ஒரே ஒரு மொழி பெயர்ப்பைத்தான் அறியமுடிகிறது, 'ஜோன் பட்பாக்கீ' என்பவர் திருகுர்ஆனை மொழிபெயர்த்து கி.பி. 1880இல் ஏதென்ஸிலிருந்து வெளியிட்டார். பின்னர் கி. பி. 1886, 1926 ஆம் ஆண்டுகளில் அதன் மறுபதிப்புக்கள் வெளிவந்தன.

சுவீடஷ்

கி.பி. 1843இல் இஸ்டக்ஹாலம் என்ற நகரிலிருந்து ஸன்டூலப் என்பவரின் திருகுர்ஆனின் மொழிபெயர்ப்பு சுவீடஷ் மொழியில் வெளியானது, கி. பி. 1846-ல் இலண்டனிலிருந்து ‘டோர் புஸ்ரக்’ என்பவரது மொழி பெயர்ப்பும், கி. பி. 1917-ல் ‘ஸ்டர்டீன்’ என்பவரது மொழிபெயர்ப்பு. ஸ்டாக்ஹாலமியிலிருந்தும் வெளிடப் பட்டது.

போலந்து

புர்சிகீனூன் என்பவர் போலந்தில் திருகுர்ஆனை மொழிபெயர்த்து அரதாராசாவில் வைத்து வெளியிட்டார்.

ஹீப்ரு (அப்ரானீ)

யாகூப் இப்னு இஸ்ராயீல் ஹீப்ரு மொழியில் திரு குர்ஆனை மொழிபெயர்த்தார்.

கி. பி. 1928-ல் ‘லீபா’விலிருந்து ‘‘ஹர்மன் ரெகன்ட்ரூப்’’ என்பவரது திருகுர்ஆன் மொழிபெயர்ப்பு வெளிவந்தது.

பைத்துல்முகத்தஸில் பொன் எழுத்துக்களில் அச்சிடப் பெற்று பீலின் என்பவர் எழுதிய திருகுர்ஆன் மொழி பெயர்ப்பு வெளிவந்தது.

இத்தாலிய மொழியில் இறைவேதம்

கி. பி. 1547-ல் ஹீனன் என்பவர் திருகுர்ஆனை இத்தாலியில் மொழிபெயர்த்தார். கி. பி. 1547-ல் சூல்சூ என்பவரின் மொழிபெயர்ப்பு வெளியாயிற்று.

கி. பி. 1612-13-ம் ஆண்டுகளில் பனீரஸி எழுதிய மூன்றாவது முக்கிய மொழிபெயர்ப்பும் வெளியானது. கி. பி. 1912-ல் ரோமில் புயூலாண்டி என்பவரின் மொழி பெயர்ப்பும் பிரசுரமாயிற்று. ஃபிரான்ஸி மொழியில் பரானஜீ என்பவர் 1913-ல் திருகுர்ஆனை மொழிபெயர்த் தார். அது 1916-ல் வெளிவந்தது.

பாரி என்னும் நகரில் ஃப்ரோஜ் என்பாரின் மொழி பெயர்ப்பு வெளியாயிற்று. கி, பி. 1929-ல் போட்லீ என்பவரால் திருகுர்ஆன் மொழிபெயர்க்கப்பட்டு மைலான் என்ற நகரில் பிரசுரிக்கப்பட்டது. பெர்த்காலீ மொழியில் கி. பி. 1882-ல் திருகுர்ஆன் மொழிபெயர்க்கப் பட்டு பிரான்சிலிருந்து வெளிவந்தது.

ஹஸ்பானியா

திருகுர்ஆனின் சூரத்துல் இஸ்ராவரை ஹகீம் இப்ராஹீம் என்பவர் ஹஸ்பானியா மொழியில் மொழி பெயர்த்தார். ஆனால், கி. பி. 1844-ல் மீடர்டிலிருந்து டீருஸ் என்பவர்தான் முதன்முதலில் முழு மொழிபெயர்ப் பையும் வெளியிட்டார். கி. பி. 1875-ல் பர்ஜியூன்டத் என்பவர் தனது மொழிபெயர்ப்பை மீதர்டில் பிரசுரித்தார். கி. பி. 1876-ல் ஆர்டர்ஸ் என்பவர் மற்றொரு மொழி பெயர்ப்பை பார்ஸகூனாவிலிருந்து வெளியிட்டார். கி. பி. 1908-ல் பராபூ எழுதிய மொழிபெயர்ப்பு பார்சி லோனாவில் பிரசுரமாயிற்று. காடூ என்பவருடைய மொழிபெயர்ப்பு மீடர்ட் நகரிலிருந்து கி. பி. 1913-ல் வெளிவந்தது. தொடர்ந்து பல்வேறு பதிப்புக்கள் வெளி யாயின. கி. பி. 1895-ல் மீகூலுபீராயிஸ் என்பவர், ஸரூபாயி மொழியில் திருகுர்ஆனை மொழிபெயர்த்து பெல்கிரேடில் அச்சிட்டு வெளியிட்டார். அலிப் மீம் காப் என்பார் அல்பேனி மொழியில் திருகுர்ஆனை மொழி பெயர்த்து வெளியிட்டார்.

டென்மார்க்

கோபன் ஹேகனிலிருந்து கி. பி. 1919-ல் பேடரஸன் என்பவர் டென்மார்க் மொழியில் மொழிபெயர்த்த திரு குர்ஆன் வெளிவந்தது.

அர்மீனி

அமீர் கானியா என்பவர் அர்மீனிய மொழியில் திரு குர்ஆனை மொழிபெயர்த்து கி. பி. 1909-ல் வெளி

யிட்டார். கி. பி. 1911-ல் லார்த்தர் எழுதிய மொழி பெயர்ப்பும், கி. பி. 1912-ல் கோரப்னியான் செய்த மொழிபெயர்ப்பும் அர்மீனிய மொழியில் வெளிவந்தது.

ஜெர்மனி

கி. பி. 1862இல் L. உல்மன், கி. பி. 1883இல் F. ஏக்கெர்ட், கி. பி. 1890இல் கலாம்ரத், கி. பி. 1901இல் M. ஹென்னிங், கி. பி. 1916இல் L. கோல்ட் ஸ்கிமிட் ஆகியோர் திருகுர்ஆனை ஜெர்மானிய மொழியில் மொழி பெயர்த்து உள்ளனர். கி. பி. 1940இல் மௌலானா சத்ருத்தீன் திருகுர்ஆனை ஜெர்மானிய மொழியில் வெளி யிட்டார்கள்.

மோலேரிய மொழியில் ஜெட்டர்ஸ்டின் 1917இலும், மர்வியெல்த் என்பவர் 1948இலும் திருகுர்ஆனை மொழி பெயர்த்துள்ளார்கள். மால்டா பல்கலைக்கழகம் மால்ஷீய மொழியிலும் பேராசிரியர் லெக்கோடின், ஹுஸிய மொழி யில் ஆதம் இப்னு முஹம்மது என்ற ஆப்பிரிக்கரும், அபிசீனிய மொழியில் ராஷிக் அந்தோணி என்ற ஆப்பிரிக் கரும் திருகுர்ஆனை மொழி பெயர்த்துள்ளார்கள்.

பல்கேரி

கி.பி. 1933இல் ஸுபியாவிலிருந்து, பல்கேரி மொழி யில் திருகுர்ஆன் டூமுப், ககூலப் என்ற இரு ஆசிரியர் களால் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டது.

பூஹீமியா

ஃ பீலி என்பவர் 1923லும், நீகல் என்பவர் 1925லும் பூஹீமியா மொழியில் திருகுர்ஆனை மொழி பெயர்த்து ‘புராகி’லிருந்து வெளியிட்டனர்.

ரூமானி மொழியில் திருகுர்ஆனை கி. பி. 1912இல் அல்யூயகல் மொழி பெயர்த்தார்.

அர்கோனி மொழியில் திருகுர்ஆனை ஜான் ஏண்டர்ஸ் மொழி பெயர்த்தார்.

ஹங்கேரி

ரோட்மாயரன் கட்யூன் என்பவர் ஹங்கேரி மொழியில் திருகுர்ஆனை மொழிபெயர்த்து கி.பி. 1854இல் வெளியிட்டார்.

டச்சு

கி.பி. 1661இல் சுவீகர் என்பவர் டச்சு மொழியில் முதன்முதலாக திருகுர்ஆனை மொழிபெயர்த்து 'ஹம்பிரகில்' வெளியிட்டார்.

கி.பி. 1658இல் கிளாஸ்ட்மாரா என்பவர் திரு குர்ஆனை மொழிபெயர்த்து லண்டனில் பதிப்பித்தார்.

கி.பி. 1789இல் நப்ஸ் என்பவர் திருகுர்ஆனை மொழி பெயர்த்தார் அது பாகியாத் நகரிலிருந்து வெளிவந்தது. கி.பி. 1860இல் டாக்டர் குர்ஸு திருகுர்ஆனை டச்சு மொழியில் மொழிபெயர்த்து, ஹாரம் நகரிலிருந்து வெளி யிட்டார், கி.பி. 1935இல் மிர்ஜாஒலி அஹ்மத்பேக் என்பவர் திருகுர்ஆனை டச்சு மொழியில் மேலும் மொழி பெயர்த்தார். ஜாவீ மொழியில் யஹுதியா என்பவர் 1903 இல் திருகுர்ஆனை மொழிபெயர்த்து 'சுமத்ரா'வில் பிரசுரம் செய்தார்.

சுமாங்க் என்பவர் ஜாவீ மொழியில் 1913இல் மற்றொரு மொழி பெயர்ப்பைச் செய்தார்.

ஜப்பான்

கி.பி. 1926இல் ஜப்பான் மொழியில் திருகுர்ஆனை கென்இச்சிசகா மோடா மொழிபெயர்த்தார். அதைத் தொடர்ந்து சோரதஹ்ஹாதி, அபோடோ அரிகா, மீஜுஹோயா மாகுஷி ஆகியோர் ஜப்பான் மொழியில் திருகுர்ஆனை மொழிபெயர்த்தனர்.

கி.பி. 1950இல் டாக்டர் ஷுமேயே ஓஹ்காவா என்பவர் ஜப்பானிய மொழியில் திருகுர்ஆனை மொழி பெயர்த்தது பெருஞ்சிறப்பு பெற்றதாகக் கருதப்படுகிறது அகாஜ்உமர் மத்யாஸாவல் ஜப்பானிய மொழியில் ராபி ததே ஆலமே இஸ்லாமி என்று மொழிபெயர்த்துள்ளார்.

சீன மொழியில் சங்கைக்குரிய வேதம்

கி.பி. 1923இல் ஊபன்ஜோத்வா ஜுர்ஜுஸ் என்பவர் திருகுர்ஆனை சீன மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டார், கி.பி. 1931இல் சிங்காயி மாகாணத்தி லிருந்து ஜுன்ஜாக் என்பவரின் மொழிபெயர்ப்பு வெளியாயிற்று. 1935இல் பாத்மன் ஜுன்ஜன்க் என்பவரது சீன மொழிபெயர்ப்பும், 1937இல் பீஜன்க் என்பவரது சீன மொழிபெயர்ப்பும் வெளிவந்தது.

துருக்கி

ஹளரத் இப்ராஹிம் அலீ என்பவர் எழுதிய தர்ஜுமத்துல் குர்ஆன் துருக்கி மொழியில் வெளிவந்தது.

பாதூமீ மொழியில் ஒரேயொரு மொழிபெயர்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

புஷ்ட்டு மொழியில் 1919இல் ஒரு மொழிபெயர்ப்பு வெளியானது.

பார்சீ

ஷைகுஸ அதி அவர்களின் மொழி பெயர்ப்பே திருகுர் ஆனின் பார்சீ முதல் மொழி பெயர்ப்பாகும். இந்தியாவில் முதன் முதலில் பார்சீ மொழியில் வெளி வந்த மொழி பெயர்ப்பு ஹளரத் ஷாஹ்வலியுல்லாஹ் திஹ்லவீ அவர் களுடையதாகும். பாரசீக மொழிக்கு செல்வாக்கு இருந்த காலத்தில் பார்சீயில் மொழி பெயர்த்த போதிலும், மக்கள் உருதுவையே அறிந்திருந்ததால், உருது மொழியில் மொழி பெயர்க்க வேண்டிய சூழ்நிலை உருவானது.

உருது:-

திருகுர்ஆனின் மொழி பெயர்ப்புக்கள் உருது மொழியில் ஏராளமாக வெளி வந்துள்ளது. முதன் முதலில் மௌலானா பதீஹு¬த்தின் சாஹிப் அவர்கள் விளக்கவுரை இல்லாத மொழி பெயர்ப்பை வெளியிட்டார்கள். பின் விளக்கவுரையுடன் ஹளரத் ஷாஹ் அப்துல் காதிர் அவர்களுடைய சிறந்த மொழி பெயர்ப்பு வெளி வந்தது. மௌலானா ரபீ உத்தீன், மௌலானா நதீர் அஹ்மத் திஹ்லவீ, மௌலானா அஹ்மதுரிஸாகான் ஸாஹிப் பரேலவி, மௌலானா பத்ஹு¬முஹம்மது ஜாலந்தரி மௌலானா மஹ்மூதுல் ஹஸன், மௌலானா அஷ்ரப் அலி தானவீ, மௌலானா மஸ்தூதி ஸய்யித் ஹகீம் யாசீன், அல்லாமா ஷாஹ் ஸீப்லி நுஃமானி, மௌலானா அபுல் ஜலால் நத்வி, மௌலானா அப்துல் மாஜித்தர்யாபாதி, மௌலானா ஷபீர் அஹ்மது உஸ்மானி மௌலானா அபுல் கலாம் ஆஸாத் போன்றவர்கள் திருகுர்ஆனை உருது மொழியில் மொழி பெயர்த்தனர். இன்றும் அந்த மொழி பெயர்ப்புப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கிறிஸ்தவ மிஷன் செய்த மொழி பெயர்ப்பு

ரோமன் உருதுவில் 'இமாமுத்தீன் மொழிபெயர்த்து, அலஹாபாத்திலிருந்து திருகுர்ஆனை கிறிஸ்ஜன் மிஷன் பிரஸ் வெளியிட்டது.

டென்மார்க்

திருகுர்ஆனுக்கு F.R. துல் என்பவரின் மொழிபெயர்ப்பு 1921 இல் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து அப்துஸ்ஸலாம் மாட்ஸன் என்பவரின் மொழி பெயர்ப்பும் டென்மார்க் மொழியில் வெளிவந்துள்ளது.

பஞ்சாபீ

திருகுர்ஆனை பஞ்சாபீயில் ஹாபிள் முஹம்மது லக்னவீ எழுதி லாகூரில் பதிப்பித்த மொழி பெயர்ப்பு வெளி வந்தது. பைரோஸ்தீன், ஷம்சுத்தீன், ஹயாத்துல்லா ஆகியோரின் மொழி பெயர்ப்புக்களும் பஞ்சாபீ மொழியில் லாகூரிலிருந்து வெளிவந்திருக்கிறது.

சிந்தீ

திருகுர்ஆனுக்கு, சிந்தீ மொழியில், அஸீஸுல்லா அவர்களுடைய மொழிபெயர்ப்பும், முஹம்மது ஸித்தீக் அப்துர் ரஹ்மானின் மொழிபெயர்ப்பும் பம்பாயிலிருந்தே வெளிவந்தது.

திரிவேதி

மாலத்தீவில் திரிவேதி மொழியில் அண்மையில் திருகுர்ஆனின் மொழிபெயர்ப்புநூல் வெளிவந்துள்ளது.

அவாஜிதானியா

கி. பி. 1874இல் அப்துல்காதிர் இப்னு லுக்மான் அவாஜிதானியா மொழியில் திருகுர்ஆனை வெளி யிட்டார். அதனைத் தொடர்ந்து கி.பி. 1886இல் ஹாபிள் அப்துல் ரஷீத் எழுதிய மொழிபெயர்ப்பும், கி.பி. 1900இல் முஹம்மது இஸ்பஹானி எழுதிய மொழிபெயர்ப்பும், கி. பி. 1903இல் குலாம் அலியின் மொழிபெயர்ப்பும் பம்பாயிலிருந்து வெளியாயின.

வங்காளம்

கி. பி. 1832இல் வங்காள மொழியில், வங்காள முஸ்லிம் மஜ்லிஸிலிருந்து (சபை) வெளியிடப்பட்டது.

நயீமுத்தீன் அவர்களின் மொழிபெயர்ப்பு கி. பி. 1899இல் வெளிவந்தது.

நுமுல்த்ஸாக் எழுதிய திருகுர்ஆன் மொழிபெயர்ப்பும் விளக்க உரையும் 1908இல் வெளிவந்தது.

கி. பி. 1929இல் ஷாஹ் ரபீஉத்தீன் அவர்களின் மொழிபெயர்ப்பு வங்காள மொழியில் வெளிவந்தது.

குஜராத்தி

மௌலவி அப்துர் ரஹீம் முஹம்மது ஸாதிக் என்பவர் குஜராத்தி மொழியில் கி. பி. 1946இல் திருகுர்ஆனை மொழிபெயர்த்தார்.

மலையாளம்

மௌலவி பி. எம். இடஸ்ஸரி என்பவர் திருகுர்ஆனை மலையாளத்தில் மொழிபெயர்த்தார். மற்றும் பல மொழி பெயர்ப்புகளும் வந்துள்ளது.

கன்னடம்

மௌலவி சையத் காஸிம் சாஹிப் என்பவர் கன்னடத்தில் திருகுர்ஆனை மொழிபெயர்த்தார்.

இந்தி

காங்கிரஸ் மகாசபை ஏகபோக செல்வாக்குடன் இருந்த காலத்தில் ராஜஸ்தான் ஜெய்ப்பூரில் காரியக் கமிட்டி மாநாடு 1961இல் நடைபெற்றது. அதற்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் பிரமுகர்கள் மௌலானா அபூஸலீம் அப்துல்ஹை அவர்களின் தலைமையில் பார்வையாளர்களாகச் சென்றிருந்தனர். அங்கு விற்பனைக்கிருந்த நூல்கள் ஆங்கில மொழிகளிலும் உர்தூவிலும் இருந்தது.

'அங்கே ஹிந்தியில் திருகுர்ஆனை விழிவழி தேடிய பெருமக்கள் ஏமாற்றத்துடன் எங்கே எங்கே என்று மொழிவழி கேட்டனர்' அங்கே இல்லை என்ற பதிலே கிடைத்தது.*

---

* **திருகுர்ஆன் மூலம் தமிழாக்கம்,** விளக்கவுரை அத்தியாயம் 17 முதல் 114 வரை, பக்கம் 15.

இந்தத் தாக்கத்துடன் திரும்பிய மௌலானா அபூஸலீம் அப்துல்ஹை அவர்கள் முஸ்லிம் வெல்ஃபேர் சொஸைட்டி (ராம்பூர்) எனும் பெயருடன் ஒரு அமைப்பை இயங்கச் செய்தார்கள்.

திருகுர்ஆனை இந்தியில் அமீர்குஸ்ரு என்பவர் மொழிபெயர்த்தார்.

அல்ஹஸனாத் உர்தூ மாதமிருமுறை இதழின் ஆசிரியர் மௌலானா அப்துல்ஹை ராம்பூரி அவர்கள் இந்த இந்தி மொழிபெயர்ப்பு நூலை 1966இல் நடைபெற்ற ஜமீஅத்துல் உலமா மாநாட்டில் வெளியிட்டார்கள். அந்த மகா நாட்டிற்குப் பார்வையாளராக வந்திருந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் திருகுர்ஆனின் இந்தி மொழி பெயர்ப்பு நூல் அன்பளிப்பாகத் தரப்பட்டது.

ஆங்கில மொழியில் ஆச்சரியமான வேதம்

ஆங்கிலத்தில் முதன்முறையாக கி. பி. 1669இல் திருகுர்ஆன் மொழிபெயர்ப்பு இலண்டனில் பிரசுரமாகியது.

ஜார்ஜ் ஸேல் எழுதிய மொழிபெயர்ப்பு கி.பி. 1763இல் லண்டனில் அச்சாகியது. ஏறத்தாழ 25 பதிப்புகளுக்கு மேல் அது வெளிவந்துள்ளது. கி.பி. 1861இல் ரொட்வீலின் மொழிபெயர்ப்பு இலண்டனிலிருந்து வெளிவந்தது.

கி.பி. 1880இல் (E. H. Palmer) பாமர் எழுதிய மொழி பெயர்ப்பு இரண்டு பாகங்களைக் கொண்டதாக இலண்டன் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்பட்டது.

டாக்டர் முஹம்மது அப்துல் ஹகீம் 1905இல் ஆங்கிலத்தில் மற்றொரு மொழிபெயர்ப்பை வெளியிட்டார். மிர்ஸா அபுல் பஸல் அவர்களின் அரபிமூலத்துடன் அலகாபாத்திலிருந்து வெளிவந்த மொழிபெயர்ப்பு மக்களிடையே பெரிதும் வரவேற்பைப் பெற்றது.

கி. பி. 1913இல் ஸர் டான்சூன் ரூஸி என்பவரது முன்னுரையுடன் வெளிவந்த திருகுர்ஆனின் மொழி பெயர்ப்பு எட்டு முறை அமெரிக்காவில் திரும்பவும் பதிப் பிக்கப்பட்டிருக்கிறது.

கி. பி. 1919இல் கிர்ஸன்கெஜட் ஆசிரியரான மிர்ஸா ஹீரத்திஹ்லவீயின் எளிய ஆங்கில மொழிபெயர்ப்பில் திருகுர்ஆன் வெளிவந்தது.

குலாம் ஸர்வரின் மொழிபெயர்ப்பு ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலிருந்து கி.பி. 1930இல் வெளிவந்தது.

முஹம்மத் மர்மடியூக்பிக்தால் (Mohamed Marmaduke Pickthall) மொழிபெயர்ப்பு 1930இலும், மிர்ஜா அபுல் பஜல் மொழிபெயர்ப்பு அதே 1930ஆம் ஆண்டிலும், ரிபெல் மொழிபெயர்ப்பு 1937லும் ஆங்கிலத்தில் வெளியானது.

அல்லாமா யூசுப் அலியின் அரபி மூலத்துடன் கூடிய திருகுர்ஆன் மொழிபெயர்ப்பு சரித்திர பூகோள விளக்கங் களுடன் கூடிய நீண்ட முன்னுரையுடன் 1935ல் லாகூரி லிருந்து வெளிவந்தது. இந்த மொழிபெயர்ப்பே இஸ்லா மிய மார்க்க மேதைகளால் வரவேற்கப்பட்ட சிறந்த மொழி பெயர்ப்பாகும். திருகுர்ஆனுக்கு மௌலானா முகம்மது அலி உரையும், ஹாபிஸ் குலாம் ஸர்வர் அவர்களின் உரையும் ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கிறது.

திருமறையின் தமிழ் மொழி பெயர்ப்புகள்

'ஓதுதல்' என்ற பொருள்படும் திருகுர்ஆனின் தமிழ் மொழி பெயர்ப்புக்கள் எப்படி வந்தன? சிந்தை கவர்ந்த சங்கைக்குரிய வேதம் செந்தமிழ் மொழியில் வரக் காரண மான மௌலானா மௌலவிகள் யார் யார்? அவர்கள் இறைவனின் பாதையில் இன்னல்கள் பலஏற்று ஆற்றிய அரும்பணிகள் தான் என்ன?

மௌலவி சி.கா. ஷேக் இபுறாஹீம்

திருநெல்வேலி பேட்டை மேலத்தெரு மௌலானா மௌலவி சி. கா. ஹாஜி ஷேக் இப்ராஹீம் ஆலிம் சாகிப் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத்தின் உறவினர். திருகுர்ஆன் மொழி பெயர்ப்பிற்காகவே அந்தக்காலத்தில் ரூபாய் 50,000 க்கும் அதிகமான அரபி, உர்தூ, பார்ஸி நூற்களைச் சேகரித்து குதூப்கானா இப்ராஹிமிய்யா' என்ற பெரிய நூலகத்தையே பேட்டையில் அமைத்திருந் தார்கள்.

இவர்கள் மாநில உலமாக்களின் சபையில் (மஜ்ஸி லிஸுல் உலமா செயலாளராக இருந்தார்கள். பெரிய வணிகராகவும், மார்க்க அறிஞராகவும் திகழ்ந்த அவர்களே திருகுர்ஆனின் தமிழ் மொழி பெயர்ப்பின் அவசியத்தை உணர்ந்தவர்களில் முதலாவதாக போற்றப்படுகிறார்.

''நமது பரிசுத்த வேதமாகிய திருகுர்ஆனின் தமிழ் மொழி பெயர்ப்பொன்றை அமைக்க வேண்டுமென்ற அவசியத்தை உணர்ந்தவர்களில் இவர்கள் தான் முதலானவர்கள்''*

---

* மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது ஸாஹிபு (பாகவி) 1929 இல் வெளியிட்ட. முதல் திருகுர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு நூல் பக். 19

கி.பி. 1896ஆம் ஆண்டுவாக்கில் மௌலானா மௌலவி சி.கா. ஹாஜி ஷேக் இப்ராகிம் ஆலிம் சாஹிபு அவர்கள் வேலூர் மதரஸயெ பாகியாதுஸ்ஸாலிஹாத் என்னும் அரபி கலாசாலைக்குச் செல்கிறார்கள். அதன் நிறுவனர் ஷம்ஷுல் உலமா அல்ஹாஜ் மௌலானா ஷாஹ் அப்துல் வஹ்ஹாப் ஸாஹிப் காதிரி குத்திஸ ஸிர்ருஹு அவர்களைச் சந்திக்கிறார்கள்.

அவர்களின் திருச்சமூகத்தின் முன், திருகுர்ஆனின் தமிழ்மொழி பெயர்ப்பொன்றை அமைக்கவேண்டுமென்ற அவசியத்தையும், அந்த எண்ணத்தையும் வெளியிட்டதோடு, அக்கலா சாலையிலுள்ள மாணவர்களிலொருவரை தனக்களித்து உதவி புரியவும் வேண்டினார்கள். அதற்கு அவர்கள் ஹளரத் காதிர் பாட்சா சாஹிபு என்று அழைக்கப்படும் மௌலானா மௌலவி ஹாபிள் ஹாஜி அப்துல் காதிர் பாதுஷா சாஹிப் அவர்களை கலந்து ஆலோசனை செய்து, மௌலவி ஆ.கா.அப்துல் ஹமீது ஸாஹிபு (பாகவி) அவர்கள் சம்மதித்தால், திருகுர் ஆனின் தமிழ் மொழிபெயர்ப்பு வேலையில் ஈடுபட்டு, ஷேக் இபுறாகீம் ஆலிம் சாகிபு அவர்களுக்கு உதவி புரியுமாறு சொன்னார்கள். ஆனால் அந்த வேளையில் மௌலவி ஆ.கா. அப்துல் ஹமீது சாகிப் அவர்களுக்கு கல்வியே கற்க வேண்டுமென்ற பேரவா இருந்ததனால், இந்தப்பணியில் ஈடுபட அப்போது அவர்களால் இயலாது போயிற்று. தன்னால் வர இயலாது என்பதனை மௌலவி சி.கா. ஷேக் இபுராகிம் அவர்களிடம் வருத்தத்துடன் தெரிவித்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்கள். இந்த நிலையில் சி. கா. ஷேக் இப்ராகீம் ஆலிம் சாகிப், பிறருடைய உதவியைத் தேடி நிற்பதை விட தாமே இந்தப்பணியில் ஈடுபடுவதுதான் நல்லது என்று எண்ணி, அதற்கு வேண்டிய அரபுக்கல்வியைக் கற்க முடிவெடுத்தார்கள்.

மனஉறுதியுடன் மௌலவியாகுதல்

நாற்பது வயதுக்கு மேற்பட்டே அவர்கள் அரபி கல்வியைக் கற்க ஆரம்பித்த போதிலும், அவர்களுடைய

விடா முயற்சியினாலும் தளரா ஊக்கத்தினாலும் வெகு சொற்பகாலத்தில் அவர்கள் விரும்பியவாறு அரபியில் தேர்ச்சி பெற்று மௌலவியாகி விட்டார்கள்.

திருகுர்ஆனை மொழிபெயர்க்க வேண்டுமென்கிற ஒரே நோக்கத்தின் மீதே அவர்கள் அரபி கல்வி கற்க ஆரம்பித்ததனால் அக் கல்வி பயிற்சி முடிவதற்கு முன்ன தாகவே ஏராளமான பொருள்களைச் செலவு செய்து இதற்கு அவசியமான அநேக தப்ஸீர்களையும், இதர நூல் களையும் வேண்டிய அளவு ஷேக் இபுறாகிம் ஆலிம் சாஹிபு சேகரித்து வைத்து விட்டார்கள்.

அறபி கல்வியின் பயிற்சியிலிருந்து மௌலவி ஷேக் இபுறாகிம் ஆலிம் சாகிபு அவர்கள் விடுபட்டு, திருகுர் ஆனை தமிழில் மொழிபெயர்க்கும் வேலையில் ஈடுபடுவ தற்கு முன்னதாகவே மிகவும் பொறுப்பு வாய்ந்த 'மஜ்லி ஸுல் உலமா' போன்ற பொது நன்மைக்குரிய பல ஸ்தா பனங்களை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு அவர்கள் மீது சுமத்தப்பட்டு விட்டது. அந்த நிலையில் அவர்களின் மொழிபெயர்ப்பு பணி தாமதமாகிக் கொண்டே வந்தது.

தனியானதொரு கமிட்டியை ஏற்படுத்தியாவது, அதன் மூலம் திருகுர்ஆனின் மொழிபெயர்ப்பை வெளிப் படுத்த வேண்டுமென்றும் சி. கா. ஷேக் இப்ராகிம் ஆலிம் சாஹிபு பல தடவைகள் முயன்றார்கள். ஆயினும் அவ் வேலை தாமதப்பட்டுக் கொண்டே வந்தது.

விலைமதிப்பில்லாத விரிவுரைகள்

முப்பதாண்டுகளுக்குப் பின்னர் 1926இல் திருச்சியில் திருகுர்ஆன் மொழிபெயர்க்கப்படும் வேலை ஆரம்பமான போது.

''இவ்வேலையில் ஈடுபடும்படி நான் கூறிவந்ததை முப்பது வருடங்களாக கவனிக்கவில்லையென்றாலும், இன்றைய தினம் தாங்கள் ஆரம்பஞ் செய்வதைப்பற்றி

எனக்கு மிகவுஞ் சந்தோஷமே'' எனக்கூறி, இதற்காக முன்னர் அவர்கள் சேகரித்து வைத்திருந்த திருகுர்ஆன் சம்பந்தப்பட்ட நூல்களை (தப்சீர்கள்) மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது சாஹிபு பாகவி அவர்களிடம் அளித்தார்கள். இதுகுறித்து அன்னார் சொல்லியுள்ள வாசகங்களை அப்படியே தருகிறேன்.

''அவர்கள் நமக்களித்த தப்சீர்களில் (நூல்களில்) பல தற்காலம் எவ்வளவு கிரையம் கொடுத்த போதிலும் கிடைப்பது அரிது. அவ்வாறான தப்சீர்களையும் மிக்க தாராளமாக நமக்குக் கொடுத்து உதவி புரிந்ததைப் பற்றி இம்மொழிபெயர்ப்பைக் கொண்டு பிரயோஜனமடையும் முஸ்லிம்கள் அவர்களுக்கு என்றென்றும் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள்.*

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலிச்சீமை விடுதலைப் போராட்டம் என்றாலும், தமிழ் வளர்ப்பு பணியில் என்றாலும் எதிலும் முன்னணியில் இருப்பது கடந்தகால சரித்திரம்.

அதனைப் போலவே] திருகுர்ஆனின் தமிழ் மொழி பெயர்ப்பிற்கு மூலவித்தாக இருந்து முதன்முதலில் அந்தப் பணியினைத் துவங்கிய பெருமை திருநெல்வேலி பேட்டை மேலத்தெரு மௌலானா மௌலவி சி. கா. ஹாஜி ஷேக் இபுறாகிம் ஆலிம் சாஹிபு அவர்களையே சாரும் என்பது தெள்ளத் தெளிவான வரலாற்று உண்மையாகும்.

அரபுத் தமிழில் அரிய வேதம்

கி. பி. 1876 இல் (ஹிஜ்ரி 1296) திருகுர்ஆனை அரபுத் தமிழில் மொழிபெயர்த்த சிறந்த பணியைச் செய்தவர் அன்றைய திருநெல்வேலி மாவட்டம் இன்றைய சிதம்பரனார் மாவட்டம் காயல்பட்டினம் நகரைச் சேர்ந்த ஹபீப் முஹம்மது ஆலிம் சாஹிம் ஆவார்கள்.

‘புதூஹாதுர் ரஹ்மானிய்யா - பீ - தப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா’ என்ற நூலை தமிழ் தேசத்தில் முதலாவது மொழி பெயர்ப்பு நூலாக வெளியிட்ட பெருமை ஹபீப் முஹம்மது ஆலிம் சாஹிப் அவர்களையே சாரும்.

நூஹ்லெப்பை ஆலிம் சாஹிப்

கி.பி. 1896ஆம் ஆண்டு வாக்கில் ‘தப்ஸீரே பத்ஹுல் கரீம்’ என்ற அறபுத் தமிழ் மொழி பெயர்ப்பு நூலை காயல் பட்டினத்தைச் சேர்ந்த நூஹ்லெப்பை ஆலிம் சாகிப் வெளியிட்டார்கள்.

இவர்களும் அன்றைய நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

புதுநகரம் கதீப் ஸய்யித் முஹம்மத் ஆலிம் சாஹிப்

கி. பி. 1922இல் ஹிஜ்ரி (1342) புதுநகரம் ஸய்யித் முஹம்மத் ஆலிம் சாஹிப் அவர்கள் திருகுர்ஆனின் முந்திய ஐந்து பாகங்களை அறபுத் தமிழில் மொழி பெயர்த்தார்கள்.

திருகுர்ஆனின் முதல் தமிழ் மொழிபெயர்ப்பு

கி. பி. 1910 ஆம் ஆண்டு வாக்கில் திருகுர்ஆனின் ஆங்கில மொழி பெயர்ப்பை தமிழில் மொழி பெயர்ப்பு செய்து ஆறு பாகங்களாக திருநெல்வேலி பேட்டையில் தயார் செய்யப்பட்டது.

நூருல் இஸ்லாம் கா.மீ. அப்துல் காதிர் ராவுத்தர்

ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட ஆறு பாகங்களைக் கொண்ட திருகுர்ஆன் மொழி பெயர்ப்பில் பலதவறுகள் நிகழ்ந்துவிட்டன. தப்பானதொரு மொழி பெயர்ப்பை பிரசுரித்து மார்க்கத்திற்கு நஷ்டம் உண்டு பண்ணுவதைவிட தான் செலவு செய்திருந்த பத்தாயிரம் ரூபாயையும் இழந்து விடுவதே மேலென்று

---

* முற்சொன்ன நூல் பக்கம் 20

எண்ணி முடிவெடுத்து, நூருல் இஸ்லாம் அச்சக உரிமையாளர் கா. மீ. அப்துல் காதிர் ராவுத்தர் அதனை வெளியிடாமலே அழித்து விட்டார்கள். அவர்களின் உயரிய எண்ணத்தைப் போற்றுவோம்! இதுவும் நெல்லை மாவட்டம் என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இராமநாதபுரம் ப வெ காதிர் முஹையத்தீன் ஆலிம்

திருகுர்ஆனின் முப்பதாவது பாகமான 'அம்ம ஜுஸ்உக்கு மாத்திரம் கி. பி. 1913 இல் இராமநாதபுரம் ப. வெ. காதர் முஹையத்தீன் ஆலிம் அவர்கள் 'தப்ஸிரெஅர்வி ஜுஸ்உ அம்ம என்று அறபி எழுத்துக்களுடன் தமிழில் மொழி பெயர்த்து அதை சென்னையில் அச்சிட்டு வெளியிட்டார்கள்.

வளத்தூர் மௌலவி மஷாயிக் அ. முஹம்மத் தாஹிர் சாஹிப்

திருகுர்ஆன் ஆயத்துக்கள் இன்றியும், விளக்கவுரை இன்றியும் மொழி பெயர்ப்பு மாத்திரம் செய்யப்பட்டு தமிழ் எழுத்துக்களில் சிறிய புத்தகமாக மூன்று பாகங்களுக்கு மாத்திரம் தனித்தனியாக அச்சிட்டு வெளியிட்டவர் வளத்தூர் மௌலவி மஷாயிக் அ. முஹம்மத் தாஹிர் சாஹிப் ஆவார்கள். திருகுர்ஆனின் மொழி பெயர்ப்பை அரபி மூலமின்றி வெளியிட விரும்பாத நிலையில் அம்மட்டோடு அவர்கள் அந்தப் பணியினை நிறைவுசெய்தார்கள்.

பா. தாவூத்ஷாவின் மொழி பெயர்ப்பு

கும்பகோணம் நாச்சியார் கோவிலைச் சேர்ந்த பா. தாவூத்ஷா ஸாஹிப், ஒத்துழையாமை இயக்க விடுதலைப் போரில் பங்கேற்றவர். கி.பி. 1922 இல் 'தாருல் இஸ்லாம்' என்ற இதழை நடத்தியவர்.

காலஞ்சென்ற மிர்ஜா குலாம் அஹ்மத் காதியானி என்பவரின் பிரதான சிஷ்யரும் லாகூர் அஹ்மதிய்யா

இயக்கத்தின் தலைவருமான மௌலவி முஹம்மத் அலி சாஹிபு எம். ஏ. எல். எல். பி. அவர்களால் திருகுர் ஆனின் மொழி பெயர்ப்பு விரிவுரையுடன் ஆங்கிலத்திலும் உருதுவிலும் பிரசுரிக்கப் பெற்றுள்ளது.

அன்னாரின் ஆங்கில மொழி பெயர்ப்பு ஹோலி குர்ஆன் (Holy Quran) என்றும் உருது மொழி பெயர்ப்பிற்கு 'பயானுல் குர்ஆன்' என்றும் பெயர். உருதுவிலுள்ள மொழி பெயர்ப்பின் விரிவுரைகளில் பெரும்பாலும் அறபிப் பதங்களே கூறப் பெற்றுள்ளன. அதனை விரிவுரை என்று சொல்வதைவிட திருகுர்ஆன் டிக்ஷனரி என்று கூறுவதே பொருந்தும் என்று அதனை மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது ஸாஹிபு அவர்கள் குறிப்பிடுவார்கள்.

அதனையே சில மாறுதல்களுடன் இரண்டாவது அத்தியாயத்தின் 159வது வசனம்வரையில் பா.தாவூத்ஷா தமிழில் மொழிபெயர்த்து 'ஜவாஹிருல் புர்கான்-பீ-தர்ஜுமதில் குர்ஆன் தமிழ்' என்ற பெயருடன் வெளியிட்டார். அது சரியானதொரு மொழிபெயர்ப்பாக மார்க்க மேதைகளால் அங்கீகாரம் செய்யப்படவில்லை என்பதும், தப்பான கொள்கைகளும் கருத்துக்களும் காணப்பட்டதால், இஸ்லாமிய மக்களால் அது வரவேற்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படி திருகுர்ஆன் முழுவதுமாக தமிழில் மொழி பெயர்க்கப் படாமலும், மொழி பெயர்க்கப் பட்டவைகளில் சில தவறானவைகளாக இருந்ததாலும், சில பிரசுரிக்கப் படாது இருந்ததாலும், முழுவதுமாக வெளி வந்த மொழி பெயர்ப்புகள் அரபுத் தமிழில் இருந்ததாலும், திருகுர் ஆனின் விரிவுரையுடன் கூடிய தனியானதொரு தமிழ் மொழி பெயர்ப்பை உருவாக்க வேண்டுமென்ற தணியாத ஆர்வம் தமிழக உலமாப் பெருமக்கள் மத்தியில் இருந்து கொண்டே வந்தது.

இறைவனின் நாட்டத்தால் அதற்கான வேளை வந்தது.

திருச்சியில் கூடிய தீன் குல மேதைகள்

கி. பி. 1926ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி வெள்ளிக் கிழமை (ஜும்ஆ) தொழுகைக்குப் பின்னர், திருச்சியில் கான் சாஹிப் ந. மு. காஜாமியான் ராவுத்தர் பங்களாவில் இஸ்லாமிய மார்க்க மேதைகள் கூடி திருகுர் ஆனைத்தமிழில் விளக்கத்துடன் தெளிவாக மொழி பெயர்த்து வெளியிட முடிவெடுத்து அந்தத்திருப்பணி துவங்கப் பட்டது.

கொடை வள்ளல் ந. மு. காஜாமியான் ராவுத்தர்

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி நிறுவிய இவர், இந்திய சுதந்திரப் போரில் 50000 ரூபாய் செலவில் கதர் ஆலையை நிறுவி நாட்டில் சுதந்திர தாகத்தை வளர்த்து சுதேசி இயக்கம் கண்டவர். ஏராளமான பொருள் இழப்பை நாட்டு விடுதலைக்காக ஏற்றுக்கொண்ட நல் மகனாராகிய இவர், திருகுர்ஆனின் தமிழ் மொழி பெயர்ப்பிற்கு அளவிடற்கரிய அருஞ்சேவைகளைச் செய்தவர்.

திருகுர் ஆனை மொழி பெயர்த்திடும் பணி மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது ஸாஹிபு (பாகவி) அவர்கள் வசம் ஒப்படைக்கப் பட்டது. பொறுப்பு வாய்ந்த உலமாக் கள் பலர் உதவி செய்வதாகவும் வாக்குறுதி அளித்தனர். மொழி பெயர்ப்பு பணி துவங்கியது.

உருது மொழியில் எழுதப்பெற்றுள்ள ஒரு நூலைக் கவனித்தால் அதிலுள்ள நூறு சொற்களில் 30 சொற்களாவது அறபிச் சொற்களாக இருக்கும். தமிழ் நூல்களில் அவ்வாறு காண்பது அரிது. உருது பாஷையிலுள்ள மொழி பெயர்ப்பு களைப் போல தமிழில் எழுதப்பெறும் மொழி பெயர்ப்புக்களையும் அறபிப் பதங்களைக் கலந்து எழுதுவதென்றால். பொதுமக்களுக்கு பயனளிக்காது என்பதால் அறபிப் பதங்களை கலக்காத மொழி பெயர்ப்பையே வெளியிட முடி வெடுத்தனர்.

கூடுமானவரை அறபிச் சொற்களுக்குத் தமிழில் பொருள் தரும் அகராதிகளும் அப்போது இல்லை. அரபி மொழியின் சொல்லுக்கு ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு விதமாக பொருள் சொல்பவர்களும் இருந்தனர். அவர்களையெல்லாம் அழைத்து ஒரிடத்தில் தங்கச்செய்து மொழி பெயர்ப்புச் செய்வதென்பது சாத்தியமில்லாத நிலையில் இருந்தது.

இந்தநிலையில் மொழி பெயர்ப்பாளர்கள் புதிய அரிய திட்ட மொன்றைத் தயாரித்தார்கள்.

உலமாக்கள் பிரதி தயார்

தாங்கள் தயாரித்து வைத்திருக்கும் மொழி பெயர்ப்பை ஒரு பக்கத்தில் அச்சிட்டு மறுபக்கத்தை காலியாக விட்டு அதனை தமிழகம் முழுவதிலுமுள்ள மார்க்க மேதைகளுக்கு அனுப்பிவைத்தனர்.

மார்க்க மேதைகள் அவைகளைப் படித்தறிந்து சரியா அல்லது அதன் திருத்தங்கள் எது என்பதையும் கூறி, மாற்றவேண்டிய இடங்கள், மாற்ற வேண்டிய சொற்கள் இருந்தால் அவைகளைத் திருத்தஞ் செய்து அனுப்பி வைப்பார்கள்.

இவ்வாறு திருகுர்ஆனின் மொழி பெயர்ப்புகள் ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்கான அறிஞர் பெருமக்களால் ஆய்வு செய்யப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு, ஆலோசனைகள் வழங்கப்பட்டு, அதற்குப் பின்னரே பிரசுரம் செய்யப்பட்டது என்பதை அறிகிறபோது வியப்பும், பெருமிதமும் ஏற்படுகிறது.

அதற்குப் பிறகு அந்த மொழிபெயர்ப்பை தமிழகத்தில் உள்ள மிகப் பிரபலமான அரபிக் கலாசாலைகளின்ஆசிரியப் பெருமக்களுக்கு அனுப்பி வைத்து அவர்களின் ஒப்புதலையும் அங்கீகாரத்தையும் பெற்றே வெளியிடப்பட்டது.

பிளாக்குகள் தயார்

எகிப்து, கான்ஸ்டாண்டிநோபிள் முதலிய இடங்களில் அக்கால கட்டத்தில் திருகுர்ஆனை அச்சிடுவதற்கு லித்தோ அச்சகத்தில் கல்லச்சில் கையெழுத்துக்களைக் கொண்டே அச்சிடப்பட்டு வந்தன.

தமிழகத்தில் பிரசுரமாகும் அச்செழுத்துக்கள் டைப் எழுத்துக்களைக் கொண்டே அச்சிடப்பட்டன. எனவே திருகுர்ஆனின் வசனங்களையும் சேர்த்து அறபி எழுத்துக் களில் அச்சிடுவதற்கு பிளாக்குகள் தயாரானது. திருகுர் ஆனின் 6666 வசனங்களுக்குமே பிளாக்குகள் தயார் செய்யப்பட்டன.

பிளாக்குகளும் திருகுர்ஆனை யாவரும் எளிதில் வாசிக்கக் கூடியவாறு மேலான விதத்தில் எழுதுபவர் களைக் கொண்டு எழுதப்பட்டு, போட்டோ எடுக்கப் பட்டு, அதனை வைத்தே பிளாக்குகள் உருவானதால் திருகுர் ஆனின் அரபி எழுத்துக்களை எவரும் புரியும் வண்ணம் அழகாகவும், அருமையாகவும், தெளிவாகவும் இருந்தது,

எண்ணற்ற நூற்களை மேற்பார்வையிட்டு, எண்ணற்ற விரிவுரைகளைப் படித்தறிந்து, நெடுந்தூரம் பிராயணம் செய்து, அறிஞர் பெருமக்களைச் சந்தித்து அரிய ஆலோசனைகளைப்பெற்ற பின்னரே அவைகளை மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது சாகிபு (பாகவி) அவர்கள் அச்சிட முடிவெடுத்தார்கள்.

கருணை உள்ளம் ந. மு. காஜாமியான் ராவுத்தர்

இந்தப் பணிகளை மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது சாகிபு அவர்கள் சிறப்பாகச் செய்திட உதவி செய்தவர்கள் யார்? அவர்களது வார்த்தைகளையே அப்படியே குறிப் பிடுகிறேன்.

''திருகுர்ஆனின் மொழி பெயர்ப்பு வேலையை முடிக்கும் வரையில் மற்ற எவ்வேலையிலும் பிரவேசிப்ப

தில்லை என்ற முடிவு கட்டிக் கொண்ட யான், மகா கனம் கான் ஸாஹிப், ந. மு. காஜாமியான் ராவுத்தர் அவர் களைக் கலந்தாலோசனை செய்யும் பொருட்டு திருச்சிக்கு வந்தேன், அவர்களைக் கண்டேன், நான் செய்ய உத்தே சித்திருக்கும் வேலையைக் கூறினேன், அதற்கு அவர்கள் இவ்வேலையைத் தங்களின் முன்பாகவே ஆரம்பஞ் செய்யும்படிக் கூறினார்கள். யானும் ஆரம்பித்து விட்டேன். இவ்வளவுதான் யான் பொருள் விஷயத்திற்காகச் செய்து கொண்ட முயற்சி. இன்றைக்கு மூன்று வருஷங்களாகின்றன. இது வரையில் பதினாயிரக் கணக்கான பொருள் செலவாயிருக்கின்றது இரவுபகலாக இவ்வேலையில் ஈடுபட்டு உழைத்து வருகின்றேன். எனி னும் இதற்கு வேண்டிய பொருளுக்காக வேறு எவரிடமுஞ் செல்ல ஒரடி எடுத்து வைத்தவனுமல்ல. பொருளைப் பற்றி எவரிடமும் ஒரு வார்த்தை பேசியவனுமல்ல. அல்லது யான் ஒரு நிமிஷமேனும் பொருளைப்பற்றி சிந் தித்தவனுமல்ல. அப்படி அவர்களிடமேனும் பொருளைப் பற்றி ஒரு வார்த்தை பேசும்படியான சந்தர்ப்பமும் இது வரையில் எனக்கு ஏற்படவுமில்லை. இவ்வாறு அவர்கள் செய்து வரும் அரும் பெரும் உதவியினாற்றான் ஒரு நூறுக்கு மேற்பட்ட உலமாக்களின் அங்கீகாரத்துடன் இவ்வளவு மேலான விதத்தில் இம் முதல் வெளியீடை இன்றைய தினம் தங்கள் முன் சமர்ப்பிக்க சாத்தியமானது''

அச்சியந்திர சாலை அமைக்கப்படுதல்

திருகுர் ஆனை அச்சிடுவதற்கு ஏற்ற அச்சியந்திர சாலைக்கு வேண்டிய மிஷினோ இந்திய ஏஜென்சிகளிடம் அப்போது இல்லை. அமெரிக்காவுக்குப் புதிதாகவே ஆர் டர் கொடுக்கப்பட்டு தருவிக்கப்பட்டு, அச்சியந்திரசாலை அமைக்கப்பட்டது. அதில்தான் முதன் முதலில் திருகுர் ஆனின் சரியான தமிழ் பெயர்ப்பின் ஒரு பகுதி வெளிவந்தது

ஹாஜி. ம.ஜ. ஜமால்முஹம்மது சாகிப்

''நான் வெற்றுக் காகிதத்தில் கையெழுத்துப் போட்டுத் தருகிறேன் இந்து முஸ்லிம் ஒற்றுமை பற்றி நீங்களும் ஜமால் முகம்மதுவும் என்ன முடிவு செய்கிறீர்களோ அது எனக்குச் சம்மதம்' என்று ஆகாகானிடம் கூறியவர் அண்ணல் காந்தி. அந்த அளவிற்கு அண்ணல் காந்தியடிகளிடம் பெருமதிப்பைப் பின்னாளில் பெற்றிருந்த ஹாஜி.ம.ஜ. ஜமால் முஹம்மது சாகிப் அவர்கள் (திருச்சியிலே அவர்களது பெயராலேதான் கல்லூரி அமைந்துள்ளது) திருகுர்ஆனின் தமிழ் மொழி பெயர்ப்பிற்கு ஆற்றிய அரும்பணி என்ன ? மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீதுசாகிபு (பாகவி) அவர்களின் வார்த்தைகளை அப்படியே தருகிறேன்.

''மகா கனம் ஹாஜி ம. ஜ. ஜமால் முஹம்மது ஸாஹிபு அவர்கள் திருச்சிக்கு வந்த சமயத்தில் நமது ஸ்தாபனத்திற்கும் நேரே வந்து பார்வையிட்டு இவ்வேலை (திருகுர் ஆன் மொழி பெயர்ப்புப்பணி) நடைபெற்று வரும் முறையைக் கண்டு மிக்க திருப்தியுற்று இதற்கென பிரத்தியேகமான தொரு அச்சு இயந்திரசாலையை அமைத்துக் கொள்ளும்படி கட்டளையிட்டதுடன் அதற்கு வேண்டிய பொருளை முற்றிலும் அவர்களே கொடுத்து உதவி புரிந்தார்கள். இவ்வாறு ஹாஜி. ம. ஜ. ஜமால் முஹம்மது ஸாஹிபு அவர்களுடைய உதவியைக் கொண்டு ஏற்படுத்தப் பெற்ற அச்சியந்திர சாலையில் தான் தங்கள் முன்னிருக்கும் இம் முதல் வெளியீடு அச்சிடப்பெற்றுள்ளது''.

காரைக்கால் ஹாஜி மு.த.காதிர்முஹையத்தீன்சாஹிபு

திருச்சியில் திருகுர்ஆனை மொழிபெயர்த்து வெளியிடுவதற்கென்ற உலமாக்கள் குழு 1926 இல் அமைக்கப்பட்டது. அதுவே திருச்சி 'இஸ்லாமிய நூற்பிரசுரச்சங்கம்' ஆகும். இந்தச்சங்கத்திற்கு வந்துகூட பார்வையிடாத

நிலையிலும், அதற்கென ஒரு தொகையினை அந்தக் காலத்தில் வழங்கி, திருகுர்ஆனின் தமிழ் மொழி பெயர்ப்பு பணி செவ்வனே நடைபெற உதவியவர் காரைக் கால் ஹாஜி மு. த. காதிர் முஹையத்தின் சாஹிபு மரைக்காயர் ஆவார்கள்.

ந. மு. காஜாமியான் ராவுத்தர்,
ம. ஜ. ஜமால் முஹம்மது சாகிபு,
மு. த. காதிர் முஹையத்தின் சாகிபு மரைக்காயர்

ஆகிய முப்பெரும் வள்ளல்கள் அளித்த பேருதவியின் காரணமாக திருகுர்ஆனின் மொழி பெயர்ப்புப் பணி துரிதமாக நடைபெற்றது என்பது சரித்திரத்தின் சாட்சி யங்களாகும்.

உலமாக்களின் ஒப்புதல்

திருகுர் ஆனின் மொழி பெயர்ப்பு பணிக்கு பொருள் உதவி புரிந்தவர்களின் உரிய செயல்களைப் பார்த்த நாம், அந்த மொழி பெயர்ப்பினை சரிவரத் தயார் செய்திட, பிழையின்றி அமைந்திட பெருந்தொண்டு செய்த உலமாப் பெருமக்களையும் நினைத்துப் பார்க்க கடமைப்பட்டிருக் கிறோம்.

வேலூர் பாகியாத்துஸ் ஸாலிஹாத் அறபிக்கலாசாலை

லக்னோ நகரில் இஸ்லாமிய நூல்களையும் சரித்திரங் களையும் உருது பாஷையில் வெளியிடும் நோக்கத்தோடு நத்வத்துல் உலமா என்ற சபையை அல்லாமா ஷிப்லி அவர்கள் தோற்றுவித்தார்கள். அவர்களுக்குப்பின் அங்கே பணியாற்றிய தாருல் முஸன்னிபீன் (நூல்களை எழுதும் பேராசிரியர்) என்னும் நூற் பிரசுராலயத்தலைவர் மௌ லானா ஸையத் சுலைமான் நத்வி, அவர்கள் மௌலவி. ஆ. கா. அப்துல் ஹமீது ஸாஹிபு அவர்களின் மொழி பெயர்ப்பை பெரிதும் பாரட்டினார்கள்.

4—2—1927 இல், கல்விக் களஞ்சியமான இராய வேலூர் மத்ரஸயே பாகியாத்துஸ்ஸாலிஹாத் என்னும் அறபிக் கலாசாலையின் ஆசிரியர்கள்:

மௌலானா மௌலவி ஷேக் ஆதம் சாகிப்,
,, ,, அப்துர் ரஹீம் சாகிப்,
,, ,, ஜியாவுத்தீன் அஹ்மத்அமானி சாகிப்,
,, ,, முஹம்மத் ஹஸன் பாதுஷாஹ்சாகிப்
,, ,, முஹம்மத் கமாலுத்தீன் சாகிப்,
,, ,, ஹாபிள் அப்துர் ரஜ்ஜாக் சாகிப்,
,, ,, முஹம்மத் அப்துல் ஜப்பார் சாகிப்,
,, ,, ஜியாவுத்தீன் முஹம்மத் சாகிப்,

ஆகியோர் இந்த மொழி பெயர்ப்பை பாராட்டி அங்கீகரித்தார்கள். மதிப்புரையும் வழங்கினார்கள்.

பொதக்குடி அந்நூறுல் முஹமதிய்யு அரபிக் கலா சாலை

மௌலனா மௌலவி (அன்றைய நெல்லை மாவட்டம் ஆராம் பண்ணையைச்சேர்ந்த), முஹம்மத் அப்துல் கரீம் சாகிப், (ரஹ்)

மௌலவி குஞ்சுஅலி சாகிப்,
,, முஹம்மத் இப்ராஹிம் சாஹிப்,
,, அப்துல் ஹமீத் சாகிப்,
,, அப்துல்லா சாகிப்,
,, அப்துல்கனி சாகிப் ஆகிய அறபிக்கலாசாலை ஆசிரியர்கள் மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது சாகிப் அவர்களின் தர்ஜுமதுல் குர்ஆன் -பி- அல்தபில் பயான் என்னும் முதல் மொழி பெயர்ப்பைப் பாராட்டி 14—1—1927 இல் வாழ்த்து தெரிவித்தனர்.

ஸைபுல் இஸ்லாம் பத்திராதிபர் அஹ்மத் ஸயீத் ஸாஹிப் பாகவி

''மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது ஸாஹிப் அவர்களால் மொழி பெயர்க்கப் பெற்று விரிவான வியாக்கியானஞ் செய்யப் பெற்றதும், திருச்சி இஸ்லாமிய நூற் பிரசுரச்சங்கத்தால் வெளியிடப் பெற்றதுமானதர்ஜுமதுல் குர்ஆன்—பி அல்தபில் பயான் என்னும் தமிழ் மொழி பெயர்ப்பு குர்ஆனின் முதலாவது வெளியீடு நமது பார்வைக்கு வந்தது. இதன் உரை ஆசிரியராகிய மேற்கண்ட மௌலவி சாகிப் அவர்களால் இதற்கு முன் உலமாக்களின் பார்வைக்கென அச்சிடப்பெற்ற இரண்டு பிரசுரங்களும் எமக்குக் கிட்டின. அவைகளையும் நான் முதலிலிருந்து கடைசி வரையில் பார்த்தேன். இனிய செந்தமிழ் நடையில் இலக்கண வழுவின்றி கற்றோரும் மற்றோருமாகிய யாவரும் திருகுர் ஆனின் கருத்தை எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு இம் மொழிபெயர்ப்பு அமைக்கப் பெற்றிருப்பதுடன், அறபிபதங்களின் அருத்தங்களை எளிதில் தெளிவாக அறிவிக்கும் பொருட்டு சாதாரண தமிழ் பதங்களைக் கொண்டே அருத்தஞ் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது, என்று மௌலவி அஹமத் ஸயீத் ஸாஹிப் பாராட்டியுள்ளார்கள்.

சென்னை. பெரம்பூர் ஜமாலியா அரபிக் கலாசாலை

மௌலானா மௌலவி ஸையத் அலவி தங்கள்

„ „ ஹுஸைன் சாகிபு

„ „ மௌலா முஹிய்யத்தீன் சாகிபு,

„ „ முஹம்மது யூசுப் சாகிபு,

„ „ முஹம்மது ஷரீப் சாகிபு,

„ „ அலி இப்னு அஹ்மத் சாகிபு

ஆகியோர் இந்த மொழி பெயர்ப்பை பார்வையிட்டு, பல விரிவுரைகளை வைத்துக் கொண்டு அநேக திருத்தங்களைச் செய்து, பெருமுயற்சிகளை எடுத்துக் கொண்டனர்.

அதிரை மு. அ. அஹ்மது லெப்பை ஆலிம் சாகிபு

அதிராம்பட்டினம் மரைக்காயர் பள்ளியைச் சேர்ந்த மத்றஸயெ ரஹ்மானிய்யா என்னும் அறபி கலாசாலையின் முதல்வர் (நாசிர்) மௌலானா மௌலவி மு. ஆ. அஹ்மது லெப்பை ஆலிம்சாகிபு ஆவார்கள். அவர்களுடன் திருகுர்ஆனின் மொழி பெயர்ப்பு குறித்து ஆ. கா. அப்துல் ஹமீத் சாகிப் அவர்கள் காரைக்காலில் வைத்து சந்தித்து உரையாடி அரிய ஆலோசனைகளைப் பெற்றார்கள்.

பெரியஆலிம்சாகிப் என்ற பிரக்கியாதி பெற்ற மௌலானா மௌலவி ஷைக் முஹம்மது அப்துல் காதிர் ஆலிம் சாகிப் அவர்களை அதிராம்பட்டினத்திற்குச் சென்று சந்தித்து இந்த மொழி பெயர்ப்பிற்காக அரிய ஆலோசனைகள் பெறப்பட்டது.

அதுபற்றி மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீத் சாகிப் அவர்கள் சொல்லியுள்ளதை அப்படியே தருகிறேன்.

''கனம் பெரிய ஆலிம் சாஹிப் அவர்களுக்கு அறபி பாஷா ஞானத்திலுள்ள ஆற்றலும் திருகுர்ஆனின் வியாக்கியானங்களைப் பற்றி அவர்களுக்கிருந்த விரிவான ஆராய்ச்சியும் நேரே நான் அவ்விடம் சென்றதன் பின்னரே எனக்குத் தெரிய வந்தது. இம்மொழி பெயர்ப்பை அமைக்கும் விஷயத்தில் அப்பெரியார் எனக்கு அறிவித்த பல அரிய விஷயங்கள் எனக்கு மிகவும் பலனளித்தன.

மேலப்பாளையம் ஹாபிள் முஹம்மது சாகிபு

மேலப்பாளையம் ஹளரத் என்று அந்தகாலத்தில் கூறிய மாத்திரத்தில் தென் தேசத்திலுள்ள முஸ்லிம்கள் யாவரும் நன்கறிவார்கள். அவர்களது தேகத்தின் சுகக் குறைவான நிலைமையால் அவர்கள் திருச்சிக்கு செல்லவில்லை. மாறாக ஆ. கா. அப்துல் ஹமீது சாகிபு அவர்கள்

மேலப்பாளையத்திற்கு இந்த மொழி பெயர்ப்பிற்காக ஆலோசனைகளைப் பெறச் சென்றார்கள். இது குறித்து அவர்கள் கூறுவதாவது;

''மௌலானா மௌலவி மேலப்பாளையம் கடைப் பள்ளி ஹாபிள் முஹம்மத் சாஹிபு அவர்களுக்கு திருகுர் ஆன் முற்றிலும் மனப்பாடமாக இருப்பதுடன் திருகுர் ஆனின் வியாக்கியானங்களைப்பற்றி அவர்களின் ஆராய்ச் சியும் வியப்படையத்தக்கதாகும்... இம்மொழி பெயர்ப்பை அமைக்கும் விஷயத்தில் பல அரிய விஷயங்களை எனக் கறிவித்து பொது ஜனங்களுக்கு பிரயோஜனமளிக்கக் கூடிய விதத்தில் இம் மொழி பெயர்ப்புப் பூர்த்தியாகி வெளிப்பட வேண்டுமென்று பிரார்த்தனையும் செய் தார்கள்.

மௌலானா அப்துல் அஜீஸ் ஸாஹிபு (சாத்கடு)

'திருகுர்ஆனை மொழி பெயர்க்கும் விஷயத்தில் அனு சரிக்க வேண்டிய விதிமுறைகளைப் பலர் பின் பற்றாது நடந்து கொள்வதால் தான் தவறுன மொழி பெயர்ப்புக்கள் திருகுர்ஆனுக்கு வந்து விடுகிறது; எனவே திருகுர்ஆனை தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பதே ஆகுமானதல்ல' என்று கூறிக் கொண்டிருந்த மௌலானா மௌலவி அப்துல் அஜீஸ் சாஹிபு சாத்கடு அவர்களை நேரில் சந்தித்தார் ஆ. கா. அப்துல் ஹமீது சாஹிப். அப்போது தெளிவான விவரங்களையும், தாங்கள் மேற்கொண்டி ருக்கும் மொழி பெயர்ப்பு முறைகளைப் பற்றியும் எடுத்துச் சொன்ன போதுதான். 'இவ்வாறு செய்யப் பெறும் மொழி பெயர்ப்பைப் பற்றி எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை' என்று கூறினார்கள். அவர்களும் இந்த மொழி பெயர்ப்பிற்கு பெரிதும் உதவினார்கள்.

மறை மொழிபெயர்பிற்குதவிய மார்க்க மேதைகள்

மௌலானா ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி அவர்கள் ஸூரத்துல் பகராவை முதலில் மொழி பெயர்த்து ஒரு

பாகத்தின் பகுதியில் அதை அச்சிட்டு, மறுபாதியைத் தங்கள் கருத்துக்களை உலமாக்கள் (மார்க்க அறிஞர்கள்) குறிப்பதற்காக வெற்றிடமாக விட்டு, ''உலமாக்கள் பார்வைக்கென மட்டும் அச்சிடப் பெற்றது' என்ற முத்திரையுடன் அன்று தமிழகத்தில் சிறப்பாக வாழ்ந்த ஒரு நூற்றுக்கு மேற்பட்ட ஆலிம்களுக்கு அனுப்பி வைத்து, அவர்கள் சரிபார்த்த பின் அவற்றைத் திரும்பப்பெற்று, ஆராய்ந்து சிலர் குறிப்பிட்டிருந்த பொருத்தமான திருத்தங்களையும், விமரிசனங்களையும் ஏற்றுக் கொள்ள காரணமாயிருந்த தமிழக உலமாப்பெரு மக்களின் திருப்பெயர்களை தமிழ் கூறும் நல்லுலகம் திரும்பவும் நினைத்துப்பார்க்க வேண்டுமென்பதற்க்காக அவர்களின் பெயர்களை இங்கு தந்துள்ளேன்.

மௌலவிகளின் திருப்பெயர்கள்

மவுலவி M. முஹம்மத் யாஃகூப் ஸாஹிபு அவர்கள் (கரூர்). [பாகவி] No. 954 ரங்கூன்.

மவுலவி ஸுல்தான் முஹம்மத் ஸாஹிபு அவர்கள், தர்காபள்ளி, மங்கமாரிவீதி, அன்னவாசல்.

மவுலவி முஹம்மத் அப்துஸ் ஸமத் ஸாஹிபு அவர்கள் (தேவ்பந்தி) முதர்ரிஸ் மதரஸயே அறபியா அடியக்கமங்கலம்.

மவுலவி செ. அஹமத் முஸ்தபா ஸாஹிபு அவர்கள் மஞ்சுக்கொல்லை,

மவுலவி ஸுலைமான் ஸாஹிபு கதீபு அவர்கள், மஸ்தான்பள்ளி, காரைக்கால்.

மவுலவி முஹம்மத் யூஸுப் ஸாஹிபு அவர்கள், முதர்ரிஸ் மதரஸயே காதிரிய்யா, காரைக்கால்.

மவுலவி முஹம்மத் அலி ஸாஹிபு அவர்கள், (பாகவி) கீரம்பூர்.

மவுலவி எஸ் எஸ் அப்துல் காதிர் ஸாஹிபு அவர்கள் (பாகவி) உத்தமபாளையம்.

மவுலவி நயினர் முஹம்மது ஸாஹிபு அவர்கள்,
தாஜுல் இஸ்லாம் எடிட்டர், ஈரோடு,

மவுலவி ஸையத் அப்துல் கரீம் தங்கள் அவர்கள்,
மதுரஸயே ஜமாலிய்யா, பெரம்பூர், சென்னை.

மவுலவி ரஹ்மதுல்லா ஸாஹிபு அவர்கள்,
மதுரஸயே ஜமாலிய்யா, பெரம்பூர், சென்னை.

மவுலவி B. A. முஹம்மத் முஸ்லியார் அவர்கள்,
மதுரஸயே ஜமாலிய்யா, பெரம்பூர், சென்னை

மவுலவி அமீர்பாஷா ஸாஹிபு அவர்கள்,
மதுரஸயே ஜமாலிய்யா, பெரம்பூர், சென்னை,

மவுலவி அப்துல் அஜீஸ் ஸாஹிபு அவர்கள்,
மதுரஸயே ஜமாலிய்யா, பெரம்பூர், சென்னை,

மவுலவி முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிபு அவர்கள்,
மதுரஸயே ஜமாலிய்யா, பெரம்பூர், சென்னை,

மவுலவி ஹாபிள் அப்துர்ரஜ்ஜாக்ஆலிம் ஸாஹிபு அவர்கள்
கடையநல்லூர்,

மவுலவி வி. மி. அப்துல் கரீம் ஸாஹிபு அவர்கள்,
முதர்ரிஸ் மதரஸயே-மிஸ்பாஹுல் ஹுதா,
நெய்வாசல், (நீடூர் PO.)

மவுலவி ஹாபிள், செ. முஹம்மத் இப்ருஹீம் ஸாஹிபு
அவர்கள், இராணிப்பேட்டை.

மவுலவி நோட்டம், சேக் முஹம்மத் ஸாஹிபு அவர்கள்,
பள்ளப்பட்டி (கரூர் தாலுகா.)

மவுலவி மெ,கா. பக்கீர்முஹிய்யத்தீன்ஸாஹிபு அவர்கள்.
சித்தயங்கோட்டை, (திண்டுக்கல்)

மவுலவி V. M. அப்துல் அஜீஸ் ஸாஹிபு அவர்கள்,
குமாரசாமிபட்டி, (சேலம்.)

மவுலவி ஷரீபுத்தீன் ஸாஹிபு அவர்கள், (பாகவி)
வேலூர்.

மவுலவி ஹபீபுல்லா ஸாஹிபு அவர்கள்,
ஸத்ரமுதற்றிஸ், மதரஸயே குவ்வதுல் இஸ்லாம்
பெங்களூர்.

மவுலவி நா. அப்துல் வஹ்ஹாப் ஸாஹிபு அவர்கள்,
அய்யம்பேட்டை.

மவுலவி கதீப், தமீஜுத்தீன் முஹம்மத் ஸாஹிபு அவர்கள்
முஹம்மது பூரா, (சேலம்.)

மவுலவி ஷேக் முஹம்மத் ஸாஹிபு அவர்கள்,
(தாயிபான்) பள்ளப்பட்டி, (கரூர் தாலுகா.)

மவுலவி ஷாஹுல் ஹமீத் ஸாஹிபு அவர்கள்,
சித்தயங்கோட்டை. (ஆத்தூர் PO. திண்டுக்கல்.)

ஜனப் கூ. அப்துல் மஜீது ஸாஹிபு அவர்கள்,
அல்கலாம் எடிட்டர், பண்டாரவாடை, (தஞ்சை.)

ஜனப் ஓ. கே. முஹியத்தீன் ஸாஹிபு அவர்கள்,
முஸ்லிம் சம்ரட்சனி எடிடர், நெ 55 புதிய செட்டித்
தெரு, கொழும்பு.

மவுலவி கலீலுர்ரஹ்மான் ஸாஹிபு அவர்கள்,
பள்ளப்பட்டி (கரூர் தாலுகா,)

ஜனப் ஸையது குலாம் தஸ்தகீர் ஸாஹிபு அவர்கள்,
டெப்டி இன்ஸ்பெக்டர், இஸ்லாமியா ஹைஸ்கூல்
தஞ்சை

ஜனப் தி. மு. வ. இ. அப்துல்லா ஸாஹிபு அவர்கள்,
முதவல்லி, தெற்கு வாசல் வீதி, மதுரை.

ஜனப் ரு. மு. முஹம்மது யாகூப் ஸாஹிபு அவர்கள்,
முஹம்மதியநேசன்பிரஸ், பள்ளப்பட்டி (கரூர்
தாலூகா.)

மவுலவி சி. கா. ஸயீத் முஹம்மத் ஸாஹிபு அவர்கள்,
சித்தயங்கோட்டை, ஆத்தூர், PO. (திண்டுக்கல்.)

மவுலவி அ. வெ. அப்துல் வஹ்ஹாப் ஸாஹிபு அவர்கள்,
கிழக்குத்தெருவு, பள்ளப்பட்டி (கரூர் தாலூகா.)

மவுலவி முஹம்மத் ஸுலைமான் ஸாஹிபு அவர்கள்,
முஹம்மதியபுரம், திண்டுக்கல்.

மவுலவி மு. அப்துல் கபூர் ஸாஹிபு அவர்கள்,
திருச்சி.

மவுலவி முஹம்மத் முஸ்தபா ஸாஹிபு அவர்கள்,
மேலூர்.

மவுலவி அப்துர் ரஹ்மான் ஆலிம்ஸாஹிபு அவர்கள்,
அஹ்மத் மீரான் பள்ளி, தென்காசி

மவுலவி முஹம்மத் ரூஹுல்லா ஸாஹிபு அவர்கள்,
(பாகவீ) மாங்குடி Po. (தஞ்சை)

மவுலவி சின்ன ஆலிம் ஸாஹிபு குமாரர் ஜலால் ஆலிம் ஸாஹிபு அவர்கள்,
திருப்பத்தூர், (இராமநாதபுரம்)

மவுலவி அப்துல்லா ஸாஹிபு குமாரர் இப்ராஹீம் லப்பை ஆலிம் ஸாஹிபு அவர்கள்,
திருப்பத்தூர், (இராமநாதபுரம் ஜில்லா)

மவுலவி ந.அ. காதிர்பாஷா ஸாஹிபு அவர்கள்,
(பாகவி) பெரிய தெரு, பண்டாரவாடை

மவுலவி அபுல் ஹஸன், நூ. அ. அப்துல் ஹைய் ஸாஹிபு அவர்கள்
கமாலீ (பாகவீ), மணவழித்தெரு, அய்யம்பேட்டை.

மவுலவி ஒ.மு. அப்துல் கரீம் ஸாஹிபு அவர்கள், (பாகவீ)
அம்மாபாளையம், களாம்பட்டி பெரம்பலூர்தாலூகா.

மவுலவி க.அ. அப்துல் அஜீஸ் ஸாஹிபு அவர்கள் (பாகவீ)
மேலத்தெரு சக்கராப்பள்ளி, அய்யம்பேட்டை.

மவுலவி D.M. ஷாஹ் ஹிதாயத்துல்லா ஸாஹிபு அவர்கள்
(பாகவீ) ஸுல்தானியாதெரு, பெரியதாராபுரம்.

மவுலவி ஸையத் முஸ்தபா ஸாஹிபு அவர்கள், நதவி, சித்திரப்பட்டி
முதர்ரிஸ், மதரஸயெ கட்டிமேடு,
திருத்துறைப்பூண்டிPo. (தஞ்சை.)

மவுலவி B.S. முஹம்மத் உமர் ஸாஹிபு அவர்கள்
மதரஸயெ காதிரிய்யா பள்ளித்தெரு, பாலக்காடு,

மவுலவி K.M. இஸ்மாயீல் ஸாஹிபு அவர்கள் (பாகவீ)
கட்டயந்தெரு, புதுநகரம்,

மவுலவி B.S. முஹம்மத் அப்துல்லா ஸாஹிபு அவர்கள், காஹிரீ
மெத்தை No. 3 No. 175 சதிரியாபஜார், பம்பாய் 3

மவுலவி ஹாஜி அப்துல் கரீம் ஆலிம் ஸாஹிபு அவர்கள்,
பேகம்பூர் மதரஸா, திண்டுக்கல்.

மவுலவி பா. அப்துர்ரஹீம் ஸாஹிபு அவர்கள்,
வத்தலக்குண்டு, கொடைக்கானல் ரோடு.

மவுலவி பிச்சை மீரான் லெப்பை ஆலிம் ஸாஹிபு அவர்கள்
வத்தலக்குண்டு, கொடைக்கானல் ரோடு.

மவுலவி சே. காதிர் முஹிய்யத்தீன் ஸாஹிபு அவர்கள்
பெரியகுளம், (மதுரை)

மவுலவி மீர் முஹம்மத் ஸாஹிபு அவர்கள்
கம்பம்

மவுலவி ப.உ. அப்துர் ரஹ்மான் ஸாஹிபு அவர்கள்
மதரஸயெ கௌஸியா, உத்தமபாளையம்.

மவுலவி ஓ.பா. முஹம்மத் முஸ்தபா ஆலிம் ஸாஹிபு அவர்கள்
மேலூர் Po. (மதுரை)

மவுலவி அப்துல்லா ஸாஹிபு அவர்கள், (பாகவீ),
வடகரை

மவுலவி ஷேக் ஆதம் ஸாஹிபு அவர்கள் (பாகவீ),
எருமைப்பட்டி, (நாமக்கல் தாலூகா)

மவுலவி எச்.எம். அப்துல்காதிர் ஸாஹிபு அவர்கள் (பாகவி)

மவுலவி எம். அப்துஸ்ஸலாம் ஸாஹிபு அவர்கள்

மவுலவி அ.ப. முஹம்மத் இஸ்மாயீல் ஸாஹிபு அவர்கள்,
(பாகவீ) ஆக்கூர், (மாயவரம் தாலூகா)

மவுலவி மொ.ப. முஹம்மத் முஸ்தபா ஸாஹிபு அவர்கள்,
(பாகவீ) பெரியதெரு புதுநகரம்,

மவுலவி இ.மி.சி. ஸையத் முஹம்மத் ஸாஹிபு அவர்கள்,
(பாகவீ) பனைக்குளம், (இராமநாதபுரம் ஜில்லா)

மவுலவி உ.சி. அப்துல் பாசித் ஸாஹிபு அவர்கள்,
(பாகவீ) வேடசந்தூர் (திண்டுக்கல் தாலுகா)

மவுலவி K.S,A. ஸையத் ஹுஸைன் மரைக்காயர்
ஆலிம் ஸாஹிபு மாலுமியாதெரு, நாகூர்

மவுலவி முஹம்மத் மூஸா ஸாஹிபு அவர்கள்,
நெல்லிக்குப்பம்,

மவுலவி கொடுமுடி, S. முஹம்மத் அப்துல் காதிர் ஸாஹிபு அவர்கள்
(ஸாதிகுல் அமீன்) பெரிய அக்ரகாரம், ஈரோடு.

மவுலவி K.M. முஹம்மத் ஸாலிஹ் ஸாஹிபு அவர்கள்,
No. 902 புதுத்தெரு, நாகப்பட்டினம்

மவுலவி S. அப்துர் ரஜ்ஜாக் ஸாஹிபு அவர்கள்,
K.R.M. மதரஸா, B. கொந்தை, திட்டைச்சேரி

மவுலவி S.R.M. அப்துர் ரஹ்மான் ஸாஹிபு அவர்கள்,
இஸ்மாயீல் பள்ளிவாசல், தென்காசி,

மவுலவி ஐ. அப்துல் வஹ்ஹாப் ஸாஹிபு அவர்கள்,
சக்கராப்பள்ளி, அய்யம்பேட்டை,

மவுலவி முஹம்மது மீறான் ஸாஹிப் அவர்கள்,
சக்கராப்பள்ளி, அய்யம்பேட்டை,

மவுலவி முஹம்மத் ஸயீத் ஸாஹிபு அவர்கள்,
கீரனூர், (பழனி தாலூகா)

மவுலவி முஹம்மத் இஸ்மாயீல் ஸாஹிபு அவர்கள்
பேஷ் இமாம், கீரனூர், (பழனி தாலூகா)

மவுலவி நூர் முஹம்மத் ஸாஹிபு அவர்கள்,
டவுன் காஜியார், கீரனூர், (பழனி தாலூகா)

மவுலவி க. முஹம்மத் அப்துல் கனி ஸாஹிபு அவர்கள்
பெரிச்சிபாளையம், கீரனூர், (பழனி தாலூகா)

மவுலவி மி.மு. முஹம்மத் இப்றாஹீம் ஸாஹிபு அவர்கள்,
பழனி.

ஜனாப் அ. ஹாஜி முஹம்மது மதார் ஸாஹிபு அவர்கள்
மண்டி, செவ்வாப்பேட்டை, (சேலம்)

ஜனாப் மீ.இ. முஹம்மது அப்துல்காதிர்ஸாஹிபு அவர்கள் முஸல்மான் ஆசிரியர், (தென்காசி).

மவுலவி அப்துஸ்ஸமத் ஸாஹிபு அவர்கள் (கதீப்), பாலக்கரை, திருச்சி.

ஜனாப் சைய்யது இப்றாஹீம் ஸாஹிபு அவர்கள், (துபாஷ்), நத்தம்,

மவுலவி கா. முஹம்மத் காஸிம் ஸாஹிபு அவர்கள், லால்குடி'

மவுலவி V.M. அப்துல் லதீப் ஸாஹிபு அவர்கள், பள்ளப்பட்டி, கரூர் தாலூகா.

மவுலவி வா. முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிபு அவர்கள், கொப்பம்பட்டி, (புதுக்கோட்டை).

இவ்வளவு முயற்சிகளுக்குப் பின்னால் திருகுர்ஆனின் முதல் தமிழ் மொழிபெயர்ப்பு, திருச்சி இஸ்லாமிய நூற் பிரசுரச்சங்கத்தாரால் இஸ்லாமியா பிரஸ் பாலக்கரை திருச்சியில் அச்சடிக்கப்பட்டு இரண்டு ரூபாய் விலையில் 1929 இல் வெளியிட்ட பெருமை தர்ஜுமதுல் குர்ஆன் பிஅல்தபில் பயான் எனும் நூலின் ஆசிரியர் மௌலவி ஆ, கா. அப்துல்ஹமீது சாகிபு (பாகவி) அவர்களையே சாரும்.

26—11—1876 இல் சேலம் ஆத்தூரில் பிறந்த இவர் ஹாஜி காதிர் முஹ்யத்தீன் இராவுத்தர் அவர்களின் புதல்வராவார். கிலாபத் இயக்கத்தில் தீவிரப் பங்கெடுத்துக்கொண்டவர். இவரது 'இயற்கைமதம்' என்ற நூலுக்கு தந்தை பெரியார் ஈ. வெ, ரா, அவர்கள் முன்னுரை எழுதியுள்ளார்கள். சிராஜுல்மில்லத் அப்துஸ்ஸமது சாகிபின் தந்தையார்தான் இவர்கள். *

* செ, திவான், விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்' (1994) பக். 181-182.

தனித் தமிழில் பூரண மொழி பெயர்ப்பு

'தர்ஜுமதுல் குர்ஆன் பிஅல்தஃபில்' பயான் திரு குர்ஆனின் பூரணமான மொழிபெயர்ப்பு இனிய எளிய நடையில் என்று அரபி மூலம் இல்லாமல், 746க்கும் அதிக மான பக்கங்களில், பத்து ரூபாய் விலையில், அல்லாமா ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி அவர்களின், 'பாகவி ஸன்ஸ்' நிறுவனத்தாரால் 1961 இல் திருகுர்ஆன் மொழி பெயர்ப்பு மட்டும் தனித் தமிழில் வெளியிடப்பட்டது. பின்னர் அம்முயற்சி கைவிடப்பட்டது.

பிஸ்மில்லாஹ்விற்குப் பொருள் தந்தவர்

''அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனு மாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்'' என்று 'பிஸ் மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்' என்ற அரபிச் சொற் றொடருக்கு நிறை பொருளைத் தந்தவர் அல்லாமா ஆ. கா. அப்துல்ஹமீது பாகவி அவர்கள் ஆவர்.

1929 இல் திருகுர்ஆனின் ஒரு சிறு பகுதியின் முதல் மொழிபெயர்ப்பை தமிழில் வெளியிட்டதற்குப்பின் சமுதா யம் கவலைப்பட்டுக் கண்ணீர் வடிக்கும் வகையில் இஸ்லா மிய நூற்பிரசுரச் சங்கம் செயல் இழந்துவிட்டது.

நாடெங்கும் புனித யாத்திரையை மேற்கொண்டு முக்கியமான எல்லா அரபி மத்ரஸாக்களுக்கும் (கலாசாலை) விஜயம்செய்து பிரதானமான மார்க்க மேதைகளை எல்லாம் கண்டு விவாதித்து மனித முயற்சி யால் செய்யமுடிந்த அளவுக்குப் பிழையில்லாத ஒரு மொழிபெயர்ப்பை முதல் பாகத்திற்குரிய முதல் பதிப்பை 19—2—1929 இல் வெளியிட்டதற்குப்பின் செயல் இழந்து கிடந்த நிலைமைமாறியது.

நிஜாம் அரசரின் நல்லுதவி

1938 இல் தமிழகத்திற்கு விஜயம் செய்த ஞானமேதை ஸூஃபி ஷைகு அப்துல்காதிர் ஹலரத் (ரஹ்) அவர்கள்

மவ்லானா ஆ. கா. அப்துல் ஹமீது ஸாகிபு பாகவி அவர்களை ஹைதராபாத்திற்கு அழைத்தார்கள், நிஜாம் மன்னரின் மாமனாராகிய நவ்வாப் நஸீர் யார்ஜங்பஹாதுருக்கு அறிமுகப்படுத்தினார்கள். நவாப் சாகிபின் பரிந்துரையினால் மொழிபெயர்ப்புப் பணி பூர்த்திசெய்வதற்கான பொருளாதார உதவி நிஜாம் அரசின் மூலம் கிடைத்தது.

அவ்ரங்கஜேப் கால அறக்கட்டளை

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆலம்கீர் அவ்ரங்கஜேப் அவர்கள் தக்காணத்தை ஆண்டுகொண்டிருந்தபோது அவர் குடிமக்களில் ஒருவர், நீர் வீழ்ச்சியிலிருந்து விழும் நீரின் வேகத்தால் சக்கரத்தைச் சுழல வைத்து மாவு அரைக்கும் இயந்திரம் ஒன்றை அந்தக் காலத்தில் நிறுவினார். அவ்ரங்காபாத்திற்குப் பக்கத்தில் உள்ள 'தர்காயெ-பஞ்சக்கி' என்பதுதான் அது. அதன் வருமானம் இஸ்லாமியப் பிரச்சாரத்திற்குச் செலவிடப்பட வேண்டும் என்பதற்காக அதன் உரிமையாளர் ஓர் அறக்கட்டளையை (வக்ஃபு) நிறுவினார். முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு ஹைதராபாத் தனி சமஸ்தானமாக இருந்த நிலையில் அதன் நிர்வாகத்திற்கு உட்பட்ட அந்த அறக்கட்டளை வருமானத்தின் ஒரு பகுதிதான் திருகுர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்புப் பணிக்கு ஒதுக்கப்பட்டது.*

ஹைதராபாத்தில் கிடைத்த அரிய உதவி

ஹைதராபாத்தில் நிஜாம் கூட்டிய தர்பாரில் மௌலானா ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி அவர்களும், அல்லாமா அபுல் அஃலாமவ்தூதீ அவர்களும் சந்தித்துக் கொண்டார்கள்.

மௌலானா பாகவியின் எளிய தோற்றமும் ஆழமான இஸ்லாமிய அறிவும் திருகுர்ஆனைப் பற்றிய தேர்ந்த

* ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி எழுதிய தர்ஜுமதுல் குர்ஆன் நூலின் அறிமுக உரை பக்கம் 14

ஞானமும் மவ்துாதீ அவர்களை வெகுவாகக் கவர்ந்தன. இந்த மொழி பெயர்ப்புப் பணியைத் தொடரவும் முழு ஒத்துழைப்பைச் செய்யவும் அவர்கள் முன்வந்தார்கள்.

காரைக்காலில் அலுவலகம்

ஹைதராபாத்திலிருந்து திரும்பிய ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி அவர்கள் காரைக்காலில் கி. பி. 1940 இல் திருகுர்ஆனின் மொழிபெயர்ப்பிற்கான அலுவலகத்தை அமைத்துக் கொண்டார்கள். இரவும் பகலும் மொழி பெயர்ப்புப்பணி தொடர்ந்தது.

1942 அக்டோபர் 24 ஆம் நாள் மொழிபெயர்ப்புப் பணி பூர்த்தியடைந்தது. அந்த மொழிபெயர்ப்பை பரி சீலித்து வேலூர் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் மத்ரஸா வினர் 9—11—1943 இல் ஒப்புதல் தந்தனர்.

ஏறத்தாழ 70 வயதை அப்போது பெற்றிருந்த ஆ.கா. அப்துல் ஹமீது ஸாஹிபு அவர்கள் பேராவல் கொண்டவர் களாக இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த நேரமாதலால், இரயிலில் பிரயாணம் செய்வதே பெரிய போராட்டமாக இருந்த கால கட்டத்தில் பிரயாணத்தில் குர்ஆனின் மொழி பெயர்ப்பு பிரதியை எங்கேயாவது இழந்து விடுவோமோ என்ற அச்ச உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது. தர்ஜுமாவைக் கையெழுத்திலேயே பல பிரதி கள் எடுக்கச் செய்தார்கள்.

ஒரு பிரதியை வீட்டிலே வைத்துவிட்டு மற்றொரு பிரதியை பிரயாணத்திலே எடுத்துச் செல்ல வைத்துக் கொண்டும், இன்னொரு பிரதியை பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் மத்ரஸாவின் நூலகத்தில் வைக்கச் செய்தார் கள்.

தம்மாலோ தம் குடும்பத்தாலோ இந்தத் தர்ஜுமா பிரசுரிக்கப்பட முடியாமல் ஆகிவிட்டால், (மொழிபெயர்ப்பு)

பாக்கியாத் நூலகத்திலுள்ள கையேட்டுப் பிரதியைக் கொண்டாவது இத்திருப்பணி எதிர்காலத்தில் நிறைவேறக் கூடும் என்பது அவர்களின் உயரிய எண்ணமாக இருந்தது.

புரக்டர் என். எம். ஹனீஃபா

ஆனால் இறைவனின் நாட்டத்தால் கொழும்பு நகரில் வாழ்ந்த வணிகப்பிரமுகரும் வழக்கறிஞருமாகிய புரக்டர் என். எம். ஹனீஃபா அவர்கள் திருகுர்ஆனின் தமிழ் மொழிபெயர்ப்பிற்கான முழுத்தொகையையும் கொடுத்து உதவினார்கள். இவர்கள் மாண்புமிகு இலங்கை அமைச்சராக இருந்த அல்ஹாஜ் எம். ஹெச். எம். முஹம்மது அவர்களின் தந்தையார் ஆவார்.

திருகுர்ஆன் தமிழாக்க நிலையம் (தஃப்தரெ தர்ஜுமதுல்குர்ஆன்)

இலங்கையிலிருந்து திரும்பிய மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது சாகிபு (பாகவி) அவர்கள் கொழும்பு புரக்டர் என். எம். ஹனீஃபா அவர்கள் அளித்த உதவியைக் கொண்டு 114, அங்கப்பநாயக்கன் தெருவில், சென்னையில் திருகுர்ஆனின் தமிழாக்க நிலையத்தை அமைத்தார்.

திருகுர்ஆனின் தமிழ் மொழிபெயர்ப்புப் பணி தொடர்ந்தது

முதல் முழுமையான மொழிபெயர்ப்பு

'தர்ஜுமதுல் குர்ஆன் பிஅல்தபில் பயான்' என்ற திருகுர்ஆனின் தமிழ் மொழிபெயர்ப்பு நூல், மொழிபெயர்ப்பு ஆசிரியர் ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி அவர்களால் முதல் பாகம் முதல் 9 அத்தியாயங்களைக் கொண்ட $10\frac{1}{4}$ ஜுஸ்வுக்களுக்கு வெளிவந்தது. மாட்சிமை தங்கிய நிஜாம் அரசாங்கத்தின் ஆதரவில் மொழி

பெயர்க்கப்பெற்று, தென்னிந்திய உலமாப் பெருமக்கள் அங்கீகரிக்கப்பெற்ற பின்னர் கொழும்பு ஆலி ஜனாப் எம். எம். எம். ஹனீபா புரக்டர்நொத்தாரிஸ் அவர்களின் பொருளுதவியால் 1367 ரமலான் 27 இல் 4—8—1948 இல் அச்சிடப்பட்டு, 1—5—1949 இல் ஹிஜ்ரி 1368 ரஜப் பிறை 2 இல் ரூ. 12 விலையில் வெளி வந்தது. இந்தப் பதிப்பு பெய்னி அன்கோ அச்சகத்திலும் சென்னை டெக்கான் டைம்ஸ் பிரஸிலும் அச்சாகி வெளிவந்தது. இரண்டாவது பாகம் 105 அத்தியாயங்களைக்கொண்ட $19\frac{3}{4}$ ஜுஸ்வுக்கள் உடையது. இது சுதந்திர வீரன் பிரஸிசிலும், டி. வி. ஸி, பிரஸ்சிலும். புரோசிரஸிவ் பிரிண்டர்சிலும் அச்சடிக்கப்பட்டு ரூ. 16 விலையில் 1—5—1949 இல் வெளிவந்தது.

தொடர்ந்து இரண்டாவது பதிப்பு 17—3—1950 இல் வெளிவந்தது. இரு பதிப்புக்கள் வெளிவந்துவிட்ட பிறகும் கூட மௌலானா ஆ.கா. அப்துல்ஹமீது (பாகவி) அவர்கள் 1955 ஜுன் 23 ஆம் தேதி தம் இறுதி மூச்சு ஒடுங்கும்வரை அரபி மூலத்துடன் தம் மொழிபெயர்ப்பை ஓயாமல் ஒத்திட்டுப் பார்த்துச் செப்பனிடும் திருப்பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

உலக முஸ்லிம்லீக்

ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி மறைந்த 25 ஆண்டுகளுக்குப் பிறகு 'ராபிதயெ ஆலெம இஸ்லாமி' உதவியால் 'தர்ஜுமதுல் குர்ஆன்' பதிப்பு வெளிவந்தது.

ஆயங்குடியில் நடைபெற்ற மீலாது விழாக் கூட்டத்தில் மௌலவி மீ. இ. மு. அபுல்ஹசன் ஷாதலி சாகிப் தலைமை தாங்கினார்கள். அதில் கலந்து உரையாற்றிய முஸ்லிம்லீக் தலைவர் ஆ. கா. அ. அப்துஸ்ஸமது அவர்கள் 'ராபிதயெ ஆலெம இஸ்லாமி' நிதி உதவியின்கீழ் அச்சிடப்பெற்ற திருகுர்ஆன் பிரதிகள் ஐயாயிரத்தை

மாநிலமெங்கும் இலவசமாகவே வழங்க இருப்பதாக அறிவித்தார்கள், உடனே மௌலவி மீ. இ. மு. அபுல் ஹசன் ஷாதலி சாஹிப் அவர்கள் எங்கள் நெல்லை மாவட்டத்தில் முதலில் அந்த இனிய விழா நடைபெற வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள்.

தென்காசியில் கூட்டப்பெற்ற திருகுர்ஆன் விசேஷ மாநாட்டில் ஜமாஅத்துல் உலமா சார்பிலும், திருநெல் வேலி ஜில்லா முஸ்லிம்லீக் சார்பிலும் சுமார் 500 பிரதிகள் வரை நெல்லை மாவட்டத்தில் மௌலவிகள், ஹாபிள்கள், மஸ்ஜிதுகள் (பள்ளிவாசல்கள்) தர்ஹாக்கள் ஆகியவற் றிற்கு அன்பளிப்பாகத் தரப்பட்டது,

அவரது புதல்வர் A. H. அஹ்மது இப்ராஹிம், H. M· ஷம்சுத்தீன் சாஹிப் (உமரி) ஆலிம் கவிஞர் மௌலானா மௌலவி G. M. S ஸிராஜ் பாகவி, M. A. M. அஸீஸீர் ரஹ்மான் M. A. B. L., பொருள் அட்டவணை தயாரித்து வழங்கிய சீரிய சிந்தனையாளர் A. K. ரிபாயி B.A., மதுரா நிலையம் ஆப்செட் பிரஸ் ஜனாப் முஹ்யித்தீன் R. J. பிராஸஸ் பிரஸ் நிறுவனத்தார் ஆகியோரின் முயற்சி களினால் அடுத்து வந்த பதிப்புக்களும், அல்ஹாஜ் சிராஜுல்மில்லத் அப்துஸ்ஸமது சாகிப் அவர்களின் முயற்சியால் மற்றொரு பதிப்பும் வெளிவந்தது. தொடர்ந்து அதன் பதிப்புக்கள் வெளிவர இறைவன் அருள்வானாக.

தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

உத்தமபாளையம் மௌலானா மௌலவி S.S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிபு பாகவி அவர்களைக் கொண்டு எழுதுவித்து, தங்களது சொந்தப் பொருள் களைக் கொண்டு ஷாஹீல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில், 20, ஹைரோடு திருவல்லிக்கேணி சென்னை-5 ஹாஜீ M.A. ஷாஹுல் ஹமீது அவர்களால் 'தப்ஸீறுல்

ஹமீத்பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்' என்ற திருகுர்ஆன் தமிழ் விளக்கவுரையை வெளியிடும் பணி 1931ஆம் ஆண்டிலேயே துவங்கப்பட்டது.

அல்ஹாஜ் எம்.ஏ. ஷாஹுல்ஹமீது லெப்பை

திருகுர்ஆனுக்கு தமிழில் விரிவுரை எழுதி வெளியிட வேண்டுமென்ற பெரும் விருப்பத்துடன் இருந்தவர் அல் ஹாஜ் எம்' ஏ ஷாஹுல்ஹமீது லெப்பை ஆவார்கள். இவர்கள் நெல்லை மாவட்டம் மேலப்பாளையத்தைச் சேர்ந்தவர்கள்.

மேலப்பாளையம் முஹம்மது யூசுப் லெப்பைஆலிம்

திருகுர்ஆனுக்கு தமிழில் விளக்கவுரை எழுதிடும் பணியை கல்வத்தாண்டவர்களது பிரதான கலீபா மேலப் பாளையம் ஷைகுனா முஹம்மது யூசுப் லெப்பைஆலிம் ஆரிபு பில்லாஹ் நாயகம் அவர்கள் செய்ய இசைந்தார் கள்.

எவ்வளவு பணச் செலவு வந்தாலும் தமது ஆயுள் காலத்திலேயே ஒரு முழு தப்ஸீரை சுத்தத்தமிழில் வெளி யிட்டுவிட வேண்டும் என்ற துணிவுடன் இதில் ஈடுபட்டு, குர்ஆன் மொழி பெயர்ப்பு அதன் விளக்கஉரை ஆகியவை களைத் தாமே நேரில் படித்துப்பார்த்து அச்சுக்குக் கொடுப் பதுடன் அச்சுப் பிழை பார்க்கும் வேலையையும் எம்.ஏ. சாகுல்ஹமீது லெப்பை அவர்களே கவனித்தார்கள். சில காலம் திருநெல்வேலி பேட்டை அரபி மத்ரஸாவில் பேராசியராகவும் முதல்வராகவும் இருந்து தர்ஸ் (அரபி பாடப் போதனை) நடத்தினார்கள். பிறகு மேலப்பாளை யத்தில் தங்களின் சொந்த மனையை வக்ஃபுசெய்து, அதில் கல்வத்துநாயகம் தைக்காவையும், எஹ்யா மவ்லானா பள்ளிவாசலையும் நிறுவியவர்கள் ஆவார்கள். தனது 73 வது வயதில் ஹிஜ்ரி 1364 ரஜபுமாதம் பிறை 29ல் கி.பி. 1945 ஆம் ஆண்டு இவ்வுலகை விட்டு நீங்கி

னார்கள். அவர்கள் பிறரைப் படிக்கச் சொல்லி கேட்பது கூட கிடையாது. அவர்களாகவே படுத்த படுக்கையாக நோய்வாய்ப் பட்டிருந்த சமயத்திலும்கூட தாமே படித்து பார்த்து சரி செய்துகொள்வார்கள்.

தமது ஆயுள் காலத்திற்குள் இந்தபணியைச் செய்து விட வேண்டுமென்ற தணியாத விருப்பத்தால் உடல் நலத்தை மறந்து இந்தத் திருப்பணியைச் செய்தார்கள்.

எம். ஏ. ஷாகுல் கமீது

முதல் வால்யூம் முதலாவது மன்ஜில் அதாவது ஸீறத்துன்னிஸா முடிய உள்ளதை திருகுர்ஆன் விரிவுரையின் முதல் பாகத்தை 1937 ஆம் ஆண்டு அவர்கள் வெளியிட்டார்கள் முதல் பாகம் வெளி வந்த போது எம்.ஏ. ஷாகுல் கமீது அவர்கள் எழுதிய முகவுரை இதோ,

''திருகுர்ஆனுக்கு சுத்தத் தமிழில் மொழிபெயர்ப்பும் வியாக்யான உரையும் வெளிவர வேண்டுமென்ற ஆவல் எமக்கு வெகுகாலமாக இருந்து வந்தும் சமயமும் சௌகரியமும் வாய்க்காத காரணத்தாலும் அதனை வெளியிடுவதிலுள்ள சிரமத்தையும், பொறுப்பையும் நினைத்துப் பயந்ததாலும், எமது அவா கிரியாம்சையில் நடைபெறாமலே இருந்தது. ஆயினும் எங்கள் கல்வத்தாண்டவர்களது பிரதான கலீபாவும் காமிலும் முகம்மிலுமான ஹைகுனா முஹம்மது யூஸுபு லெப்பை ஆலிம் ஆரிபுல்லாஹ் நாயகம் அவர்கள் இவ்விஷயமாக எமக்குப் பேராதரவு புரிந்து தாமே மொழி பெயர்ப்புச் செய்து வியாக்யானமும் எழுதித் தருவதாகக் கூறியதின் பேரில் நமது நாட்டம் நிறைவேறுங்காலம் வந்ததென்று இறைவனுக்கு நன்றி செலுத்தி இக்காரியத்தைக் கிரியாம்சையில் செய்ய எல்லாம் வல்ல ஏகநாயகனின் திருவருளை முன்னிட்டு முயன்றேன். ஆனால் எங்கள் கலீபா நாயகம் ஆரிபுல்லாஹ் அவர்கள் ஆரம்பித்து 7, 8, பாரம்வரை (ஏறத்தாழ 60 பக்கங்கள்) வியாக்யானமும் எழுதினார்கள். பிறகு அவர்

களுக்கேற்பட்ட சில வசதிக்குறைவுகளால் இப் புனித (புனித) காரியம் உத்தேசித்த அளவிற்கு விரைவில் செய்து முடிக்க இயலாமலிருந்தது. ஆகவே கலீபா நாயகம் அவர்களது கட்டளைப்படி இக்காரியத்தைச் செய்வதற்கு வேறு ஒருவரது துணை தேவையாக இருந்தசமயம், உத்தம பாளையம் மௌலவி S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாகவி அவர்களை இறைவன் நமக்குத் துணைவராகத் தந்தான்.

மௌலவி சாஹிப் அவர்களை எங்கள் கலீபா நாயகம் ஆரிபுபில்லாஹ் அவர்கள் நேரில் கண்டு பேசி திருகுர் ஆனை மொழிபெயர்க்கவும் வியாக்யானம் எழுதவும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளைப் பற்றித் தெரிவித்தவுடன் அவர்களைக் கொண்டு இவ்வேலையைப் பூர்த்தி செய்து கொள்ளும்படி எமக்குக் கட்டளையிட்டார்கள். கலீபா நாயகம் அவர்கள் கட்டளைக்கேற்ப மௌலவி S.S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாகவி அவர்கள் தம்மாலானவரை இக்காரியத்தைச் செய்து தந்ததின்பேரில் உங்களுக்கு இவ்வியாக்யான உரையை யான்சமர்ப்பிக்க முடிந்தது.''

1937இல் 791 பக்கங்களில் வெளியான இந்நூலின் மொழிபெயர்ப்பும் வியாக்யானமும் சுன்னத்து வல் ஜமாஅத்தைச் சேர்ந்த அல்இமாமுல் ஆலிமுல் பாஜில் குத்துபுஸ்ஜமான் மௌலானா அஷ்ஷெய்கு இஸ்மாயீல் ஹக்கிய்யில் பருஸிய்யி குத்திஸஸிர்ருஹு அவர்களால் எழுதப்பட்ட நூஹுல்பயான் எனும் அறபித் தப்ஸீரை முதல் நூலாகக் கொண்டு, முற்றிலும் அதனைத் தழுவியே எழுதப்பட்டது.

எம். எஸ். அப்துல் குத்தூஸ்
எம். எஸ். காஜா முகைதீன்

'தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்' என்ற திருகுர்ஆனின் விளக்கவுரையை தமிழில் மொழி

பெயர்த்து 1937 இல் முதல் பாகத்தை ஹாஜி M.A.சாகுல் ஹமீது அவர்கள் வெளியிட்டார்கள். அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கியதற்குப் பின்னர் அவரது புதல்வர்களும் சென்னை திருவல்லிக்கேணி M. A. சாகுல் ஹமீது & சன்ஸ் நிறுவனத்தின் பங்குதாரர்களுமாகிய எம். எஸ். அப்துல்குத்தூஸ், எம். எஸ். காஜா முகைதீன் இருவரும் தங்களது தந்தையார் விட்டுச்சென்ற திருப்பணியைத் தொடர்ந்து செய்தார்கள்.

S. S. முஹம்மது அப்துல்காதிர்

இறைவனின் புனிதத் திருமறைக்கு ஏழு பாகங்களாக முப்பது ஆண்டுகள் பெரும் முயற்சிசெய்து தமிழாக்கத்தையும் விரிவுரையையும் வழங்கிய இந்தப்பெருமகனார் உத்தமபாளையத்தைச் சேர்ந்தவர்கள். ‘தப்ஸீறுல் ஹமீத்பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்’ என்ற சிறப்புமிக்க திருகுர்ஆன் விரிவுரையை எழுதித் தந்ததோடு ஆதார பூர்வமான புகாரீ ஷரிபையும் முழுவிளக்கத்துடன் மூன்று பாகங்களாக எழுதி வெளியிட்டார்கள். மற்றொரு ஹதீஸ் தொகுப்பான ‘முஸ்லிம் ஷரிபையும்’ இரண்டு பாகங்களாக வெளியிட்டார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சரித்திரத்தை ‘முஹம்மதுர் ரசூலுல்லாஹ்’ என்ற தலைப்பில் மூன்று பாகங்களாகவும், ‘ஹனபி’ மதஹப்களின் பிக்ஹு சட்டங்களையும் மொழிபெயர்த்தார்கள். இவர்களது அரிய முயற்சிகளை மார்க்க அறிஞர்கள் அனைவரும் ஒப்புக் கொள்வர்.

மௌலவி டி. எப். ரஹ்மத்துல்லா

உத்தமபாளையம் மௌலானா மௌலவி S. S. முஹம்மது அப்துல்காதிர் சாகிபு பாகவி அவர்கள் கூத்தாநல்லூர் சாந்திபிரகடன சபையின் சார்பில் 1934 இல் ‘திருமறை - தமிழுரை’ என்ற தலைப்பில் சில குறிப்புரைகளுடன் திருகுர்ஆனை மொழிபெயர்த்தார்கள்.

1931ஆம் ஆண்டில் எம்.ஏ. சாகுல்ஹமீது அவர்களின் அரிய முயற்சியினால் துவங்கப்பட்ட திருகுர்ஆன் மொழி பெயர்ப்புடன்கூடிய விரிவுரையை 'தப்ஸீறுல் ஹமீத்பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்' என்ற தலைப்பில் 1937 ஆம் ஆண்டு முதல் பாகத்தை S. S. முஹம்மது அப்துல்காதிர் நிறைவுசெய்து வெளியிட்டார்கள்.

திருவண்ணாமலையைச் சேர்ந்த மௌலவி டி. எப். ரஹ்மத்துல்லா அவர்கள் ஆரம்பத்தில் இதற்கான புரூப் திருத்தும் பணியினைச் செய்துவந்தார்கள். இடையில் சிறிது தொய்விற்குப்பின், மூன்றாம் பாகத்திலிருந்து ஏழாம் பாகம் வெளிவரும்வரை உடனிருந்து அதற்கான பிழை திருத்தவும், புரூப் பார்த்திடவும், ஒத்துப் பார்த்திடவும் ஆகிய பணிகளைச் செய்தவர் மௌலவி டி. எப். ரஹ்மத்துல்லா பாகவி ஆவார்கள். அவர்களின் சேவையை நாம் மறந்துவிட முடியாது. திருவண்ணாமலையில் 'பாகவி' என்ற மாத இதழை சில காலம் நடத்திவந்த அன்னார், சில நூல்களையும் வெளியிட்டிருக்கிறார்கள். மௌலவி S. S. முஹம்மது அப்துல்காதிர் அவர்களால் திருகுர்ஆனின் உரை தமிழில் எழுதப்பட்டு, கி- பி- 1940 இல் இரண்டாம் பாகம் வெளிவந்தது. இரண்டாம் உலகப் போரின் விளைவாக ஏற்பட்ட இன்னல்களாலும் காகிதப் பற்றாக்குறையாலும், கி. பி. 1950 இல் தான் மூன்றாம் பாகம் வெளிவந்தது.

முதற்பாகம் வெளிவந்து ஏறத்தாழ பதின்மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டதால், அந்தப் பிரதிகள் கிடைக்கவில்லையென்றும், இரண்டாம், மூன்றாம் பாகங்களைப் படித்து முடித்துவிட்டு நான்காம் பாகத்திற்குச் செல்வதற்குமுன்னர் முதல் பாகத்தையும் வெளியிடவேண்டுமென்று பலரும் வற்புறுத்தினார்கள். எனவே மீண்டும்

1954 இல் அதன் முதல் பாகத்தின் மறுபதிப்பு வெளி வந்தது. தொடர்ந்து 1956 இல் நான்காம் பாகமும், 1958 இல் ஐந்தாம் பாகமும், 1959 இல் ஆறாம் பாகமும், 1961 இல் ஏழாம் பாகமும், பல ஆயிரம் பக்கங்களில் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு கிடைத்தது.

அன்வாறுல் குர்ஆன் கூத்தாநல்லூர் ஆதம் ட்ரஸ்ட்

காயிதேமில்லத் இஸ்மாயீல்சாஹிப் மாவட்டம், ஹாஜி க. ப. மு. முஹம்மது அபூபக்கர், ஹாஜி க. சி. ஆதம் சாஹிப், ம பக்கீர் முஹம்மது, மௌலானா ச. அ முஹம்மது அலி பாகவி போன்ற பெருமக்களின் உறுதுணையோடு அமையப்பெற்றது கூத்தாநல்லூர் அரபிக் கலாசாலை அங்கு கூத்தாநல்லூர் ஆதம் ட்ரஸ்ட் என்று ஒன்றை ஏற்படுத்தி திருகுர்ஆனை மொழி பெயர்த்திடும் பணியைத் துவக்கிட முடிவு செய்தனர்.

கூத்தா நல்லூர் மதரஸா மன்பவுல் உலா அரபிக்கலா சாலையின் தலைமைப் பேராசிரியர் நெல்லை மாவட்டம் தென்காசியைச் சேர்ந்த அல்ஹாஜ் மௌலவி ஹாபிள் E. M. அப்துர்ரஹ்மான் சாஹிப் (நூரிய்யி, பாஜில் பாகவி) அவர்களிடம் இது பற்றிப் பேசிய பொழுது, இப்பொறுப்பை மகிழ்ச்சியுடன் ஏற்று அன்வாறுல் குர்ஆன் என்ற அரபி மூலத்துடன் கூடிய மொழி பெயர்ப்பும் விரிவுரையும் ஒருங்கே அடங்கிய நூலை உருவாக்கித்தர முன் வந்தார் கள்.

அப்துர் ரஹ்மான் சாஹிப்

முதலில் வெளி வந்த அம்மஜாஸ்உ விரிவுரையில், அந்த நூலின் முன்னுரையில் அதன் ஆசிரியர் மௌலவி அப்துர் ரஹ்மான்சாஹிப் சொல்கிறார்கள்:

"அம்மஜாஸ்உவையாவது மொழி பெயர்த்துத் தேவை யான விளக்க உரைகளையும் எழுதி வெளியிட ஆவன

முயற்சி எடுக்கும் படி தமியேனை இந்நிலைக்கு கொண்டு வர சகல வகையான பிரயத்தனமும் எடுத்துக் கொண்ட எனது மதிப்பிற்குரிய பெரிய தந்தையாரும் முன் 'முஸல் மான்' பத்திராதிபரும் பற்பல மார்க்க சமூக சீர்த்திருத்த நூற்களின் கர்த்தாவும் பெரியாருமான கனம் தென்காசி மௌலானா அல்ஹாஜ் மீ. இ. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் அவர்கள் தூண்டிக் கொண்டே வந்தார்கள்.'' அத்தோடு கூத்தாநல்லூர் ஆதம் ட்ரஸ்ட்டார் உறுதுணை யாக இருந்தார்கள், மொழி பெயர்ப்புப் பணி துவங்கியது.

இருபத்தியொரு தொகுதிகளாக இறைவேத மொழிபெயர்ப்புகள்

திருகுர்ஆனின் 30-வது பாகத்திற்கான அரபி மூலத் துடன் கூடிய மொழி பெயர்ப்பும், விரிவுரையும் ஒருங்கே அடங்கிய நூல் 1955 இல் வெளிவந்தது. அதுபோல 29வது பாகத்திற்கு 1957லும், 28வது பாகத்திற்கு 1960 லும், 27, 26, வது பாகங்களுக்கு 1961லும், 'அன்வாறுல் குர்ஆன்' வெளிவந்தது.

1966இல் ஸூரத்துல் பகராவிற்குரிய தமிழ் மொழி பெயர்ப்பு வெளிவந்தது, 1970இல் ஸூரத்துன்னிஸாவிற் குரிய தமிழ் மொழி பெயர்ப்பு வெளிவந்தது, 1976 பிப்ரவரியில் ஸூரத்துல் மாயிதாவிற்குரிய தமிழ் மொழி பெயர்ப்பு வெளிவந்தது, 1976 டிசம்பரில் ஸூரத்துல் அன் ஆமிற்குரிய தமிழ் மொழிபெயர்ப்பு வெளிவந்தது, 1977 செப்டம்பரில் ஸூரத்துல் அஃராப்விற்குரிய தமிழ் மொழி பெயர்ப்பு வெளிவந்தது.

1979 செப்டம்பரில் ஸூரத்துல் அன்பால் வத் தௌபா விற்குரிய தமிழ் மொழிபெயர்ப்பு வெளிவந்தது. அதே ஆண்டில் ஸூரத்துல் யூனூஸ், ஸூரத்துல் ஹூதுவிற் குரிய மொழிபெயர்ப்பு வெளிவந்தது.

1980இல் ஸூரத்து யூஸுஃப் ஸூரத்துர் ரஃது, ஸூரத்து இப்ராஹீம், ஸூரத்துல் ஹிஜ்ரு ஆகியவற்றிற்குரிய தமிழ் மொழிபெயர்ப்பும் விரிவுரையும் வெளிவந்தது.

1984 இல் ஸூரத்துல்கஹ்பு, ஸூ ர த் து ம ர் ய ம், ஸூரத்து தாஹா, ஸூரத்துல் அன்பியா, ஸூரத்துல் ஹஜ் ஆகியவற்றிற்கு தமிழ் மொழி பெயர்ப்பும் விரிவுரையும் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து ஸூரத்துல் முஃமினூன், ஸூரத்துல் நூர், ஸூரத்துல் புர்கான் ஆகியவற்றிற்கான தமிழ் மொழிபெயர்ப்பும் விரிவுரையும் வெளிவந்தது.

1986இல் ஸூரத்துஷ் ஷுஅரா, ஸூரத்துல் நம்ல், ஸூரத்துல் கஸஸ், ஸூரத்துல் அன்கபூதிற்கான தமிழ் மொழிபெயர்ப்பும் விரிவுரையும் வெளிவந்தது.

1987இல் ஸூரத்துர்ரூம், ஸூரத்து லுக்மான், ஸூரத்துல் ஸஜ்தா, ஸூரத்துல் அஹ்ஜாப்பிற்கான தமிழ் மொழிபெயர்ப்பும், விரிவுரையும் வெளிவந்தது.

1989 ஜனவரியில் ஸூரத்து ஸபா, ஸூரத்து பாத்திர் ஸூரத்து யாசீன், ஸூரத்துஸ ஸாப்பாத்விற்கான தமிழ் மொழிபெயர்ப்பும் விரிவுரையும் வெளிவந்தது.

1989இல் ஸூரத்து ஹாமீம் ஸஜ்தா, ஸூரத்துஷ் ஷூரா, ஸூரத்துஸ்ஸுக்கும் ஸூரத்துத் துகான், ஸூரத்துல் ஜாதியா, ஆகியவற்றிற்கான தமிழ் மொழி பெயர்ப்பும் விரிவுரையும் வெளிவந்தது.

மேதைகள் போற்றிய விளக்கவுரை

திருகுர்ஆன், திருநபிஹதீதுகள், ஆகியவற்றின் மொழி பெயர்ப்பாசிரியரும், நபிபெருமானர் (ஸல்) அவர்களின் சரிதை, மற்றும் பல நூற்களின் ஆசிரியருமான உத்தமபாளையம் மௌலானா மௌலவி அல்ஹாஜ்

S. S. முகமது அப்துல்காதிர் சாகிப் (பாகவி) அவர்கள் அன்வாறுல் குர்ஆன் அரபிமூலமும், மொழிபெயர்ப்பும் விரிவுரையும் ஒருங்கே அடங்கிய தமிழ் நூலுக்கு முன்னுரை அளித்தார்கள்.

உத்தமபாளையம் P. S. K. முஹம்மதுஇப்ராஹிம் (பாகவி) அவர்கள் அன்வாறுல் குர்ஆனுக்கு சிறப்பான மதிப்புரை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

மௌலவி மீ. இ. மு. அபுல்ஹசன் ஷாதலி சாகிப்

திருநெல்வேலி ஜங்ஷன் முன்னேற்றம் புக்டிப்போ அதிபரும் பன்னூல் ஆசிரியருமான மௌலானா மௌலவி மீ.இ.மு. அபுல்ஹஸன்ஷாதலிஸாகிப் (நூரிய்யி பாஜில் பாகவி) அவர்கள் அனைத்து மொழி பெயர்ப்பு பாகங்களுக்கும் மனமுவந்து மதிப்புரை அளித்ததோடு, நூல் சிறப்புற அமைய வேண்டிய பல உதவிகளைச்செய்தும் தந்தார்கள். அவர்களின் முன்னேற்றம் பிரஸில் தான் மொழி பெயர்ப்புடன் கூடிய திருகுர்ஆன் விரிவுரை 21 பாகங்களும் அச்சிடப்பட்டது.

அல்ஹாஜ் மு.ந. முகம்மதுசாகிபு

கி.பி. 1955 இல் முதல் முதல் வெளிவந்த தப்ஸீர் அன்வாறுல் குர்ஆன் அம்மஜுஸ்வு பாகம் உயர்ந்த முறையில் அமைய திருநபிசரித்திரம் நூலாசிரியர் தென்காசி அல்ஹாஜ் மு. ந. முகம்மதுசாகிபு தங்களது முழுத்திறமையையும் நல்ல ஆலோசனைகளையும் கூறி சிறப்பான முறையில் நூல் அமையப் பெரிதும் உதவினார்கள்.

காயிதேமில்லத்தின் சிறப்புரை

திருநெல்வேலி பேட்டையில் தோன்றிய இந்திய யூனியன் முஸ்லிம்லீகின் மாபெரும் தலைவர் காயிதேமில்லத் அல்ஹாஜ் M. முகம்மது இஸ்மாயீல் சாகிப்

11—8—1955 இல் அன்வாறுல் குர்ஆன் அம்மஜுஃஸ் விற்கு சிறப்பானதொரு அணிந்துரை வழங்கி கூத்தாநல் லூரில் நடைபெற்ற மாபெரும் வெளியீட்டு விழாவிலும் பங்கெடுத்துச் சிறப்பித்தார்கள்.

கூத்தாநல்லூர் ஆதம் டிரஸ்ட்

அல்ஹாஜ் ஆதம் N. முஹம்மது இப்ராகீம் (J. P.), அல்ஹாஜ் ஆதம் N. அப்துஸ்ஸலாம் ஆகியோர் தங்கள் சொந்தப் பொருளில் இருந்து இந்த மொழி பெயர்ப்பு நூல்கள் வெளி வருவதற்குரிய ஏற்பாட்டை ‘கூத்தா நல்லூர் ஆதம் டிரஸ்ட்’ என்ற அமைப்பினை ஏற்படுத்தி திறம்பட வெளியிடத்துணிந்து, வெளியிட்டனர் சிறப்பாக ஹாஜி N. அப்துஸ்ஸலாம் அவர்களின் உழைப்பை தமிழ் உலகம் என்றும் மறக்கக் கூடாது; மறக்கவும் முடியாது.

அல்ஹாஜ் V. M. A. பாச்சா ஜான்

திருச்சிராப் பள்ளியில், 3. ஏ. எடத்தெரு வருசை ராவுத்தர் பள்ளி வாசல் அருகில் திருகுர்ஆன் மன்றம் என்ற அமைப்பில் இருந்து மதுரை அல்ஹாஜ் V. M. A. பாச்சா ஜான் அவர்களைக் கொண்டு மொழி பெயர்க்கப்பட்ட திருகுர்ஆன் தமிழ் உரை இரண்டு பாகங் களாக வெளி வந்திருக்கிறது.

1938 ஆம் வருடத்தில் மதுரையில் ஆரம்பிக்கப்பட்டு, திருகுர்ஆன் தமிழுரையை 14—1—1955 இல் மதுரை லோகமான்யா அச்சகத்தில் அச்சிட்டு அல்ஹாஜ் V.M A. பாச்சா ஜான் வெளியிட்டார்.

3—2—1967 இல் திருச்சிராப்பள்ளி ஜோதி அச்சகத் தார் திருகுர்ஆன் தமிழுரை இரண்டாம் பாகத்தை அச்சடிக்க ஆரம்பித்து, 20—5—1968 இல் இரண்டாம் பாகமும் பூர்த்தியாகி வெளிவந்தது.

இந்த இரண்டாம் பாகத்திற்குரிய விஷயங்களை மேலப் பாளையம் மௌலவி ஹாபிஸ் வெள்ளை கலீபா சையது அஹமத் சுல்தான் அலிஷாஹ் ரிபாஈ, அவர்கள் திருத்திக் கொடுத்ததாக ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

K M. காதிர் மொஹ்தீன் M. A., ஷாஜகான் பத்திரிக்கை ஆசிரியரும் பிஹிஷ்தீஜேவர் (சுவர்க்க நகைகள்) என்ற நூலின் மொழி பெயர்ப்பாசிரியருமான டி, எஸ். ஏ. ரசூல், முஹம்மது வருசை ராவுத்தர், M. S. A. முஹம்மது யூசுப், H. முஹம்மத் உஸ்மான், அல்ஹாஜ் V. M. சம்சுதீன், ஹவில்தார் முஹம்மத் உசேன், திருவையாறு P. V. அப்துல் கபூர், கடைய நல்லூர் மௌலவி ஹாபிஸ் ஷேக் உதுமான் சாயபு, மதுரை கா, சையத் அப்துல் கபூர், கவிஞர் மதனீ. கதமல் உதுமான் சாயபு போன்ற பெருமக்களின் உறு துணையோடு திருகுர்ஆன் தமிழுரை வெளிவந்தது.

அரபி மூலமின்றி இது வெளிவந்ததால் தமிழகமக்க ளிடையே வரவேற்பை பெற இயலாது போயிற்று.

B. A. கலீலுர் ரஹ்மான் ரியாஜி

பேட்டை ரியாலுல் ஜினான் அரபிக் கல்லூரியில் சில காலம் முதல்வராக இருந்த திருநெல்வேலி பேட்டை மௌலானா மௌலவி B. A. கலீலுர்ரஹ்மான் ரியாஜி அவர்கள், ஸூரத்துல் பாத்திஹாவிற்கு விரிவுரையை தமிழில் 1961 அக்டோபர் 'ரஹ்மத்' இதழில் இருந்து எழுதிவந்தார்கள். அதனை 1979 இல் 'உம்முல்குர்ஆன்' என்ற சிறு நூலாக வெளியிட்டார்கள்.

தொழுகையில் தவருமல் ஓதப்பெறும் இவ்வத்தியா யத்தின் பொருளையும் கருத்துரைகளையும் உணர்ந்து தொழுதால் அந்தத் தொழுகை எத்துனை ஜீவ சக்தி மிக்கதாய் அமையும் என்பதனைக்கருத்தில் கொண்டு

இதற்கு மிகப்பெரும் குர்ஆன் விரிவுரைகளான தப்சீர்கபீர், தப்சீர் பைலாவீ, ரூஹுல்பயான், தப்சீர் இப்னுகதீர், ஆகியவற்றிலிருந்து கருத்துகளைச் சேகரித்து 'ரஹ்மத்' மாத இதழின் ஆரம்பகாலப் பிரதிகளில் இருந்து தொடர்ந்து எழுதிவந்ததை தூத்துக்குடி A. M. அஹ்மது கம்பெனி உரிமையாளர் A M. சம்சுத்தீன் BA அவர்களின் உதவியைக் கொண்டு நூலாக்கினார்கள்.

சூரத்துந்நூர் உரையை ரஹ்மத் இதழில் 1975 இல் இருந்து தொடர்ந்து எழுதிவந்தார்கள். அற்புதமான அந்த உரை விளக்கம் நூல் வடிவம் பெறவில்லை. விரைவில் நூல்வடிவம் பெற இருப்பதாக அவரது புதல்வர் மௌலவி B. A. K. அப்துர் ரஹீம் அவர்கள் தெரிவித் தார்கள். மௌலவி கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்கள் திருகுர்ஆனின் சிறிய சிறிய அத்தியாயங்களுக்கும் ரஹ்மத் இதழில் அவ்வப்போது உரை எழுதியுள்ளார்கள்.

தஃப்சீர் ஜவாஹிருல் குர்ஆன்

அல்பாகியாத்துஸ்ஸாலிஹாத் அரபிக் கல்லூரியை கி.பி. 1866 ஆம் ஆண்டு வாக்கில் ஷம்ஷுல் உலமா அல்ஹாஜ் மௌலானா ஷாஹ்அப்துல் வஹ்ஹாப்ஸாகிப் காதிரி (ரஹ்) அவர்கள் துவக்கினார்கள். பாபாமிய்யான் சாகிப் அவர்கள் 5000 ரூபாய் அந்தக் காலத்தில் அதற்கு வழங்கி அந்த கலாசாலையைத் திறம்பட நடத்த பெரிதும் உதவினார்கள். ஹிஜ்ரி 1305 இல் முதன் முதலாக இங்கு சனது (பட்டங்கள்) வழங்கப்பட்டன.

இந்த அரபிக் கலாசாலையிலிருந்து திருகுர்ஆனின் விளக்கவுரையுடன் கூடிய முதல் தொகுதி அண்மையில் தமிழில் வெளியாகியது.

'தஃப்சீர் ஜவாஹிருல் குர்ஆன்' என்ற அந்த விளக்க வுரையை முதன் முதலில் மொழி பெயர்த்த பெருமை நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த கடையநல்லூர்

மௌலானா மௌலவி V. U. A. முஹம்மது யூசுஃப் அன்சாரிஹளரத் அவர்களையே சாரும்.

V. U. A. முஹம்மது யூசுஃப் அன்சாரி ஹளரத்

திருகுர் ஆனின் தமிழ் மொழி பெயர்ப்பை 22 பாகங்களுக்கு மேல் எழுதிவைத்திருந்த கடைய நல்லூர் மௌலானா V. U. A. முஹம்மது யூசுஃப் அன்சாரி ஹளரத் அவர்களிடமிருந்து அந்த மொழி பெயர்ப்பு உரைகளை வேலூர் பாகியாத் அரபிக் கலாசாலையின் ஆசிரியர்கள் பெற்றுச்சென்றனர். மௌலானா H. கமாலுத்தீன் பாஜில் பாகவி, பேராசிரியர் மௌலானா P.S.P. ஜைனுல்ஆபிதீன்பாகவி, அல்ஹாஜ் S.M. அப்துல் ஜமீல் சாஹிப், அதிரை அஹ்மது B.A., மௌலானா கிஃபாயத்துல்லாஹ் (பாகவி) ஈரோடு ஆத்தூர் மௌலானா N.P. சக்தகத்துல்லாஹ் பாஜில் பாகவி, தென்காசி மௌலானா முஹம்மது முஹ்யித்தீன் பாகவி மௌலானா நிஸார் அஹ்மது ஃபிதத்வி ஆலிம்சாகிப், பேராசிரியர் மௌலானா அ. முஹம்மது கான் பாகவி, அல்ஹாஜ் மலக்கு முஹம்மது ஹாஷிம் ஆகியோரின் அரும் உழைப்பால் இப்போது தஃப்சீர் ஜவாஹிருல் குர்ஆன் விளக்கவுரை தமிழில் வெளி வந்துள்ளது.

திருகுர்ஆனின் அல்பகரா அத்தியாயம் முடிய உள்ள பகுதிக்கு விளக்கவுரை அல் பாகியாத்துஸ்ஸாலிஹாத் அரபிக்கல்லூரியின் சார்பில் ஹிஜ்ரி 1412 ஷஅபான் பிறை 19 இல் (24—2—1992) வெளி வந்துள்ளது. மேலும் தொடர்ந்து மொழி பெயர்ப்புகள் தமிழில் திருமறைக்கு வருமென்று நம்புகின்றேன்; வரவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

கடையநல்லூர் V. U. A. முஹம்மது யூசுஃஅன்சாரி ஹளரத் அவர்கள் ‘ஜமாஅத்துல் உலமா’ மாத இதழில் ‘ஸூரத்துல் ஹுஜ்ராத்’ அத்தியாயத்தின் மொழி பெயர்ப்பையும் விளக்க உரைகளையும் தொடர்ந்து எழுதினார்கள். அதுவும் புத்தகமாக வரவேண்டிய அற்புதமான தொகுப்பு.

மௌலவி மீ.இ.மு. அபுல் ஹசன் ஷாதலி சாகிப் அவர்களும் ''உலகத் திருமறையின் உயர்மிகு போதனைகள்'' என்ற நூலையும், வழி காட்டும் குர்ஆன்' என்ற நூலையும் எழுதி திருகுர்ஆனின் சில அத்தியாயங்களுக்கு தமிழில் விளக்கவுரையும் எழுதி இருக்கிறார்கள்; அன்னுர் அவர்களின் சிறப்பான சேவையினை தமிழகம் மறந்திட முடியாது. ஸிரத்துல்யாஸீனுக்கு P.S.K. மௌலானா அவர்களின் தமிழ் மொழி பெயர்ப்பும் வந்துள்ளது.

P.S.K. முஹம்மது இப்ராகிம்

பெங்களூரிலிருந்து மௌலானா மௌலவி P. S. K. முஹம்மது இப்ராகீம் அவர்கள் திருகுர்ஆனின் சூரத்துல் பகராவுக்கு மொழி பெயர்ப்பையும் விளக்கத்தையும் தந்தார்கள்.

'ஷமாயிலேதிர்மதீ' என்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அங்க அடையாள விளக்கங்கள் குறித்தும், 'ஸஹாபாப் பெருமக்களின் சரிதை' குறித்தும் இவர்கள் சிறப்பான நூலைத் தந்துள்ளார்கள்,

முஹம்மது ஜான்டிரஸ்ட்

இங்கிலாந்து நாட்டில் வோகிங் முஸ்லிம் இயக்கத்தில் 1946 ஆம் ஆண்டு டாக்டர் S. முஹம்மது ஜான் அவர்கள் சேர்ந்தார்கள். பைபிள் 692 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதைப் போலவே திருகுர்ஆனையும் உலக மொழிகளில் வெளியிடவேண்டும் என்பதே அவரது ஆசையாக இருந்துவந்தது.

1979 இல் பர்மிய மொழியில், மொழிபெயர்த்து திருகுர்ஆனை வெளியிட்டார்கள்.

திருகுர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததில் சிறப்பான மொழிபெயர்ப்பாக அல்லாமா யூஸுஃப்

அலீ அவர்களின் மொழிபெயர்ப்பு போற்றப்படுகிறது. மக்கமா நகரில் அமைந்துள்ள உலக முஸ்லிம்லீக்கான ராபிதா அங்கீகரித்துள்ள இம்மொழிபெயர்ப்பை அடிப்படையாகக்கொண்டு தமிழாக்கம் செய்யப்பட்டது தான் 'திருகுர்ஆன் மஜீத்'. இது ஹாஜி முஹம்மது ஜான் லிட்டரேரி, அறக்கட்டளையின் சார்பில் வெளியிடப் பட்டது.

1983 ஆம் ஆண்டு 5000 பிரதிகள் அச்சாயின. 1993 ஆம் ஆண்டு 20,000 பிரதிகள் அச்சாகி இலட்சம் பிரதிகளைத் தொட இருக்கும் இந்த மொழிபெயர்ப்பில் முதலில் இருவர் ஈடுபட்டிருந்தனர். கம்பம் அஃப்ஜலுல் உலமா மவ்லவி ஸதக்கதுல்லாஹ் ஆலிம் பாகவி அவர்கள் இப்பணியை மேற்கொண்டார்கள். அது,

நெல்லை மாவட்டம் செங்கோட்டையைச் சேர்ந்த மௌலானா எம். அப்துல் வஹ்ஹாப் சாஹிப் M.A., B.Th. அவர்களின் பெரும் உழைப்பால் திறம்பட வெளிவந் துள்ளது.

டாக்டர் S. முஹம்மது ஜான் அவர்களின் மறைவிற் குப்பின்னர் டாக்டர் ஹமீதுல்லா ஜீலானி அவர்கள் இந்தப் பணியினை திறம்படச் செய்து வருகிறார்கள்.

ஹாஜி முஹம்மது ஜான் லிட்டரரி சாரிடபிள் டிரஸ்ட் பர்மா ஹவுஸ், 97 பவளக்காரத் தெரு, சென்னை-600 001 என்ற முகவரியில் தற்போது செயல்பட்டுவருகிறது. இந்த நிறுவனத்தார், குர்ஆன் மஜீத் திருகுர்ஆன் மூலமும் தமிழ் உரையும்' என்ற தனது நூலை இலாப நோக்கின்றி வெளியிட்டுவருவது பாராட்டுக்குரிய செய லாகும்.

குர்ஆன் தர்ஸமா

திருகுர்ஆனை தமிழில் தர்ஸமா மொழிபெயர்த்த மௌலானா M. அப்துல்வஹ்ஹாப் M. A., B. Th.,

மௌலானா K. A. நிஜாமுத்தீன் மன்பயீ, மௌலானா ஹாபிள் R. K. அப்துல்காதிர் பாகவி ஆகியோர்கூட்டாகப் பணியாற்றி இறைவனின் திருவேதத்தை தமிழில் மொழி பெயர்த்து ஹிஜ்ரி 1412 ரமலான் மாதத்தில் (1992 மார்ச்) வெளியிட்டனர். இந்த தர்ஸமாவில் மௌலானா அப்துல் வஹ்ஹாப் அவர்கள் சுமார் 500 குறிப்புரைகள் எழுதி யிருக்கிறார்கள்.

தித்திக்கும் திருமறை

மௌலானா M. அப்துல்வஹ்ஹாப், எம்.ஏ.,பி.டி.எச் அவர்கள் 'பிறை' என்ற இதழை நடத்தியவர்கள். 'தித்திக்கும் திருமறை' என்று திருகுர்ஆனின் திருவசனங் களை மூன்று பாகங்களாக மொழிபெயர்த்து வெளியிட் டார்கள். முதல் பாகம் 1967 ஆகஸ்ட் மாதத்தில் வெளியாயிற்று. இது பல பதிப்புக்களைக் கண்டது. இரண்டாவது பாகமும் மூன்றாவது பாகமும் அதனைத் தொடர்ந்து வெளியாயிற்று. அவர்களே பின்னாளில் திருகுர்ஆன் முழுமைக்கும் அரபி மூலத்துடன் மொழிபெயர்ப்பையும் வெளியிட்டுள்ளார்கள்.

இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட்.

முஸ்லிம் வெல்ஃபேர் சொஸைட்டி (ராம்பூர்) 1966 இல் திருகுர்ஆனின் ஹிந்தி மொழி பெயர்ப்பை வெளி யிட்டது. பிற பிரதேச மொழிகளிலும் திருகுர்ஆனின் பெயர்ப்புகள் வர வேண்டு மென்று ஜமாத்தே இஸ்லாமி ஹிந்தின் மத்தியச் செயற்குழு முடிவெடுத்தது. அதன் தலைவர் மௌலானா அபுல்லைஸ் இஸ்லாஹிரத்வி அவர்கள் தென்னாட்டில் இது குறித்தநிலை என்ன என் பதனை அறிய மௌலானா அபூஸலீம் அப்துல்ஹை அவர்களை அனுப்பி சுற்றுப்பயணம் செய்து அறிக்கை தரச் சொன்னார்கள்.

அவர் மலையாளத்தில் இரு பதிப்புகள் வெளிவந்து திருகுர்ஆன் தாராளமாக கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

கர்நாடக, ஆந்திர மாநில மொழிகளில் பதிப்புக்கள் இல்லை. அந்த இரு மொழிகளிலும் மொழியாக்கம் உடனே கொண்டுவர வேண்டும். தமிழகத்தில் ஒரு பதிப்பு மட்டும் வெளி வந்துள்ளது. அதுவும் இடையீடு இல்லாமல் கிடைக் கிறது என்று சொல்வதற்கில்லை' என அந்த அறிக்கையில் தெரிவித்தார்கள். இந்த அறிக்கையின் விளைவாக மொழி யாக்கம் செய்யும் பணிகள் ஆங்காங்கே தொடங்கின. அதன் அடிப்படையில் பெரம்பூர் நெடுஞ்சாலை ஐ.எப்.டி. காம் ளக்ஸ் சென்னையில் செயல்பட்டு வரும் 'இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்' என்ற அமைப்பு 1978 இல் தமிழில் திருகுர்ஆனை மொழி பெயர்க்கும் பணியைத் துவங்கியது.

திருகுர்ஆன் மூலம் தமிழாக்க விளக்கவுரை

மௌலானா சையித் அபுல் அஃலா மௌதூதி அவர் களின் 'தஃப்ஹீமுல் குர்ஆன்' என்ற உர்தூ உரை மூலத்திலிருந்து, திருகுர்ஆனை தமிழாக்கம் செய்திட மௌலவி A. குத்புத்தீன் அஹ்மத் பாகவி, அஃப்ஸலுல் உலமா மௌலவி R. அப்துர் ரவூஃப் பாகவி ஆகியோர் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினர். அந்தப் பணி யினை மௌலவி M.S. ஸெய்யித் முஹம்மத் அன்வரி அவர்களும், அஃப்ஸலுல் உலமா மௌலவி K S. மஸ்தான் அலீ பாகவி உமரீ அவர்களும், M.A. ஜமீல் அஹ்மத் அவர்களும் மேலாய்வாளர்களாக இருந்து நிறைவு செய்தனர். மொழி இயல் மேலாய்வாளர்களாயிருந்து கவியோகி மு. முஹம்மது மூஸா அவர்களும், சமரசம் துணையாசிரியர் சிராஜுல் ஹஸன் அவர்களும் பல்வேறு அம்சங்களில் விமர்சனக் கண்ணோட்டமிட்டு இப்பணியை முடித்தார்கள்.

இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட்டின் அப்போதையத் தலைவர் இஃஜாஜ் அஹ்மத் அஸ்லம் அவர்களின் பெரு முயற்சியோடு இறைவனின் துணையோடு 1 முதல் 16 அத்தியாயங்களின் அல்ஃபாத்திஹா முதல் அந்நஹ்ல்

முடிய மொழி பெயர்ப்பும் விளக்கமும் முதல் தொகுதியாக 1989 அக்டோபரில் வெளிவந்தது.

1978 இல் தொடங்கிய இப்பணியினை நிறைவு செய்ய ஹிந்துஸ்தான் ஆப்செட் நிறுவனத்தார் மொழி பெயர்ப்பு நூலை அச்சிட்டு பதினேழாம் அத்தியாயம் பனூ இஸ்ராயீல் முதல் 114 வது அத்தியாயமான அந்நாஸ் வரை இரண்டாம் பாகமாக வெளி வந்தது. இஸ்லாமிய நிறுவனடிரஸ்டின் தலைவர் A. அப்துர் ரகீப் இதற்கான பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார்கள்.

இனிய தமிழில் இஸ்லாமிய திருமறை

கவியரசர் கண்ணதாசன் திருகுர்ஆனுக்கு உரை எழுதத்துணிந்தார். ஒரு சில பாகங்களுக்கு அவரது பெயரிலே உரை வந்தது. மாநில ஜமாத்துல் உலமா சார்பில் அப்போது அதன் செயலாளராக இருந்த பேட்டை B. A. மௌலானா மௌலவி கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்களும் மற்றும் உலமாக்களும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்; தந்திகளும் கடிதங்களும் கணக்கின்றிச் சென்றன. உடனே திருகுர்ஆனுக்கு சுயமாக தாம் உரை எழுதுவதை கண்ணதாசன் நிறுத்தினார்.

திருமறையின் தோற்றுவாய்

மௌலானா அபுல்கலாம் ஆஸாத் 1918 இல் ரான்ச்சீயில் இஷாத்தொழுகை முடித்து திரும்பும் போது, எல்லைப் புறத்திலிருந்து கால் நடையாக வந்த ஒருவர் 'அல்ஹிலால்,' 'அல்பலாக்' பத்திரிகைகளில் ஒவ்வொரு பக்கமும் நான் வாசித்திருக்கிறேன் குர்ஆனில் சில விளக்கங்களைத் தங்களிடம் தெளிவு படுத்திக் கொள்ளவந்தேன்'' என்று சொன்னார். சில நாட்கள் அங்கேயே தங்கினார் அவருடைய பயணத்திற்கான செலவை நான் கொடுப்பேன் என்று நினைத்து அவர் என்னிடம் சொல்லாமல் சென்றுவிட்டார் அவர் பெயர் நினைவில்லை, 'அவருக்கு இந்த நூல்

உரிமை என்ற'' முன்னுரையுடன் 12 டிசம்பர் 1931 இல் கல்கத்தாவிலிருந்து மௌலானா அபுல் கலாம் ஆஸாத் வெளியிட்ட நூலை, 'திருமறையின் தோற்றுவாய்' என்று தமிழாக்கம் செய்து 1965 இல் திருச்சி ஜமால் முஹம்மத் கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர் ஸையித் இப்ராஹீம் எம் ஏ.,எல் டி. தமிழில் மொழிபெயர்த்து தனது வளர்மதி பதிப்பகத்தின் வாயிலாக வெளியிட்டார்.

சீரிய சிந்தனையாளர் ஏ.கே. ரிபாயி

கடந்த சில ஆண்டுகளாக வாழ்வின் எல்லாப் பிரச்சினைகள் குறித்து அற்புதமாக 'குர்ஆனின் குரல், மாத இதழில் 'திருகுர்ஆன் சிந்தனைகள்' என்ற தலைப்பில் தென்னிந்திய இஷா அத்துல் இஸ்லாம் சபைத் தலைவர் பன்னூல் ஆசிரியர் ஏ.கே. ரிபாயி அவர்கள் தொடர்ந்து எழுதி வருகிறார்கள். அதன் முதல் பாகம் தனி நூலாக வெளிவந்துள்ளது.

திருகுர்ஆன் விளக்கம்

கடையநல்லூர் பேட்டை ஜலாலியா மத்ரஸா முதல்வர் மௌலவி ஹாபிஸ் S. லியாகத்அலிமன்பஈ அவர்கள் சிராஜ் என்ற இதழில் 'திருகுர்ஆன் விளக்கம்' என்னும் தலைப்பில் திருமறையின் வசனங்களுக்கு தமிழில் உரை எழுதிவருகிறார்.

திருகுர்ஆன் தோற்றுவாய்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் (துவங்குகிறேன்).

1. அனைத்துப் புகழும், அகிலங்கள் அனைத்தையும் படைத்து வளர்த்துப் பரிபாலித்துவரும் அல்லாஹ்வுக்கே உரித்தாகும்.

2. (அவன்) அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்.

3. (அவனே நியாயத்) தீர்ப்பு நாளின் அதிபதி (யும் ஆவான்).

4. (இறைவா) உன்னையே நாங்கள் வணங்கு கிறோம். உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்.

5. நீ எங்களை நேர்வழியில் நடத்துவாயாக!

6. (அது) நீ எவர்களுக்கு அருள்புரிந்தாயோ அவ் வழி.

7. (அது) உன் கோபத்துக்கு உள்ளானவர்களோ, நெறி தவறியவர்களோ சென்ற வழியல்ல. ஆமீன். (எங்களின் வேண்டுதலை ஏற்றருள்வாயாக.)

பாத்திஹா அத்தியாயத்தின் தமிழ் உச்சரிப்பு

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம். அல்ஹம்துலில் லாஹி ரப்பில் ஆலமின். அர்ரஹ்மானிர் ரஹீம், மாலிக்கி யவ்மித்தீன், இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தஈன். இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம்; ஸிராத்தல்லதீன அன் அம்த்த அலைஹிம், கை(ங)ரில் மக்ளூபி அலைஹிம் வலல் ளால்லீன். (ஆமீன்)

(இது திருகுர்ஆனின் முதல் அத்தியாயம். தொழுகை உட்பட எல்லா சந்தர்ப்பங்களிலும் மெதுவாகவோ, சப்த மிட்டோ இதை ஓதித்தான் ஆரம்பம் செய்யப்படும். பொது நிகழ்ச்சிகள் அனைத்தும் இதை ஓதியே துவக்கப்படும். இருபத்துநான்கு மணி நேரங்களிலும் உலக முஸ்லிம்கள் அனைவரின் நாவுகளும் இதையே ஓதிக்கொண்டிருக்கும். இதன் முதல் வாக்கியத்தையே எல்லா சந்தர்ப்பங்களிலும் மொழிந்து, எல்லாம் வல்ல இறைவனுக்கு முஸ்லிம்கள் நன்றிசெலுத்திக் கொண்டே இருப்பர். அனைத்து மதத் தினர்கள் கூடும் எல்லாக் கூட்டங்களிலும், பள்ளிக் கூடங்கள் அனைத்திலும் ஜாதி மத பேதமின்றி ஓதுவதற்கு மிகபொருத்தமானதே இது. அரபியை முறைப்படி ஓதி அதன் பொருளையும் மொழிவது அனைவருக்கும் விளங்கிக் கொள்ள உதவியாக இருக்கும். மனிதனின் தேவைகள் அனைத்தையும் எல்லாம் வல்ல இறைவனிடம் விண்ணப்பம்

செய்வதற்கும் அவனே கற்றுத்தந்த அற்புதமான பிரார்த்தனையே (துஆவே)இது. கூட்டுப் பிரார்த்தனைகளுக்கு மிகபொருத்தமானது. இறை நம்பிக்கையுள்ள எல்லா மதத்தினரும் ஏற்றுக்கொள்ளத்தக்கது. நாமும் எல்லா நிலைகளிலும் இதை ஓதிப் பிரார்த்திப்போமாக. அவனருளைப் பெறுவோமாக.*

சர்ச்சைக்குரிய விஷயத்திற்கு சத்தியத்திருமறை தரும் பதில்

இன்று நாட்டில் சர்ச்சைக்குரிய விஷயமாகக் கருதப்படவும், சர்ச்சைக்குரிய விஷயமாக ஆக்கப்படவும் செய்யப்படுகின்ற பிரச்சினை ஒன்றிற்கு திருகுர்ஆன் தெளிவாக விளக்கம் தருகிறது.

ஆலயங்களை இடிக்காதீர்கள்

''மனிதர்களில் சிலரை, சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுத்து நிறுத்தாவிட்டால், கிறிஸ்தவர்களின் ஆலயங்களும் (துறவிகளின்) மடங்களும், யூதர்களுடைய ஆலயங்களும், அல்லாஹ்வுடைய திருநாமம் அதிகமாக நினைவு கொள்ளப்படும் மஸ்ஜித்களும் (பள்ளிவாசல்களும்) தகர்க்கப்பட்டே போயிருக்கும். அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கிறானோ, அவனுக்கு, நிச்சயமாக அல்லாஹ்வும் உதவி செய்கிறான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க பலவானும் யாவரையும் மிகைத்தோனுமாயிருக்கிறான்.''

[அல்குர்ஆன் 22:40

(எந்த மார்க்கத்தின் ஆலயங்களையும் துறவிகள் தங்கி இறைவனை சதா நினைவு கூர்ந்து கொண்டிருக்கும் மடங்களையும் எவரும் இடிக்கவோ கேவலப்படுத்தவோ கூடாது என்பதை இவ்வாக்கியத்தின் மூலம் அல்லாஹ் தெளிவாக எச்சரிக்கிறான். அமைதிக்கு முயற்சி செய்யுங்கள்) **

* அபுல்ஹஸன் ஷாதலி ஸாஹிப் 'உலகத் திருமறையின் உயர்மிகு போதனைகள்'. பக்கம் 17-19

** முற்கூறிய நூல். பக்கம்: 52

முடிவுரை

உலகின் உயர்மறையாம் தித்திக்கும் திருகுர்ஆன், தமிழகத்தில் ஆயிரக்கணக்கான அரபிக் கலா சாலைகளில். எண்ணற்ற மௌலானா மௌலவிகளால், உலமாப் பெரு மக்களால் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு தினமும் போதிக்கப்பட்டு வருகிறது. அரபிக்கலா சாலைகளில் போற்றுதலுக்குரிய போதஞசிரியர்களால் தாங்களாகவே, தயாரித்திடும் பல்வேறு உரைகள் அங்கே போதிக்கப்படு கின்றன. கண்ணியத்திற்குரிய அந்த உலமாப் பெருமக் களின் உரைகளைப்பற்றியோ, அவர்களைப்பற்றியோ இதில் குறிப்பிடப்படவில்லை.

திருகுர்ஆனின் தமிழ் விரிவுரைகள் ஆனாலும், தமிழ் மொழி பெயர்ப்புகள் ஆனாலும் அவைகள் தமிழுலகத் திற்கு கிடைத்திட, இறைவன் வழி காட்டிய போது, திருநெல்வேலி பேட்டை, மேலப்பாளையம், தென்காசி, கடையநல்லூர், செங்கோட்டை நகரங் களைச்சேர்ந்த உலமாப்பெருமக்களாலும், பெரியவர் களாலும் துவக்கஞ் செய்யப்பட்டு, துரிதமாக நடத்தப் பட்டிருப்பதை கடந்த நூறாண்டு கால சரித்திரத்தில் தெளிவாகத் தெரிய முடிகிறது அந்த வகையில், அவை தமிழாக்கப்பட்ட வரலாற்றையும் செங்கோட்டையைச் சேர்ந்த என்னைக் கொண்டு எனக்குத் தெரிந்த வரை, கிடைத்த தகவல்களை கொண்டு, திருகுர்ஆன் தமிழுரை கள் பற்றியும், அதனைத் தந்திட்ட அறிஞர்கள் பற்றியும் எழுதிட இறைவன் எனக்கு அருள் புரிந்தான்.

மாற்றாரும் மறை வழி போற்றிட மறையினை நமக்கு தமிழில் தந்திட்ட மாண்பாளர்களின் தூயபணியைப் போற்றுவோம்! அகிலம் வியக்க அல்லாஹ்வின் கட்டளை களை ஏற்போம்! அண்ணல் முஹம்மது (ஸல்) காட்டிய அரிய பாதையில் அனைவரும் செல்வோம்!

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி-6

ரஷ்ய மொழியில் திருகுர்ஆன்

1878, 1963 ஆகிய வருடங்களில் ரஷ்ய மொழியில் திருகுர்ஆன் மொழி பெயர்ப்பு வெளி வந்தது. அவற்றின் மொழி பெயர்ப்பு திருப்திகரமாக இல்லையெனக் கூறப் பட்டு வந்தது தற்போது ரஷ்ய அறிவியல் அகாடமியின் பேராசிரியர் முஹம்மது நூரி உஸ்மான் அவர்கள் இருபத்தைந்து வருடக் கடின உழைப்பிற்குப் பின்னர், திருகுர்ஆனுக்கு ரஷ்ய மொழி பெயர்ப்பினை மாஸ்கோவில் வெளியிட்டுள்ளார்.

ஹவ்ஸா மொழியில் திருகுர்ஆன்

மேற்கு ஆப்பிரிக்காவிலும், நைஜீரியாவிலும் உள்ள பெரும்பாலான மக்கள் பேசும் மொழியான ஹவ்ஸா மொழியில், 1982 இல் திருகுர்ஆனின் மொழி பெயர்ப்பு வெளி வந்தது.

வடநைஜீரியாவின் பிரதம காஜியாகப் பணியாற்றி வந்த ஜனுப் அபுபக்கர் முஹம்மது தமி என்ற இஸ்லாமிய மார்க்க ஞானியார் இந்த மொழி பெயர்ப்பைச் செய்தார் கள். ஆனால் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஷேக் அப்துல்லாஹ் இப்னு முஹம்மத் ஃபூடியோ என்ற மார்க்க அறிஞர் ஏற்கனவே ஹவ்ஸா மொழியில் திருகுர்ஆனை மொழி பெயர்ப்புச் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அமெரிக்காவில் புதிய மொழிபெயர்ப்பு

ஆங்கில மொழியில் மட்டும் இருபது மொழி பெயர்ப்புக் களைப் பெற்று வெளி வந்துள்ள இறைவனின் திருவேத மான திருகுர்ஆனை மொழி பெயர்த்து அமெரிக்க மொழியில் **டாக்டர் தாமஸ் பாலண்டைன் இர்விங்** என்பவர் பல்லாண்டு கால முயற்சிக்குப் பின்னர் வெளியிட்டார்.

இணைப்பு II அரபுச் சொல் — தமிழ் விளக்கம்

பக்கம்			
9	ஹலரத்	—	பெரியார்
	ஜிப்ரயீல்	—	அமரர்களின் தலைவர், இறையறிவிப்பு களைக் கொண்டுவரும் அமரர் (மலக்)
10	ஸஹாபா	—	தோழர்
13	இக்ரஃ	—	ஓதுக
45	உலமா	—	அறிஞர்கள்
50	தப்ஸீரெ அர்விஜாஸ்உ அம்ம	—	திருகுர்ஆனின் முப்பதாம்பாக விளங்கும் சூரா
51	ஜவாஹிருல் புர்கான்	—	திருகுர்ஆனின் ரத்தினங்கள்
57	பாகியாத்துஸ்ஸாலிஹாத்	—	வேலூரிலுள்ள இஸ்லாமியக் கலைக் களஞ்சியமான அரபிக்கல்லூரியின் பெயர்
58	தர்ஜுமதுல் குர்ஆன்பி அல்தபில் பயான்	—	நுணுக்கமான விரிவுரைகள் அடங்கிய குர்ஆன் மொழிபெயர்ப்பு
61	ஸூரத்துல் பகரா	—	திருகுர்ஆனின் இரண்டாம் அத்தியாயம் (ரிஷபம்-பசு)
62	மௌலவி	—	பட்டம்பெற்ற மார்க்க அறிஞர்கள்
78	புகாரி ஷரீப்	—	ஆதாரப்பூர்வமான நாயகத் தொகுப்பு நூல் களில் ஹதீஸ்கள் முதல் நூல்
	ஹதீஸ்	—	நாயகத் திருமொழிகள்
85	ஸூரத்துல்பாத்திஹா	—	திருகுர்ஆனின் முதல் அத்தியாயம் (ஏழுவாக்கியங்கள் கொண்ட சூரா)
89	தர்ஜுமா	—	மொழிபெயர்ப்பு
	தப்ஸீர்	—	விளக்கஉரை

நன்றி

'திருகுர்ஆன்; தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்' நூலுக்கு அணிந்துரை வழங்கிய மறுமலர்ச்சி தி.மு. கழகத்தின் பொதுச்செயலாளர் சிறுபான்மை மக்களின் காவல் அரண் திருமிகு. **வை.கோ.** அவர்களுக்கும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் பொதுச் செயலாளரும், தமிழ் மாநிலத் தலைவருமான சிராஜுல் மில்லத் ஏ. கே. ஏ. அப்துஸ்ஸமது M. A. அவர்களுக்கும், சீரிய சிந்தனையாளர் ஏ. கே. ரிபாயி Ex.MP. அவர்களுக்கும், மௌலவி மீ.இ.மு. அபுல் ஹஸன் ஷாதலி ஸாஹிப் நூரிய்யி பாஜில் பாகவி அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

'இந்நூல் வெளிவர உதவிய அச்சன்புதூர் அண்ணன் M.M. அசன் மரைக்காயர் அவர்களுக்கும் காயல்பட்டினம் எல். கே. எஸ். செய்யதகம்மது அவர்களுக்கும், நாவலாசிரியர் தோப்பில் முஹம்மது மீரான் அவர்களுக்கும் நூலை காயல்பட்டினத்தில் வெளியிட ஏற்பாடு செய்த சிதம்பரனார் மாவட்டச் செயலாளர் வக்கீல் அ. செங்குட்டுவன் ஆருயிர் சகோதரர் காயல் அமானுல்லா, அண்ணன் குலசை முத்தையா (செயற்குழு உறுப்பினர்) மாமா ஆ. கருப்பசாமி பாண்டியன் மற்றும் முன்னணியினருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செ. திவான்

செ. திவான் எழுதிய நூல்கள்

வெளிவந்தவை

* தக்கலை ஞானமாமேதை பீர்முகம்மது (ரஹ்) சரித்திரமும் & ஞானப் பாடல்களும்
* விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்
* திருகுர்ஆன் : தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்

வெளிவர இருப்பவை

* வரலாற்றின் வெளிச்சத்தில் மாமன்னர் ஔரங்கஜேப்
* வீரத் தலைவர் வ. உ. சி.
* சிவாஜியும், அப்ஸல்கானும்
* திலகரும், முஸ்லிம்களும்
* கோவில் பூனைகள்
* மாவீரர் மருதநாயகம் கான் சாகிப்
* பழம் பாடல்களில் பாண்டியரின் புதிய சரிதை
* விடுதலைப் போரில் தீவிரவாதம்
* சுதந்திரப் போரில் முஸ்லிம்கள்

சுஹைனா பதிப்பகம்

106 - எப்-5, திருவனந்தபுரம் சாலை

பாளையங்கோட்டை - 627 002

தொலைபேசி : 72665

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி-627 006.